205

# விவேக போதினி.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

தொகுதி 1 } 1909-ஆ ஜனவரி மீ { பகுதி 7

ஸநாதனதர்மத்தைப்பற்றிய

## லௌகிக வைதிக அபிப்பிராயங்கள்

## HISTORICAL AND ORTHODOX VIEWS ABOUT SANATHANA DHARMA

முன்சொன்ன மானியர் வில்லியம்ஸ் என்பவர் நமது மதத்தைப்பற்றி எழுதும்பொழுது, "எல்லா மதங்களிலிருக்கும் ஒவ்வொரு முக்கியமான விஷயங்களையும் ஸநாதனதர்ம மானது தன்னுட் சேர்த்துக்கொண்டது" என்று சொல்லி இருக்கிறார். இதைப்பார்த்தால் நமது மதம் தன்னிடத்தில் இல்லாமல் ஸகல மதங்களிலிருந்தும் புதிதாக விஷயங்களைக் கடன் வாங்கிக்கொண்டது என்பதாகத் தோற்றும். வேதாகம புராணங்களை நன்றாக வாசித்தும், இப்பொழுது நமது மதம் எங்கும் பரவி விருத்திக்கு வருவதை நோக்கியும் உள்ள, ஒருவனுக்கு, வேறு எவ்விதமான கலைஞானங்களின் விஷயம் எப்படி இருந்தபோதிலும், மத விஷயத்தில் காணப்படும் பேதங்கள் எல்லாம் நமது மதத்தில் தாமாகவே அப்போதைக்கப் போது முன் காலங்களிலேயே வெளிவந்தவை என்பது நன்றாக விளங்கும். இங்கு சொல்ல வேண்டிய விஷயம் என்னவென்றால், நமது மதத்தைப்பற்றி இரண்டுவித அபிப்பிராயங்கள் இருக்கின்றன. அவையாவன (1) இப்பொழுது நாகரீகமடைந்த துரைத்தனத்தார் வைத்துக்கொண்டிருக்கும் அபிப்பிராயமாகிய லௌகிக அபிப்பிராயம்; (2) நமது மதத்தைப் பின்பற்றும் மஹா பண்டிதர்கள் அபிப்பிராயமாகிய வைதீக அபிப்பிராயம், ஆகிய இவைகளே. இவைகளை முறையே நன்றாக விவரிப்போம்.

லௌகிக அபிப்பிராயத்தின் கொள்கையாவது முதலில் எல்லாம் தாழ்ந்தநிலையில் (அறியாமையில்) இருந்தே வரவர விருத்தியடைந்து உயர்ந்தநிலைக்கு வந்திருக்கவேண்டும் என்பதே. உலகத்தில் காணப்படுகிற விசித்திர நிலைகளிலிருந்து இந்த மாதிரியாய் துரைத்தனத்தார் ஊகித்து, இந்தக்கொள்கையை ஸநாதனதர்ம விஷயங்களுடன் பொருத்திப் பார்த்தார்கள். உடனே அவர்கள் நமதுமதவிஷயங்களைப்பற்றி பின் வருமாறு விஸ்தாரம் செய்தார்கள். "பிரபஞ்சத்திலிருக்கும் சில தோற்றம் பயங்கரமாக வாவது, உபயோககரமாகவாவது இருப்பதால், அவைகளையே கடவுளென ஹிந்துக்கள் முதலில் ஆராதித்தார்கள் என்றும், அவர்களில் சிற்சிலர் தமக்கு போஷணை முதலியவைகள் செய்து தமக்கு உபகாரமாக இருந்து இறந்து

போன மூதாதைகளைத் தெய்வமெனக் கொண்டாடி வந்தார்கள் என்றும், பின்பு தாங்கள் சுகமடைய யாகம் முதலியகர்மங்களை இந்தக் கடவுள் உத்தேசமாகச் செய்தார்கள் என்றும், பின் இந்நிலையே பதிந்து புத்திகெட்டிருக்கும் பொழுது, புத்தர் வந்து ஜீவகாருண்யம் முக்கியமானதென்று உபதேசித்தார் என்றும், பின் ஸனாதனதர்மம் இதைத் தன்னுள் அடக்கிக் கொண்டு புத்தமதத்தை நிர்மூலமாக்கி விட்டதென்றும், அதன்பின்பு விக்கிரஹ ஆராதனையில் ஹிந்துக்கள் அழுந்தி கெட்டுப்போகும் தருணத்தில் மகம்மதிய மதத்தின் சிறப்பாலும் கிறிஸ்தவமதத்தின் சிறப்பாலும் அதன் உபயோகமற்ற நிலையை அறிந்து தெளிந்து மேலான மதபாகங்களை விருத்திசெய்து இம்மதங்களையும் உள்ளடக்கிக் கொண்டார்கள் என்றும், இதுபோல வரவர இதரமதங்களுடைய கொள்கைகளை உள்ளடக்கியதினாலேயே ஸனாதனதர்மம் சிறந்ததாயிற்று'' என்றும் இவர்கள் சொல்லுகிறார்கள்.

இவ்வாறு வெளிஜாதியார் நமது மதத்தை தணிக்க எண்ணுவதற்கு, நமது மதத்தில் காணப்படும் விழுங்கும் சக்தியே காரணம். சிலர் இந்த சக்தியின் உண்மையான நிலையை அறியாது முற்கூறியவ்வாறு சொல்லியிருக்கலாம், வேறு சிலர், நமது மதத்தின் மேன்மையைக் காணப்பொருக்காது இவ்வாறு கூறியிருக்கலாம். நமதுமதம் இவ்வாறு மற்றையமதங்களை விழுங்கிவிடுகின்றது என்பது நாம் முன் ஸஞ்சிகையில் எழுதியிருக்கும் ஸனாதன தர்மத்தின் சிறப்பு என்ற வியாஸத்தை வாசித்தவர்களுக்குத் தெரிந்திருக்கும். இந்த உண்மை உணராது நமது மதத்தினுடைய கௌரவத்தைக் குறைக்க வேண்டுமென்றே இதர தேசத்தார் அநேகர்முயல்கிறார்கள். அவர்கள் எழுதும் புஸ்தகங்களி லிருப்பவைகளை நாம், தீரவிசாரியாமல், வேதவாக்கியமாக உடனே நம்பி விடக்கூடாது. அவர்கள் தமது புத்தகங்களில், வேதம், உபநிஷத்து, இராமாயணம் மஹாபாரதம் முதலிய சிறந்த கிரந்தங்கள் கொஞ்ச நாள்களுக்கு முன் கி. பி. இல்தான் எழுதி இருக்கவேண்டும் என்றும் அவைகளில் மிகத் தந்திரமுள்ள பிராமணர்கள் கிறிஸ்து மதம் முதலிய இதர மதக்கொள்கைளை அடக்கி, அவைகள் தமது மதத்தில் வெகு காலமாய் இருப்பனவாகத் தோன்றும்படி செய்து விட்டார்கள் என்றும் வாய்கூசாது சொல்லுகிறார்கள். இதுவே லௌகிகக்கொள்கை.

வைதீகக்கொள்கையிலோ லௌகிகர் சொல்லுகிற முதல் என்பதேயில்லை. எவ்வளவுகாலத்திற்கு முன்பு பார்த்தாலும், நல்லவர்களும் கெட்டவர்களும், புல்லறிவாளரும் பேரறிவாளரும் இருந்தே இருக்கிறார்கள். இராமர், பீஷ்மர், தருமபுத்திரர் முதலிய மஹான்கள் இருந்தகாலத்திலும் இராவணன், துரியோதனன் கர்ணன் முதலான துர்புத்திகளும் இருந்தே இருக்கிறார்கள். ஆதலால் லௌகிகர் போல மதவிஷயங்களில் தாழ்ந்த பாகங்கள் முன்னேயும் வரவர மேலான பாகங்கள் பின்னேயும் வெளிவந்தனவென்று நமது பண்டிதர்கள் அங்கீகரிக்க இடமே இல்லை. ஆதலால் அவர்கள், இக்கல்பத்தின் சிருஷ்டி ஆரம்பத்தில், கடவுளிடத்து, விதையுள் மரம்போல், அடங்கியிருந்த வேதம் தனது விசித்திர பாகங்களோடு வெளிவந்ததென்றும், வேதத்திலடங்கிய அநேக மதங்கள் வெளிவருவதற்குக்காரணம், தாம் விருத்தியடையவேண்டும் என்று பலரும் தம் மனோதர்மத்திற்கு ஏற்பப் பாடுபட்டதே என்றும், ஆதலால் ஸனாதனதர்மத்தின் பாகங்களில் தாழ்ந்ததுதான் முதலில் வெளிவந்தது, பின்பு தான் மேலானபாகம் வெளிவந்தது என்று சொல்ல இடமில்லை என்றும், சிறந்தபாகங்களை ஜனங்கள் மறந்த காலத்தில் ஞாபகப்படுத்துவதற்காகக் கடவுளே அவதாரம் செய்கிறார் என்றும், அவர்கள் ஸித்தாந்தம் செய்கிறார்கள். ஆகையால் புதிதாய் புத்தர் போன்ற யார் வந்தாலும் சரி, வேதத்திலடங்கிய விஷயங்களைவிடப் புதிய மதவிஷயங்களைச் சொல்லவே முடியாதென்பது அவரது கொள்கை. ஆதலால் ஸனாதன தர்மம் அநாதியாக இப்பொழுதிருக்கிறது போல் இருந்ததென்றும், அதில் அநேக ரிஷிகள் அநேகபாகங்களை வற்புறுத்தினார்களே ஒழிய ஒன்றை

யும் சிருஷ்டித்துவிடவில்லை என்றும், இனிமேல் மதவிஷயத்தில் நமது மதத்தில் இல்லாத புதிய நிலையை ஒருவராலும் சிருஷ்டிக்க முடியாதென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள்.

இந்த மாதிரி சொல்வதில், லௌகீகர்கள் நமதுவேதம் முதலியவைகள் சுமார் 3000 வருஷங்களுக்கு முன்னால்தான் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று மூடத்தனமாய் வற்புறுத்துவதுபோல், இக்காலத்தில் காணப்படுகின்ற பௌதிக விஷயங்களான தந்தி, ரயில், டிராம் வண்டி ஆகிய இவைகளும் இவைபோன்றவையும் முன்பே இருந்தனவாக வேதத்தில் சொல்லி இருக்கிறதென்றும் அதைப்பார்த்து இக்காலத்தவர்கள் அவைகளை உண்டாக்கினார்கள் என்றும் சில பண்டிதர்கள் மனம்போன போக்கே சொல்லிவிடுகிறார்கள்.

இப்பொழுது காட்டிய குற்றங்களுக்கு உட்படாமல் நமது மதத்தை நாம் தெளிவாய் அறியவேண்டும். எப்படியெனில் வேதம் வெளியானபின்பு அவரவர் தத்தமக்குத்தகுந்த பாகங்களை எடுத்துக்கொண்டு அநுஷ்டிக்க ஆரம்பித்தார்கள். அவ்வேதமும் அநுஷ்டானமும் சேர்ந்து ஸனாதன தர்மமாய் விட்டன. இந்த மதம் லௌகீகர் சொல்லுவதுபோல் கொஞ்சகாலத்திற்கு முன் உண்டானதல்ல. அப்படி ஆயினும், துரைத்தனத்தார் சரித்திரங்கள் சொல்ல ஆரம்பிக்கும் காலத்திற்கு, அநேக காலம் முன்புதான் இந்த மதம் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் சில பண்டிதர்கள் பிரகிருதி விஷயங்கள் உட்பட வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன, என்பது அவ்வளவு பொருந்தாது. மதவிஷயங்கள் யாவும்முன்னமே வேதத்தில் இருந்தன என்பது பொருந்தும். ஆகலால் நாம் ஸனாதன தர்மத்தை அல்லது இதர மதத்தை நோக்கும் கால், அநாவசியமாய் வேதம் முதலிய மத புஸ்தகங்கள் எப்பொழுது எழுதப்பட்டனவென்றும், எதைப்பார்த்து உண்டாக்கப்பட்டனவென்றும் வீண் விசாரணை செய்யாமல் அவைகளிலடங்கிய பாகங்களுள் எது நமக்கு ஒத்ததோ அதைப் பின்பற்றி மற்றைப்பாகங்களைப் பின் பற்றுவோரை நிந்தியாது, நமது கர்மமே கண்ணாக இருந்து மேலான மோக்ஷ பதவியை அடைய முயலவேண்டும்.

ஏ. எஸ். கஸ்தூரிரங்கன், B. A., L. T.

## ஸ்ரீமான் பி. ஆர். ராஜம் அய்யர் அவர்கள்

## B. R. RAJAM AIYAR AVARGAL, B. A.



ஸ்ரீமத்ஸத்குரு

சாந்தானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள்

இராஜம் அய்யர் குரு

சுருதிக் கர்த்தம் பொருளென்னும்
அவையும் சொல்லாய் முடிந்திடுமால்
சுருதிக் கர்த்தம் பொருளாகில்
தூயகுருவும் வேண்டுவதில்
சுருதிக் கர்த்தம் பொருளல்ல
என்று துணிந்து மாணா நீ
சுருதி சொல்லும் பொருளதனைச்
சட்டிக் காட்ட வறிவாயே.

—சிதம்பரஸ்வாமிகள்

## II. உபதேசம் பெற்ற சருக்கம்

THE INITIATION

மனிதன், அவன் ஏற்றத்தாழ்வு என்ற நியாய ஸம்பிரம்ம வாதினியில் வெளியானதும் அதை அநேகர் வாசித்து ஆனந்தித்தனர். அக்காலத்தில் மைலாப்பூரில் மதவிஷயங்களில் மிகுந்த பிரீதி இருந்த பிரபுக்கள் சிலர் இருந்தனர்.

அவர்களில் சிலர் இன்னமும் இருக்கிறார்கள். அவர்களுக்கு முதல் முதல், தியஸாபிகல் ஸங்கத்தார் உபந்யாஸங்களைக் கேட்டதனால் நமது மதவிஷயங்களில் ஓர்விதப்பற்று உண்டாயிற்று. கொஞ்ச நாளில் அந்த உபந்யாஸங்கள் அவர்களுக்குப் பிடிக்காமல் போக, நமது மதவிஷயங்களை நம்மவரிட மிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆவல் பிறந்தது. அந்தத் தருணத்தில் பட்டணத்திலேயே மிக அற்புதமாக நமது மத உண்மைகளை எல்லோரும் எளிதில் அறியும்படி வெளியிட்டுக்கொண்டு சாந்தானந்தஸரஸ்வதி ஸ்வாமிகள் என்பவர் ஒருவர் இருந்தார். அவரது வைபவத்தை அப்பிரபுக்கள் அறிந்து அவர் வாரம் இரண்டுமுறை செய்துவந்த உபந்யாஸங்களை விடாது கேட்டுவந்து மதவிஷயங்களில் ஒருவாறு தேர்ச்சி அடைந்திருந்தனர். அவர்களது உள்ளத்தை ராஜம் அய்யர் பிரம்மவாதினியில் எழுதி வெளியிட்ட நியாஸம் கவர்ந்தது. அதை மிகுந்த ஆவலோடு ஸ்வாமிகளிடம் கொண்டுபோய் அவர்கள் காண்பிவித்தனர். ஸ்வாமிகள் எப். ஏ. பரீக்ஷை வரையில் வாசித்திருந்தவராகையால் அந்த நியாஸத்தை நேரிடத் தாமே வாசித்து ஆனந்தித்தார். அவருக்கு அப்பொழுது அதை எழுதி வெளியிட்ட புண்யபுருஷனைக் காணவேண்டும் என்ற அடங்கா ஆவல் பிறந்தது.

ராஜம் அய்யர், முன்னரே ஓர் ஸந்யாஸினியிடமிருந்து முதல் உபதேசம் பெற்றிருந்ததாகச் சொல்லி இருக்கிறோம். அதன்பின்பு அவர் எவ்வளவோ முயன்றும் மேலான நிலையை மறுபடியும் அடையமுடியாமல் போக அவருக்கு ஏக்கம் பிடித்தது. 'சுருதிக் கர்த்தம் பொருளல்ல என்று' துணிந்தவராய், 'சுருதிசொல்லும் பொருளதனை சுட்டிக்காட்ட' அதனால் மேலான நிலைகைகூடி உய்யும்பொருட்டு ஓர் ஸத்குருவை அடைய அவர் சிற்சில முயற்சிகள் செய்தார். அந்தக்காலத்தில் எங்கே பெரியோர்கள் உபந்யாஸங்கள் செய்கின்றார்கள் என்று கேட்டாலும் ஸரி அங்கே அவர் தயாராகப் போவது வழக்கம். அப்படி அவர் திரிந்து கொண்டிருந்த ஸமயத்தில் ஸ்ரீமத்ஸத்குரு சாந்தானந்தஸ்வாமிகளின் வைபவம் அவர் காதிற்கு எட்டியது. அநேகம் தரம் அவரை அணுகி அவர் சொல்லும் அரிய விஷயங்களைச் சிரவணம் செய்ய ராஜம் அய்யர் தம்மால் இயன்றமட்டும் பாடுபட்டார். ஒன்றும் பயன்படாமல் போய்விட்டது. அப்பொழுது ஸ்வாமிகளிடம் சிரவணத்திற்கு வந்தவர்கள் ஒவ்வொருவரிடத்திலிருந்து நன்கொடையாகக் கொஞ்சம் பணம் வாங்கப்பட்டுவந்தது. அது கொடுக்க முடியாதவர்களுக்கு ஸ்வாமிகளை தரிசிப்பது கூட அஸாத்யமாக இருந்தது. இது அக்காலத்தில் வாங்கவேண்டுவது அநேக காரணங்களால் அவசியம் என ஸ்வாமிகளைச் சூழ்ந்திருந்த சிஷ்யர்கள் எண்ணியிருந்தனர், ஸ்வாமிகள் எவ்வளவோ தடுத்துச் சொல்லியும் சிஷ்யர்கள் கேட்கவில்லை. இந்த நன்கொடையே ராஜம் அய்யருக்கு தடையாயிருந்தது. இதைக் கொடுக்க சக்தி இல்லாததால் ராஜம் அய்யருக்கு எவ்வளவு முயன்றும் ஸ்வாமிகளிடம் போகமுடியவில்லை. இப்படிப்பட்ட ராஜம் அய்யரை ஸ்வாமிகளே பார்க்கவேண்டும் என்று கொண்ட ஆவலை நோக்கில் மஹான்கள் கடவுளால் காப்பாற்றப் படுவார் என்பதற்கு என்ன ஸந்தேகம்?

ஸ்வாமிகள் இவ்வாறு ஆவல் கொண்டதும், மைலாப்பூர் பிரபுக்களுக்கு எப்படியாவது மனிதன், அவன் ஏற்றதாழ்வு என்ற நியாஸம் எழுதிய மஹானைக் கண்டுபிடிக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாய்விட்டது. உடனே அவர்கள் பிரம்மவாதினி பத்திராதிபரிடம் சென்று இதைப்பற்றி விசாரித்து ராஜம் அய்யர் வீட்டைக்கண்டுபிடித்தார்கள். அங்கு சென்று பார்த்ததும் ஏதோ பித்துப் பிடித்தவர்போல அவர் காணப்பட்டார். இதைக்கண்டு வியந்து இப்பிரபுக்கள் அவரோடு கொஞ்சம் ஸம்பாஷிக்க, பிரம்மவாதினி பத்திராதிபர் சொன்னது

போல அவர் பித்தர் அல்ல என்பது வெளியாயிற்று. இவரோடு இன்னும் அந்தரங்கமாகப் பேச அப்பிரபுக்கள் இவரை தமது வீட்டிற்கு ஓர் இரவில் வரும்படி ஏற்பாடுசெய்துவிட்டு தம் வீடு வந்து சேர்ந்தனர்.

குறிப்பிட்ட நாளில் ராஜம் அய்யர் அப்பிரபுக்கள் வீட்டிற்கு வர, அவர்களுள் மிகுந்த நேர்த்தியான ஸம்பாஷணை ஒன்று நடந்தது. அதில் பிரபுக்கள் நாஸ்திகவாதம் செய்தனர். அநுபூதியானதலால் ராஜம் அய்யர் தக்க விடை தயங்காது அளிக்க, ஸ்வாமிகளுக்கு அவரைப்பார்க்க உண்டான ஆவல் தகுந்தது என்று அவர்களுக்குத் தோன்றியது. உடனே தமது மனதை உள்ளபடி ராஜம் அய்யருக்கு அவர்கள் காட்ட, எல்லோரும் மிகுந்த ஆனந்தத்தோடு அன்றிரவு கலந்து பேசிக்கொண்டனர். அப்பொழுது அவர்கள் சாந்தானந்தஸ்வாமிகளின் சிறப்பையும் அவர் ராஜம் அய்யரை காணக் கொண்டிருந்த ஆவலையும் வெளியிட, 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததென' மகிழ்ந்து ஸ்வாமிகளைக் காண ராஜம் அய்யர் இசைந்தார். எல்லோரும் ஒருநாள் ஸ்வாமிகளிடம் சென்றனர்.

ஸ்வாமிகளுக்கும் ராஜம் அய்யருக்கும் முதல்நாள் ஸம்பாஷணை நடந்தது. அதில் அவர் எழுதிய வியாஸத்தை வைத்துக்கொண்டு அதன் மூலமாக ஸ்வாமிகள் அவரது அநுபூதி விஷயங்களைப்பற்றி ஊன்றி விசாரித்து, சிற்சில விடங்களில் ஒருவாறு குற்றங்கூறி முடிவில் வெகு அழகாகத் தமது அபிப்பிராயத்தையும் வெளியிட்டு பொதுவாக ராஜம் அய்யரை மிகவும் புகழ்ந்து பேசினர். அன்று நடந்த விஷயங்களிலிருந்து, ஸ்வாமிகள் ஒருவாறு வாசாஞானம் மாத்திரம் உடையவர் என்றும் பக்தியின் ரஸத்தை முழுவதும் அறியாதவர் என்றும் ராஜம் அய்யருக்குத் தோற்றியது. அன்று வீட்டிற்கு வந்ததும் அவர் ஸ்வாமியாரைப்பற்றி ஸாதாரணமாகவே பேசிவந்தாரே ஒழிய அவரிடம் விசேஷ கௌரவம் இருப்பதாக எண்ணிப் பேசவில்லை. ஸ்வாமிகள் ஸாதாரணமாக எல்லோரும் பக்தி என்று சொல்லும்படியானது ஞானத்தை விடத் தாழ்ந்த நிலை என்று அநுபூதி விஷயங்களைப்பற்றிப் பேசுங்கால் சொன்னது ராஜம் அய்யருக்கு இம்மாதிரியான அபிப்பிராயத்தை உண்டாக்கியதுபோலத் தோற்றுகிறது.

இரண்டாம் முறை ஸ்வாமிகளிடம் இவர்கள் போவதற்கு முன், ஓர் வெள்ளிக்கிழமை அன்று பட்டணத்திற்கு அருகாமையில் தியாகராஜ ஸ்வாமி திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவான்மியூரென்ற திவ்யக்ஷேத்திரத்திற்கு இவர்கள் எல்லோரும் போகும்படி நேர்ந்தது. அங்குவிசேஷமாயிருக்கும் அம்பாள் ஸந்நிதியில் இவர்கள் வந்ததும் ராஜம் அய்யர் தம் மனோபாவத்திற்கேற்பத் தியானம் செய்யத்தொடங்கினர். அவர் கண்ணிலிருந்து தாரை தாரையாக ஆனந்தபாஷ்பம் பெருகத் தொடங்கியது. பிரபுக்களுக்கு இது மிகுந்த ஆச்சரியமாகத்தோன்ற அந்த விடத்தைவிட்டு அசைய மனம் வாராது அங்கேயே நின்றுவிட்டனர். வெகு நாழிகை இவ்வாறு மெய்மறந்து பரவசமாயிருந்தபின்பு ராஜம் அய்யர் கண்விழிக்க எல்லோரும் மைலாப்பூர் நோக்கிப்புறப்பட்டனர். போகும் வழியில் பக்தி ஞானம் இவைகளின் ஸ்வரூபத்தைப்பற்றியும், உண்மையாக மோக்ஷமார்க்கத்தில் பாடுபடும் ஒருவனுக்கு ஆனந்தபாஷ்பம் முதலிய வெளித்தோற்றங்கள் இருத்தல் அவசியம் அல்ல என்ற விஷயத்தைப் பற்றியும் அவர்கள் வெகுவாகப்பேசிக்கொண்டு வந்தனர். அதில் ராஜம் அய்யர் தமது அநுபூதிக்கேற்ப பக்தி, மனஉருக்கம், ஆனந்தபாஷ்பம் ஆகிய இவைகள் இன்றி பரமபதம் ஒருவனுக்கு ஸித்திப்பது அரிது என்று எடுத்துரைத்து தகுந்த ஆதாரங்கள் காண்பிவித்தார். பிரபுக்களுக்கு மோக்ஷத்திற்கு முன் கூறியவைகள் நேரான வழிகள் அல்லவென்று தோன்றியபோதிலும், அநுபூதிவாஸனையே இல்லாததால் அவருக்குத் தக்கபடி ஆக்ஷே

பணைகள் கூறிப்பிரபுக்களுக்கு தமது எண்ணத்தை ஸ்தாபிக்கமுடியாமல் போயிற்று.

இரண்டாம் முறை இவர்கள் ஸவாமிகளிடம் போனதும் முன்னாள் நடந்தவைகளை ஆதியோடு அந்தமாக அவருக்குச் சொல்லிவிட்டனர். இன்னும் பக்தியில் உள்ள விசேஷப் பற்றால் ஞானத்தின் சிறப்பு ராஜம் அய்யருக்கு விளங்கவில்லை என்று கண்ட ஸ்வாமிகள் அவரை தமது ஏகாந்த ஸ்தானத்திற்கு அழைத்துப்போய் ஞானநுபூதிவிஷயங்களை வெளிப்படையாக உபதேசித்தார். அதன் முடிவில் ராஜம் அய்யருக்கு மனதில் ஓர்வித ஸமாதானமும் திருப்தியும் உண்டாயிற்று. அன்றோடு ஆனந்தபாஷ்பாதி வெளித்தோற்றங்கள் அவரை விட்டு அகன்றன. அதன் பின்பு எந்தக் கோயிலுக்குப்போன போதிலும் அவர் கண்ணில் ஒரு பொட்டு நீர் கூட வரவில்லை. ஸ்வாமிகள் எடுத்துக்கூறியவாறு நடக்கவேண்டும் என்ற ஆவல் அவருக்கு உண்டாயிற்று. ஸ்வாமிகளைப்பற்றி அவருக்கு முன்பு இருந்த அபிப்பிராயங்கள் எல்லாம் மாறிவிட அவரிடத்தில் ராஜம் அய்யருக்கு மிகுந்த பக்தியுண்டாய் விட்டது. ஆதலால் அவரையே அவர் குருவாகக் கருதிவிட்டார். கொஞ்ச நாளில் ஸ்வாமிகள் உபதேசம் செய்ய அவருக்கு முன்பு தாம் ஸந்யாஸினியிடம் கேட்டது பூர்த்தியாய் விட்டது என்ற எண்ணம் உண்டாயிற்று. மனம் குளிர்ந்தது. அன்று முதல் அவர் பக்திவிஷயத்தில் செலுத்தியிருந்த சக்தி எல்லாம் ஸ்வாமிகள் சொன்னபடி நிஷ்டை பழகுவதில் திரும்பிவிட்டது.ஸ்வாமிகள் சொல்வதை சிரவணம் செய்வதும் அதைப் பின்பு ஏகாந்தமாக மனனம் செய்து நிஷ்டையில் இருப்பதும் மற்றையவேளைகளில் சாஸ்திரப் புஸ்தகங்களை வாசிப்பதுமே அவரது முக்கிய காரியமாய் விட்டன. அவர் தமது உத்யோகத்தை மாத்திரம் அரைமனதோடு விடாது அப்பொழுதும் பார்த்துக்கொண்டு வந்தார்.

இப்பாகத்தை வாசிப்பவர்கள் பக்தி தாழ்ந்தது, ஆதலால் பயனற்றது, என்ற கெட்ட எண்ணத்தை மனத்தில் வைக்கக்கூடாது. நம்மைப் போன்ற ஸாதாரண ஜனங்கள் பக்தியின் மூலமாகவே மேலான நிலையை அடைய முயலவேண்டும். பக்தியில் பழகி மனது ஏகாக்கிரப்பட்டு வருங்கால் ஞானம் வந்து உதவாவிடில் மேல்நோக்கிச் செல்வது மிகவும் கஷ்டம். சிற்சில ஸமயங்களில் பக்தர்களுக்கு மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத் ஸாதனமாகிய ஞானம் வந்து உதவாததால், அவர்கள் பாமரர்களைவிட அதோகதியை அடையும்படியான நிலைக்கு வந்துவிடலாம். ஆகையால் பக்தர்கள் ஞானத்தின் சிறப்பை அறிந்து தமது நிலையை மேன்மைப் படுத்திக் கொள்ளவேண்டும். இம்மாதிரியான அபாயத்திலிருந்து பக்திமானன ராஜம் அய்யரை விடுவிப்பதற்கே ஸ்வாமிகள் ஞானத்தின் சிறப்பை எடுத்துக்கூறி அவரது ஆனந்தபாஷ்பாதி வெளி படாடோபங்களை தடுத்துவிட்டார். இதிலிருந்து ஞானமில்லாத பக்தி கேவலம் மனக்கொதிப்பாகவே முடியும் என்று தெரிந்துகொண்டு, பக்தி இல்லாத ஞானம் கேவலம் வாசா ஞானமாகவே முடியும் என்பதை மறவாமலிருக்கவேண்டும்.

இவ்வாறு உபதேசம் பெற்றபின்பு தான் ராஜம் அய்யர் ஸாதாரண மனிதர்களைப் போல ஆனர். முன்பு இருந்த எக்கம் அவரைவிட்டு நீங்கியது. ஆனல் வரவர அவருக்கு தேகவிஷயங்களில் தம்மை அறியாமலே அசிரத்தை ஏற்பட்டது. அவர் மனம் வர வர மேலே நோக்கிச் செல்லத் தொடங்கி விட்டது. இதனல் ஸ்வாமிகள் உபந்யாஸம் செய்யுங்கால் ராஜம் அய்யரைப் பார்த்தால் புதிதாகப் பார்க்கிறவர்களுக்கு அவர் ஏதோ அசிரத்தையாக உறங்குபவர் போலவும் ஏதோ மயக்கத்திலிருக்கிறவர்போலவும் தோன்றும். அவரை அறிந்தவர்களுக்கு மாத்திரம்தான் அவரது நிலையின் சிறப்புத் தெரியும். ஸ்வாமிகளுக்கு அவரது நிலை உள்ளபடி தெரியும் என்று நாம் சொல்லவும்வேண்டுமா?

ஸ்வாமிகள் உபந்நியாஸங்களில் உறங்காது இவர் மிகுந்த கவனத்தோடு சிரவணம் செய்துவந்தார், என்பது ஒரு சிறு விஷயத்தால் வெளியாயிற்று. அப்பொழுது, இராயப்பேட்டையில் ஒருவர் தாயுமானஸ்வாமிகளைப்பற்றி உபந்நியாஸம் செய்வதாக ஒப்புக்கொள்ள அதற்கு ஏற்பாடு செய்த கார்யதர்சி ஒருவர் நமது ராஜம் அய்யரை அக்கிராஸனம் வகிக்கும்படி வேண்டிக்கொண்டார். ராஜம் அய்யர் அதை ஒப்புக்கொள்ள உபந்நியாஸம் நடந்தது. முடிவில் அவர் எழுந்து தமது அக்ராஸனாதிபதி அவஸரத்திலிருந்து உபந்யஸிக்கத் தொடங்கினார். அவர் எழுந்ததும் பரவசயாகிப் பேசத்தலைப்பட்டார். வெகு நாழிகை சரமாரியாகத் தாயுமானவரது சிறப்பைப்பற்றி பேசி முடித்தார். இவர் பேசியது உபந்யாஸமாகவும், உபந்யாஸகர் பேசியது அக்ராஸனாதிபதியின் சுருக்கமான பேச்சென்றும் கேட்டவர்களுக்குத் தோற்றியது. கேட்கவந்தவர்கள் எல்லோரும் அசையாது ஸ்தப்தமாய் இருந்துவிட்டனர். எல்லோரும் மிகுந்த ஸந்தோஷம் அடைந்தனர், இவ்வாறு ராஜம் அய்யர் அக்கிராஸனம் வகித்ததும் வேறு சில ஸமயங்களில் அவர் பேசியதுமே அவரது மனோ நிலைமை அக்காலத்தில் எல்லோருக்கும் நன்கு விளக்கியது.

மேலும் அக்காலத்தில் ராஜம் அய்யருடைய மனோ நிலை எவ்வாறிருந்தது என்று நன்றாக அறியவேண்டுமானால் கமலாம்பாள் சரித்திரத்தில் 30-வது அத்தியாயமாகிய கருதுமன்பர் மிடிதீரப்பருகவந்த செழுந்தேனாகி என்ற அத்தியாயத்தை ஆழ்ந்து யோசித்து வாசித்துப்பார்க்கவேண்டும். கோபுரதர்சனத்தின் ஸ்வரூபம், சிதம்பரத்தின் சிறப்பு, 'கடவுள் ஒருவரே ஆனாலும் அவரை அறியவும் அனுபவிக்கவும் அநேக வழிகள் இருக்கின்றன' என்ற விஷயத்தைப் பற்றிய விசாரணை, முத்துஸ்வாமி அய்யர் 'சிந்தையில் எழுந்து பொங்கி ஜகமெலா நிறைந்து தேங்கி அந்தமில்லாததான ஆனந்தத்தில் மூழ்கி'ப்பெற்ற சிவானுபூதி விசேஷம் ஆகிய இந்த அரிய விஷயங்களை அடக்கியுள்ளது. இந்த அத்தியாயத்தில் முத்துஸ்வாமி அய்யர் சிதம்பர கோபுரத்தை மனமுருகித் துதித்த பின்பு அவர் குரு ஸச்சிதானந்த ஸ்வாமிகள் 'முத்துஸ்வாமி, என் தங்கமடா நீ என்று மனதாரமெச்சித் தட்டிக்கொடுத்து' சிதம்பரத்தின் சிறப்பை விஸ்தாரமாக அவருக்கு உபதேசிக்கிறார். இந்த ஸந்தர்ப்பத்தில் ராஜம் அய்யர் பின்வரும் குறிப்பை எழுதியுள்ளார்.

இதை குருசிஷ்யபாவத்தை அனுபவித்தவர் அன்றி மற்றோர் அறிதல் அரிது. சிஷ்யன் குருவைத் தேடிச் செல்வதுபோலவே குருவும் சிஷ்யனைத்தேடி அலைகிறார். ஒரு ஊரில் ஒரு அரசன் வேதாந்த விசாரணையில் ஆசைகொண்டு சிஷ்யனுக்குத்தக்க குருவேண்டும் என்று முரசறைவித்தான். வள்ளுவன் முரசறைந்து வரும்போது ஊருக்கு வெளியில் ஓர் குப்பைமேட்டில் கூர்மாசனமிட்டு எழுந்தருளியிருந்த ரிஷி ஒருவர் அவ்வள்ளுவனை அழைத்து குருவுக்குத்தக்க சிஷன் வேண்டுமென்று முரசறையச் சொன்னார். அவன் அவ்வாறு அறைந்த பறைபோசையைக் கேட்டு அரசன் திடுக்கிட்டு உண்மை விசாரித்து மனமகிழ்ந்து குருவையடைந்து பிறவி கடந்தான் என்று ஒரு கதைகூட உண்டு. தேடிப்பெற்ற சிஷ்யனிடத்து குருவுக்கு அந்தரங்கமுள்ள சின்மயமான பேரின்ப வாஞ்சை ஜனிக்கும். இருவரும் பிரம்மத்தை யறிந்தனுபவிக்கும்பொழுது குருசிஷன், சிறியன் பெரியன் என்ற பேதாபேதமற்ற ஸமரஸ நிலையில் இருப்பது வேதாந்திகள் அறிந்த வழக்கம்.

இக்குறிப்பு ராஜம்அய்யருக்கும் சாந்தானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்கும் இருந்த விசேஷப் பற்றுதலையும், அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் கண்டு பேசுவதற்குமுன்னமேயே ஒருவரை ஒருவர் காணவேண்டும் என்று கொண்ட ஆவலையும் ஒருவாறு குறிப்பிக்கின்றது என்பது நாம் சொல்லாமலே இதை வாசிப்போருக்கு எளிதில் விளங்கும்.

இவ்வாறு உபதேசம் பெற்று மேன்மை அடைந்த ராஜம் அய்யர் நமது நாட்டிற்குப் பொதுவாக இன்னபடி உதவிபுரிந்தனர் என்ற விஷயத்தை அடுத்த ஸஞ்சிகையில் விவரிப்போம்.

# யாப்பிலக்கணம்

## TAMIL PROSODY

தமிழாசிரியர்கள் இலக்கணத்தை எழுத்திலக்கணம் சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், அணியிலக்கணம், யாப்பிலக்கணம் என ஐந்தாகப் பகுப்பார்கள். அவற்றுள் யாப்பிலக்கணமென்பது செய்யுளின் இலக்கணம். யாப்பு யாத்தல், அதாவது கட்டுதல் என்று பொருள்படும்; யா பகுதி, பு தொழிற்பெயர் விகுதி; காப்பு, மூப்பு என்றாற்போல. செய்யுள் என்பதற்குச் செய்தல் என்பது பொருள்; செய் பகுதி, உள் தொழிற்பெயர்விகுதி; பாய்த்துள் விக்குள் என்றாற்போல. யாப்பிலக்கணம், செய்யுளிலக்கணம், யாப்பியல், செய்யுளியல், பாட்டியல் என்பன ஒரு பொருட்சொற்கள். இயல் என்பது இலக்கணம்.

தமிழாசிரியர் சிலர் யாப்பியலைச் செய்யுளியல் பாட்டியல் என இரண்டாகப் பகுத்து வழங்குவர். அவர் செய்யுளியலில் பாவகையும் அவற்றின் உறுப்புக்களும் கூறி, பாட்டியலில் தொடர்நிலைச் செய்யுளின் விகற்பமும் அவற்றின் இலக்கணமும் கூறுவர்.

ஆதியில் தமிழில் யாப்பிலக்கணம் செய்தவர் யாவரென்பது இப்போது புலப்படவில்லை. அருந்தவக்கொள்கை அகத்தியனாரே தமிழிற்கு எழுத்துச் சொற் பொருள் யாப்பு அணி என்னும் இயற்றமிழிலக்கணம் ஐந்தும், இசைத்தமிழிலக்கணமும், நாடகத்தமிழிலக்கணமும் இயற்றினார் என்று சிலர் சொல்லுவர். இவ்விலக்கணங்களை எல்லாம் புதிதாய் ஒருவரே இயற்றினார் என்று சொல்லுவது பொருந்தாது. எத்துணை வல்லராயினும் ஒருவராலே ஒரே காலத்தில் இவைகளெல்லாம் நூதனமாக இயற்றப்படத்தக்கனவல்ல. வடமொழியில் முன்னுள்ள வியாகரண நூல்களையெல்லாம் ஆராய்ந்து அவைகளெல்லாவற்றினுஞ் சிறக்கத் தாமொரு வியாகரணமியற்றிய ஆசிரியர் பாணினியார் போலத் தமிழில் முன்னுள்ள இலக்கணநூல்களையெல்லாம் ஆராய்ந்து அவைகளெல்லாவற்றினுஞ் சிறக்க அகத்தியனாரும் தாமோரிலக்கணம் இயற்றினார் போலும்.

ஆசிரியர் அகத்தியனார் செய்த அகத்தியமன்றிச் செய்யுளிலக்கணமுணர்த்தும் நூல்கள் தமிழிற்பல. அவை மாபுராணம், பூதபுராணம், தொல்காப்பியம், பல்காப்பியம், யாப்பியல், சங்கயாப்பு, பாட்டியன்மரபு, யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, சிதம்பரப்பாட்டியல், இலக்கணவிளக்கம் முதலாயினவும், பல்காயனார் காக்கைபாடினியார், சிறுகாக்கைபாடினியார், அவிநயர், நக்கீரர், நற்றத்தர், மயேச்சுரர் முதலாயினர் இயற்றிய நூல்களுமாம். இவற்றுள் மாபுராணமும் பூதபுராணமும் அகத்தியம்போல இயலிசை நாடகம் மூன்று முணர்த்தின போலும். தொல்காப்பியமும் வீரசோழியமும் இலக்கணவிளக்கமும் எழுத்துச் சொற் பொருள் யாப்பு அணி என்னும் இயற்றமிழிலக்கணம் ஐந்து முணர்த்துவன. எஞ்சியவற்றுள் அவிநயமொழிய ஏனைய செய்யுளிலக்கணமொன்றே உணர்த்துவன. அவிநயம் யாப்பேயன்றிச் சொல்லிலக்கணமு முணர்த்தினமை

திணைபான் மரபு வினைச்செப் பிடஞ்சொல்
இணையா வழுத்தொகைபோ டெச்சம்—அணையாக்
கவினையபார் வேற்றுமையுங் காலமயக்குங்கொண்
டவினயனா ராராய்ந்தார் சொல்

என்னும் வெண்பாவாற் பெறப்படும்.

இந்நூல்களுள் இப்போதுள்ளன சில; பல இறந்தொழிந்தன. இக்காரணத்தினால் மாபுராணம், பூதபுராணம், யாப்பியல், சங்கயாப்பு, பாட்டியன்மரபு முதலிய நூல்களியற்றினார் பெயரும், பல்காயனார் அவிநயனார் முதலியோர் இயற்றிய நூல்கள் எவ்வெவ் விலக்கண முணர்த்தின வென்பதும் புலப்படவில்லை. யாப்பிலக்கண முணர்த்தும் நூல்கள் இப்போதுள்ளனவற்றுள் மிகப்பழையது தொல்காப்பியம். இதற்குரை செய்தார் பலர். அவர்கள் செய்தவுரைகளுள் தொல்காப்பியச் செய்யுளியற்கு மூன்று

ரையுள்ளன; அவை உரையாசிரியர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் என்னும்மூவராலும் இயற்றப்பட்டன. இவற்றுள் பேராசிரியருரை முன்னரே அச்சிடப்பட்டுளது; நச்சினார்க்கினியருரை இப்போது அச்சிடப்பட்டு வருகின்றது; உரையாசிரியருரை இன்னும் அச்சிடப்படவில்லை. தொல்காப்பியச் செய்யுளியலும் அதன் உரைகளும் மிக உபயோகமானவை. யாப்பிலக்கணத்தில் வழங்கும் பெயர்களுக்குக் காரணமும் பாக்களுக்குக் கூறப்பட்ட ஓசை விகற்பங்களும் வேறுபலவும் இப்போது இவற்றாலேயே அறியக்கிடக்கின்றன.

தொல்காபியத்திற்குப் பிற்பட்டது யாப்பருங்கலம். இது சமணராற் செய்யப்பட்டது. இது தொல்காப்பியத்தை முற்றுந்தழுவாது, அதனோடு சிறிது மாறுபட்டு, காக்கை பாடினியத்தைப் பின்பற்றிச் செல்லும். அது தொல்காப்பியர் போல நேர்பசை நிரைபசை வேண்டாது, காக்கை பாடினியார் போல நாலசைப்பொதுச்சீர் வேண்டுவதனாலும், தாழிசை துறை விருத்தங்களைத் தொல்காப்பியர்போலக் கொச்சகக்கலிப்பாற் படுத்தாது பாவினங்களென வகுப்பதனாலும் பிறவாற்றாலும் பெறப்படும். இது ஒரு சிறந்த நூல். இதின் பெருமை

சொல்லிற் சுருங்கிப் பொருள் பெருகித் தொன்
எல்லாம் விளக்கியிருளகற்றும்—நல்யாப் [ஞானம்
பருங்கலம் வல்லவர் தாமன்றே கேள்வி
ஒருங்கறிய வல்லா ருணர்ந்து

[என்று சான்றோர் கூறிய வெண்பாவானினிது விளங்கும். இதற்கு யாப்பருங்கலவிருத்தி என்று பெயருள ஒரு விரிவுரையுளது; அது இன்னும் அச்சிடப்படவில்லை; மூலந்தானச்சிடப்பட்டுள்ளது.

யாப்பருங்கலக்காரிகை யாப்பருங்கலத்திற்கு அங்கமாயுள்ளது. இது அதன் பெயராலே விளங்கும். காரிகைக்கு உரையெழுதிய குணசாகரர் அதனை அவிநயர் யாப்பிற்கு நாலடிநாற்பதுபோல யாப்பருங்கல மென்னும் யாப்பிற்கு அங்கமாய் அலங்கார முடைத்தாகச் செய்யப்பட்டமையால் யாப்பருங்கலக்காரிகையென்னும் பெயர்த்தாயிற்று என்பர். இந்நூல் செய்தார் ஆரியை யென்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகையாக்கித் தமிழ்ப்படுத்திய அருந்தவத்துப்பெருந்தன்மை அமுதசாகரரென்னு மாசிரியர் என்று அதன் உரையாசிரியராகிய குணசாகரர் கூறுவர். இவர் ஆரியா சப்ததி என்னும் வடநூலை மொழிபெயர்த்தார் போலும். யாப்பருங் கலஞ் செய்தாரும் இவ்வமுதசாகரரே. அதன் பாயிரம்.

யாப்பருங் கலநனி யாப்புற வகுத்தோன்
தனக்கு வரம்பாகிய தவத்தொடு புணர்ந்த
குணக்கடற் பெயரோன் கொள்கையின் வழாஅத்
துளக்கறு கேள்வித் துகளர் காட்சி
அளப்பருங் கடற்பெய ரருந்தவத் தோனே

என்று கூறும். பாயிரத்திற் குரையெழுதினர் கடற் பெயர் அருந்தவத்தோன் யாரென்று கூறிற்றிலர். அவர் "விரவியு மருகியும் வேறு மொரோவழி—மருவியும் பெறுது வழங்குமன்னவையே" என்னுஞ் சிரோத்துச் சூத்திரத்துரையுள் "இந்நூலுடையாரும், மாஞ்சிர் கலியுட்புகா" என்னும் புறநடையானும் பிறவாற்றானும் * * * விளங்கக் கூறினர்" என்பதனால் யாப்பருங்கலம் செய்தாரே காரிகை செய்தவரும் என்பது விளங்கவைத்தார். 'மாஞ்சீர்கலியுட் புகா' வென்பது. யாப்பருங்கலக் காரிகை ஒழிபியல் மூன்றாவது காரிகை.

பாயிரங் கூறினவர் நூலாசிரியர் பெயரை மொழிபெயர்த்துத் தமிழில் "அளப்பருங் கடற்பெயருந் தவத்தோன்" என்று கூறினாராயின், நூலாசிரியர் பெயரை அமிதசாகரரென்று எழுதவேண்டும், அமிதம் அளவில்லாதது; சாகரம் கடல். எட்டில் அமித சாகரரென்றிருந்ததைப் பின்னுள்ளோர் அமிர்த சாகரரென்றும் அமுதசாகரரென்றும் கொண்டிருக்கலாம்.

வீரசோழியத்திற் குரையியற்றிய பெருந்தேவனாரும் யாப்புப் படலத்தில் "துன்னுங்குறளடி" என்றற்றொடக்கத்துப் பத்தொன்பதாங்

காரிகையுரையில் 'மிக்குங் குறைந்தும் வரினு மொருபுடை-யொப்புமைநோக்கியொழிந்தவுங் கொளலே' என்றார் அமுதசாகரனார் என்று யாப்பருங்கலஞ் செய்தார் அமுத சாகரனார் என்பது புலப்பட யாப்பருங்கலத்து ஒழிபியலோத்துச் சூத்திரத்தை எடுத்து மேற்கோள் காட்டினர்.

யாப்பருங்கலக் காரிகை சிறு நூலாயினும் மிகச்சிறந்தது. அது யாப்பிலக்கணப்பொருள்களெல்லாமடங்க மிகச் சுருங்கின சொல்லால் தொகுத்தும் வகுத்தும் செய்யப்பட்டு உதாரணமெடுத் தோதிச் செல்வதோடு இனிய கட்டளைக் கலித்துறையால் யாக்கப்பட்டு எளிதிற் பாடம் பண்ணிக்கொள்ளற் கேற்ற தாயமைந்துள்ளது. இதன் சுருக்கமும் தெளிவும் இனிமையுமே இது யாவராலும் பாராட்டப்பட்டுவருவதற்குக் காரணம். இக்காலத்துத் தமிழ் யாப்பிலக்கணம் கற்பார் கற்கும் நூல் இதுவே.

இதற்குப் பழையதோருரையுண்டு. அது குணசாகரரென்பவராற் செய்யப்பட்டது. இவ்வுரை இந்த இலக்கணத்திற்கு இது எடுத்துக் காட்டென்று கற்போர் எளிதில் அறிந்துகொள்ள இலக்கணங்களையும் எடுத்துக்காட்டுக்களையும் அணிமை பெறச்சேர்த்துக் காட்டாதும் சில விடங்களில் மூலபாடத்தை விரித்துரையாது பொருளை மாத்திரம் முடித்தும், சில விடங்களில் நூலாசிரியர் போக்கினையும் நோக்கினையுங் கருதாது வேறு பொருள் கொண்டும் முடிந்து கிடக்கின்றது. இக்குறைபாடுகளை நோக்கி இதற்கொரு புத்துரை இயற்றியுள்ளார் நல்லிசைப் புலமை வாய்ந்த யாழ்ப்பாணச் சுன்னாகத்துக் குமாரசுவாமிப் புலவர். இவ்வுரை காரிகைகளைப்பிரித்து, முடிபுகளைத் தெரித்து, பொருளை வரையறுத்து, அதற்கின்றியமையாதவைகளை எடுத்துக்கூறி, உதாரணங்கள் இலக்கணமமைந்து கிடக்குமாற்றைப் புலப்படக்காட்டி, செய்யுளுறுப்பாதியவற்றின் பெயர்க்காரணங்களை விளக்கிச் செல்கின்றது. இவ்வுரையில் நூலின் மூலபாடமும் உதாரணமும் பிழைபறப் பரிசோதித்துத் திருத்தப்பட்டிருக்கின்றன; மூலத்தில் நிரனிறையாகக் கூறியனவெல்லாம் வேறு வேறு பிரித்து இதற்கிதுவெனவிரைந்து புலப்படுமாறு விளக்கப்பட்டிருக்கின்றன; குணசாகரருரையில் விதந்துகூறாத கட்டளைக் கலித்துறை, கட்டளைக் கலிப்பா முதலியவைகள் எவ்வெப்பாவினங்களின் பாற்பட்டனவென்பதும், அவற்றின் இலக்கணங்கள் யாவை என்பதுஞ் செவ்வனே விளக்கப்பட்டிருக்கின்றன; சில புத்துதாரணங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. குணசாகரர் தம்முரையிலே காரிகை மூலபாடத்தோடு சேர்க்காது ஓர் உரைச்சூத்திரமாக எடுத்துக்கூறிய "தூங்கேந்தடுக்கு" என்னும் வண்ணவிகற்பமுணர்த்துங் காரிகை உள்ளவாறு மூலத்தோடு சேர்த்து உரை கூறப்பட்டுளது. இக்காரிகைக் குரைகூறுமிடத்துத் தொல்காப்பியனார் கூறிய பாஅவண்ணம் முதலிய இருபது வண்ணங்களும் அவிநயனார் கூறிய குறிலகவற்றூங்கிசை வண்ணமுதலிய நூறுவண்ணங்களும் உதாரணங்களோடு எடுத்துக்காட்டி விளக்கப்பட்டதோடு தமிழ் நூலிற் கூறப்படும் வண்ணத்திற்கும் வடநூலிற் கூறப்படும் சந்தத்திற்குமுள்ள வேற்றுமையும் தாண்டகத்தினிலக்கணமும் சொல்லப்பட்டிருக்கின்றன.

காரிகைக்கு முதலில் உரை எழுதிய குணசாகரரை யாப்பருங்கலத்தின் பாயிரச் சூத்திரத்தில்அமுதசாகரருக்கு ஆசிரியராகக்கூறிய குணசாகரரென்றும், ஆதலால் அமுதசாகரரோடொரு காலத்திருந்தவரென்றும், அவருக்குற்ற நண்பினரென்றும் ஒருவர் கொண்டார். அது பொருந்தாது. இருவர்பெயரும் குணசாகரரென்றிருத்தல் பற்றி இருவரையும் ஒருவராகக்கொள்ளலமையாது. அமுத சாகரரியற்றிய "தூங்கேந்தடுக்கு" என்றற்றொடக்கத்துக் காரிகையை மூலத்தோடு சேர்க்கத்தவறினமையானும் "அந்தமில்பாதம்" "எழுவாயெழுத்தொன்றின்மோனை" என்றற்றொடக்கத்துக் காரிகைகளுக்கும் பிறவற்றிற்கும் நூலாசிரியர் கருத்

திற்சேர்க்க உரை கூறுமையானும் பிறவாற்றானும் உரையாசிரியராகிய குணசாகரர் நூலாசிரியராகிய அமுதசாகரரோடொருகாலத்தினரல்ல ரென்பதும் வெகு காலத்திற்குப் பிற்பட்டவரென்பதும் இனிது புலப்படும்.

வீரசோழியம் யாப்பருங்கலத்திற்கும் காரிகைக்கும் பிற்பட்டது. அது வீரசோழியமியற்றிய புத்தமித்திரனாரோடு ஒரே காலத்தினராக எண்ணப்படும் அதன் உரையாசிரியராகிய பெருந்தேவனார் தமதுரையில் யாப்பருங்கலச்சூத்திரத்தினை எடுத்து மேற்கோள் காட்டியதனால் விளங்கும். இந்நூலுடையார், யாப்பிலக்கணங் கூறு மிடத்து வடமொழி யிலக்கணத்தைக் கொண்டுவந்து நுழைத்து, சீருந்தூக்குங் கருவியாக அடிவகுக்காது எதுகை கருவியாக அடிவகுத்து, பாக்களை ஓசைபற்றி வகுக்காது அடிபற்றி வகுத்துத் தொல்லாசிரியரோடு மாறுபடக்கூறுவர்.


இலக்கண விளக்கமும் சிதம்பரப்பாட்டியலும் பிற்காலத்து நூல்கள். இவைகளிரண்டும் அச்சிடப்பட்டுள்ளன. இலக்கண விளக்கமச்சிட்டவர் வீரசோழியம், இறையனாரகப்பொருள், தொல்காப்பியம், கலித்தொகை, சூளாமணி முதலிய பழந்தமிழ் நூல்கள் அச்சிட்ட யாழ்ப்பாணத்து ஸ்ரீமான் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள். சிதம்பரப்பாட்டியலச்சிட்டவர் செந்தமிழ்ப் பத்திராசிரியர் ஸ்ரீமத் மு. இராகவையங்கார். இலக்கண விளக்கமியற்றினவர் திருவாரூரில் திருக்கூட்டத்தில் தமிழ்க்கிலக்காகிய வைத்திய நாத தேசிகர். சிதம்பரப்பாட்டியல் செய்தார் பரஞ்சோதியாரென்பார். இந்நூல்கள் பெரும்பாலும் யாப்பருங்கலத்தையும் காரிகையையும் தழுவிச்செல்வன. விதந்தெடுத்துக் கூறத்தக்க சிறப்பமைந்தனவல்ல.

நூலாராய்ச்சிக்கு யாப்பிலக்கணவறிவு இன்றியமையாதது. பழந்தமிழ் நூல்கள் பலவும் இன்னும் அச்சில் வராது ஏட்டிலேயேயிருக்கின்றன. ஏட்டிலெழுத்துப் புள்ளியிட்டெழுதப்படாதது. அவ்வெழுத்தி லுள்ள பாக்களின் உண்மைப் பாடங்களைக் கண்டுகொள்வதற்கு யாப்பிலக்கண வுணர்ச்சி ஒரு தலையாக வேண்டும். அச்சில் வந்த நூல்களிலும் பலவற்றில் பாடங்கள் பிழைபடப்படித்து வழங்கப்பட்டு வருகின்றன. நெடுங்காலமாகத் தமிழ்நாடெங்கும் அன்போடுபடித்து ஆலயங்களிலும் ஓதப்பட்டு வரும் தேவாரம் முதலிய திருப்பாடல்களுள்ளேயே இவ்வகைப் பிழைகள் காணப்படுமாயின், வழக்கு வீழ்ந்து கிடந்த எஞ்சிய பழந்தமிழ் நூல்களின் நிலைமையைச் சொல்லுவதென்? இப் பிழைகளுள் இரண்டொன்று காட்டுதும்:—

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரம், திருநாகேச்சரம், "பொன்னேர் தருமேனியனே" என்றற் றொடக்கத்துப் பதிகத்தில் பதினொன்றும் பாட்டு மூன்றுமடி "நலமார்தரு நாகேச் சரத்தானே" என்றிருக்கற்பாலது "நலமார் தருநாகேச்சரத்தானே" என்றும்; திருவாவடுதுறை, நாலடிமேல் வைப்பு "இடரினும் தளரினும்" என்றற் றொடக்கத்துப் பதிகத்தின் ஒவ்வொரு பாட்டினீற்றிலும் "ஆவடுதுறையரனே" என்றிருக்கற்பாலது "ஆவடு துறையானே" என்றும்; சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம், திருநாகேச்சரப்பதிகம், திருக்கடைக் காப்பொழிந்த ஒவ்வொரு பாட்டின் இறுதியடியிலும் திருக்கடைக்காப்பின் இரண்டாமடியிலும் "திருநாகேச்சரத்தரனே" என்றிருக் கற்பாலது "திருநாகேச்சரத்தானே" என்றும் படித்து அச்சிடப்பட்டுள்ளன. இப்பிழைகள் தக்க யாப்பிலக்கணவுணர்ச்சி யின்மையான் நேர்ந்தன வென்பது திண்ணம்.

தி. த. கனகசுந்தரம்பிள்ளை.

# இயற்கை அற்புதங்கள்
## WONDERS IN NATURE



### III - பூகம்பங்கள்
### EARTHQUAKES

முன்னர் எரிமலைகளைப்பற்றி எழுதிவருங்கால் எரிமலை உற்பேதங்களுக்கு முன் பூகம்பங்கள் காணப்படும் என்று கூறியிருக்கிறோம். இங்கு பூகம்பங்களின் ஸ்வரூபம் அவைகளின் காரண காரியங்கள் இவைகளைப்பற்றி விவரித்து எழுதுவோம்.

பூகம்பம் என்ற பதத்திற்கு நிலத்தின் நடுக்கம் என்று பொருள். இது உண்டாகும் காலத்தில் பூமியின் மேல்பாகம், ஸமுத்திரத்தின் மேல்பாகத்தைப்போல உயர்ந்து தாழ்ந்து அலைபாய்ந்து அசையும். இது உண்டாகும் காலத்தில் யாராவது ஒருவர் தரையில் படுத்திருப்பார்களாகில் அவர்களை இந்த அசைவு பிரட்டிவிடும், சிலருக்கு இது தம்மைத் தொட்டிலில்வைத்து ஆட்டுவதுபோலத் தோன்றும். இது உண்டாவதை நாம் முன்னதாக அறிவது மிகக் கஷ்டம். அப்படி இருப்பினும் இக்காலத்தில் ஓர்வித யந்திரம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலமாக பூகம்பம் வரப்போகிறதென்று இரண்டொரு நாளைக்கு முன் தெரிந்து கொள்ளலாம். ஆனால் அது முன்னர் குறிப்பிப்பவை யாவும் நடந்து தீரவேண்டும் என்பது நிச்சயமல்ல. ஆதலால் அதைப் பூர்ணமாக நாம் நம்பிவிட முடியாது.

உலகில் எரிமலைகள் இருக்கும் இடங்களில் எல்லாம், பூகம்பங்களும் உண்டு. இதுவும் அல்லாமல் பூமத்தியக்கடல், மத்திய ஆசியா, அமெரிக்காவின் மேற்கு பாகங்கள் ஆகிய இவைகளிலும், ஹிமாலயப் பிராஞ்சியங்களிலும் பூகம்பங்கள் அடிக்கடி உண்டாவது வழக்கம். மத்திய அமெரிக்கா, பூமத்தியக்கடலின் மத்தியபாகம், ஹிமாசலப்பிராஞ்சியம் (ஸிம்லா) ஆகிய இவ்விடங்களிலும் அதிகமாக அடிக்கடி பூகம்பங்கள் நடந்து வருகின்றன.

பட்டணம், சென்னை ராஜதானி, மத்தியஐரோப்பா, சில பஸிபிக்தீவுகள் ஆகிய இவ்விடங்களில் வெகு நாளைக்கு ஒருதரம் பூகம்பங்கள் ஏற்படுவதுண்டு. அப்படி இங்கு உண்டாகும்பொழுது அதிகநாசம் முதலியவைகள் உண்டாவதில்லை. பூமியில் பூகம்பமே இல்லாதவிடம் கிடையாது என்று சொல்லலாம். ஜபான் தீவுகளில் வருஷத்திற்கு சற்றேரக்குறைய 60-கம்பங்கள் உண்டாகின்றனவாம். உலகம் முழுவதையும் நோக்குங்கால் நாள் ஒன்றுக்கு 30-க்குக் குறையாமலும், 50-க்கு மேற்படாமலும் கம்பங்கள் உண்டாகின்றனவாம்.

பூகம்பங்கள் உண்டாகும் காலத்தில் காணப்படுபவைகளை உற்று நோக்குவோம். பூகம்பங்கள் உண்டாவதற்கு முன் அதிகமாக குறிகள் ஒன்றும் காணமுடியாது. எரிமலை உற்பேதங்களுக்கு முன் உண்டாகும் குறிகளை அறிந்து ஜனங்கள் தப்பி ஓடிவிடலாம். பூகம்பத்திலிருந்து அவ்வாறு தப்பிவிடமுடியாது லிஸ்பன் நகரத்தில் உண்டானதுபோல பூகம்பம் உண்டாவதற்கு சில நிமிஷங்களுக்கு முன் சில ஸமயங்களில் பீரங்கிவெடிக்கும் சப்தம் ஒன்று கேட்கலாம். இதனால் தப்பி ஓடுபவருக்கு ஓர் பிரயோசனமும் இல்லை. ஜனங்கள் தப்பிஓட எண்ணும்முன் பூமிஅசைந்து ஆபத்தை உண்டாக்கும். பூகம்பங்களால் தாக்கப்பட்ட பாகங்கள் எல்லாவற்றிலும் ஒரே ஸமயத்தில் அசைவு உண்டாவதில்லை. அசைவு முதலில் ஓர் இடத்தில் உண்டாகும். குளத்தில் கல் எறிந்தால் நான்கு பக்கங்களிலும் வரவர அகன்ற வட்டங்களாக அலை பரந்து போவதுபோல பூகம்பம் முதலில் தோன்றுமிடத்திலிருந்து நான்கு பக்கங்களிலும், பூமி அலைபாய்ந்துபோகும். தண்ணீரில் உண்டாகும் அலையைப்போன்றது தான் பூகம்பத்தால் உண்டாகும் அசைவும். பூமியில் உண்டாகும் அலையும் ஓர் இடத்தில் இருந்து மற்றவிடம் ஒரு நொடிக்கு 2000-முதல், 3000-அடிகள்வரை அதிவேகமாக ஓடும், ஒருதரம் ஓடியபின்பு முன்னதைவிட பலம் குறைந்ததாய் இரண்டு ஒரு அலைகளும் வரலாம். பூகம்ப அலைகளுக்கு அகல அகல பலம் குறையும். ஆகையால் அசைவு முதலில் தோன்றும் மத்திய பாகத்தில்தான் பூகம்பவேகம் அதிகம். இந்த மத்தியபாகத்தை விட்டுப் போகப்போக பூகம்பத்தின் வேகம் குறையும். அலை அகன்று ஓடும் குளத்தில் பாய்மரங்களையுடைய ஒருசிறிய கப்பல் இருந்தால் அதன் நுனி எவ்வாறு அசைந்தாடுமோ அவ்வாறு பூகம்ப காலங்களில் வீடுகளின் மேல்பாகங்கள், மரங்களின் நுனி ஆகிய இவைகள் அசைந்தாடும். இவ்வாறு வீடுகள் முதலியன ஆடுங்கால் அவைகளின் அஸ்திவாரங்கள் அல்லது வேர்கள் தளர அவைகள் கீழே சாய்ந்துவிடும். பள்ளத்தாக்குகளில் பூகம்பத்தால் களிமண்கட்டிகள் கற்பாறைகள் முதலியன பெயர்ந்து விழ அங்கு ஓடும் நதிகள் அடைபட்டு ஏரிகளாகி முடிவில் அடைப்பை உடைத்துக் கொண்டு வேகமாய்ப் பாய்ந்து இருபக்கங்களிலுமுள்ள வஸ்துக்களை அழிக்கும். சிற்சில ஸமயங்களில் அசைவின் கொடுமையால் பூமி சிற்சிலவிடங்களில் விரிய, அப்பிளவுகளுள் மரம் வீடுகள் முதலியன விழும். பின்பு உடனே அந்த பிளவுகள் மூடிக்கொண்டு விடலாம். சிற்சில ஸமயங்களில் இப்பிளவுகள் மூடிக்கொள்ளாமல் வர வர தண்ணீர் ஓடுவதால் பள்ளமாகிக் கொண்டே வரலாம். சிற்சில விடங்களில் பூமி திடீரென்று தாழ்ந்து பள்ளத்தாக்காகி விடலாம் அல்லது திடீரென்று உயர்ந்து மலையாகிவிடலாம். பூகம்பம் ஸமுத்திரத்துள் உண்டாகுங்கால் ஸமுத்திரத்தில் அங்கேயே பெரிய அலையைவிட சற்றேரக்குறைய 20-அல்லது 70-அடி அதிக உயரமான அலையை உண்டாக்கி விடுகின்றது. பூமியின் அலை ஸமுத்திர அலையைவிட வேகமாகப் போவதால் பூகம்பம் முதலில் கரையை வந்து சேர்ந்து அல்லோல கல்லோலப்படுத்தி அழிக்கின்றது. இது முடிவதற்குள் ஸமுத்திரத்தில் இதனால் உண்டாகப்பட்ட அலை வெகு உயரமாக வேகத்தோடு கோஷித்துக் கொண்டு கரை நோக்கி

வருகிறது. இது வருவதற்கு முன் ஸமுத்திர ஜலம் கறையைவிட்டு வெகு தூரம் ஸமுத்திரத்துள் முதலில் இழுக்கப்படுகின்றது. இவ்வாறாய்க் கொஞ்ச நாழிகைக் கெல்லாம் பெரிய அலைவந்து ஸமுத்திரத்திலிருக்கும் கப்பல்களை கரையோடு மோதி, பூகம்பத்தின் நாசத்தொழிலைப் பூர்த்திசெய்து விடுகின்றது.

பூகம்ப காலங்களில் அது வந்து தாக்கும் முதல் பாகமாகிய மத்தியபாகத்தில் தான் அதிக நாசம் உண்டாவது, 1755-ம் வருஷம் நவம்பர் மாதம் 1ௗ லிஸ்பன் நகரத்தில் காலை 9½-மணிக்கு எல்லோரும் தமது வேலைகளுக்கு ஆயத்தமாகுங்கால் திடீரென்று பூமிக்குள் ஓர் பீரங்கி சத்தம் போன்ற சத்தம் கேட்டது. எல்லோரும் என்ன! என்று திகைத்து தலையை உயர்த்தும்முன் பட்டணம் முழுவதும் பூகம்பத்தால் தவிடுபொடியாக, அதன் அடியில் அநேக ஆயிரக்கணக்காக ஜனங்கள் மாண்டு கிடந்தனர்! இது போதாதென்று உடனே நெருப்பும் கடல் நீரும் சேர்ந்து நாசத்தை பூர்ணம் செய்துவிட்டன. 1783-ம் வருஷத்தில் ஸிஸிலித் தீவில் உள்ள மேஸ்ஸினா நகரத்தில் உண்டான பூகம்பத்தில் இரண்டு நிமிஷத்துக்குள் பட்டணம் அழிய, அப்பொழுது உண்டான நெருப்பு பட்டணத்தை எரித்து விட்டது. இரண்டொரு மாதங்களுக்குமுன் அந்தபட்டணத்தில் ஒரு பெரிய பூகம்பம்உண்டாகி முன் கூறியதுபோலாக 200,000 உயிர்கள் மாய்ந்தன. அவ்வூராருள் தப்பிப் பிழைத்தவர்களுக்கு இறங்கி உலகத்தில் உள்ள ராஜாங்கத்தார் எல்லோரும் ஏராளமாகத் திரவ்ய ஸஹாயம் செய்திருக்கின்றனர். சென்னபட்டணத்திலிருந்துகூட அந் நகரவாஸிகளுக்கு கொஞ்சம் திரவ்யம் கவர்னர் முதலியோரால் சேகரித்து அனுப்பப்பட்டிருக்கிறது. இரண்டொரு வருஷங்களுக்குமுன் கல்கத்தா சென்னபட்டணம் ஸிம்லாமுதலிய விடங்களில் பூகம்பங்கள் வந்திருக்கின்றன. முற்காலத்தில் பூமத்தியக்கடலின் கீழ் பாகத்தில் உண்டான பூகம்பத்தில் ரோட்ஸ் என்ற பட்டணத்தின் துறைமுகவாயில் காலைவிரித்து நின்றுகொண்டு கப்பல் தாராளமாகப்போக இடங்கொடுத்திருந்த கேலோஸஸ் என்ற பெரிய வெண்கலபிம்பம் ஸமுத்திரத்தில் விழுந்து அழிந்தது. இம்மாதிரி பூகம்பங்களில் அநேக சேதம் உண்டு.

கேவலம் நாசஹேதுவான பூகம்பம் உண்டாகக் காரணம் என்ன? காரணம் இன்னவை என்று நன்றாக விளங்கவில்லையாகிலும் ஒருவாறு அவைகளை ஊகித்து அறியலாம். எரிமலைப்பிராந்தியங்களில் பூமியுள் இருக்கும் பொந்துகளின் மேல்பாகம் உடைந்து விழுந்தாகிலும், பூமியின் மேல்பாகம் சுருங்கிவருங்கால் உண்டாகும் நெருப்பால் பாறைகள் உடைந்து விழுந்தாகிலும், அல்லது திடீரென்று நீராவி உள்ளே உண்டாகி வெளியே ஓடுவதால் ஆகிலும் பூகம்பங்கள் உண்டாகலாம். ஆகவே பூமியுள் உண்டாகும் ஓர் வித அதிர்ச்சியே பூகம்பங்களுக்கு காரணம். இது உண்டானதும் உண்டான பாகத்தில் இருக்கும் கடின பூமி திரவமாக, அப்பொழுது உண்டாகும் அக்னிக்குழம்பில் அலை கிளம்பி பூமியின் மேல் பாகத்தைத் தாக்குகின்றது. இந்த அலை கோளாகாரமாக எல்லா பக்கங்களிலும் போவதால் மிகவும் அருகிலுள்ள பூமியின் மேல்பாகத்தை முதலில் வேகமாகத்தாக்க அதுவே பூகம்பத்தின் மத்திய பாகமாகின்றது. நாழிகையாக ஆகத்தான் கோளாகாரமாக வெளிவரும் அலைகள் மத்திய பாகத்தைச் சுற்றியுள்ள பிரதேசங்களை முறையே குறைந்த பலத்தோடுதாக்க பூகம்ப அலைகள் ஒருபுறம் இருந்து மற்றோர்புறம் ஓடுவன போலக் காணப்படுகின்றன. இதிலிருந்து பூமியின் உஷ்ணத்தால் உண்டாகும் அக்னிக்குழம்பில் அலைகள் உண்டாவதே பூகம்பத்தின் காரணம் என்பது விளங்கும். இதையே ஷேக்ஸ்பியர் மஹாகவி 'பூமிக்கு ஜ்வரம்உண்டாக அது நடுங்கிற்று' என்றார். இந்தக்காரணத்தின் மூல

மாக முன் நாம் கூறியுள்ள தோற்றங்களை எளிதில் விளக்கலாம்.

முன்னர் கூறியுள்ள காரணத்தை வைத்துக்கொண்டு பூமியுள் எவ்வளவு ஆழத்தில் பூகம்ப அதிர்ச்சி தொடங்குகிறது என்று அறியலாம். வீட்டின் சுவர்களில் இருக்கும் விரிவுகள் மூலமாக பூகம்ப அலைவந்து தாக்கிய சாய்வைக் கண்டுபிடிக்கலாம். மேல் கணிதம் நன்றாகக் கற்றவர்களுக்கு எடுத்துரைத்தால் விளங்கும் ஆதலின் அதை இங்கு விஸ்தாரமாக எடுத்துரைக்க முடியாது. கணக்கிட்டுப்பார்த்ததில் பூகம்ப அதிர்ச்சி பூமிக்குள் 30-மைலுக்குக் கீழ் ஒருக்காலத்திலும் உண்டானதில்லை என்று தெரியவந்தது. உண்டாகும் இடத்திலிருக்கும் வேகம் வரவரக் குறைய பூமியின்மேல் பாகத்தில் அது வருங்கால் வேகம் மிகக்குறைந்து விடுகின்றது. இதையே நம்மால் தாங்கமுடியவில்லை! உள்ளே என்னமாக இருக்கும் என்பதை நாம் மனதால் அளவிட வேண்டியதே ஒழிய சொல்லிமுடியாது.

பூகம்பங்களால் ஏற்படும் காரியங்கள் யாவை என்பதை விசாரிப்போம். பூகம்பங்களின் ஸ்வரூபத்தை விசாரிக்குங்கால் கூறியுள்ள விஷயங்களில் இருந்து அது எரிமலைகளைவிட உலகத்தில் நாசம் செய்வதில் அதிக சக்தி உடையது என்பது விளங்கி இருக்கும். அதோடு கூட நீரும் நெருப்பும் ஸஹாயமாகவிருந்து நாசத்தைப் பூர்த்தி செய்யும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு நிமிஷத்தில் அதனால் மலைகள் உண்டாகி மற்றை நிமிஷத்தில் அமிழ்ந்து விடலாம். ஆதலால் சிலஊர்களில் பூகம்பம் முடிந்ததும் மலைமேலிருந்தவர்கள் பள்ளத்தாக்கிலும், பள்ளத்தாக்கிலிருந்தவர்கள் மலைச்சிகரங்களிலும் மாறி நின்றுவிடலாம். வேறு சில விடங்களில் பூகம்பத்தால் மனிதர்கள் தமது வீடுகளோடு சேதம் ஒன்றும் இன்றி வேறோரிடத்திற்கு மாற்றப்படலாம். பூமி பிளக்க அதனுள் அகப்பட்டனயாவும் உடனே மூடப்பட்டு அழியலாம். சுழல்காற்றால் குப்பைகள் சுழலுவதுபோல் சில பாகங்களில் வஸ்துக்கள் பூகம்பத்தால் சுழற்றப்பட்டனவாம். இதனால் ஒரு பக்கம் பார்த்திருந்த வீடுகள் வேறு பக்கமாகத் திருப்பட்டனவாம்.

பூகம்பத்தால் உண்டாகும் அதிர்ச்சி வெகுதூரம் வரையில் சென்று எட்டுகின்றது. லிஸ்பனில் நடந்த பூகம்பகாலத்தில் ஸ்காத்லண்டு ஏரிகளில் மிகுந்த அலைகள் உண்டாயின. அருகிலிருந்த ஆல்பஸ் பிரணீஸ் முதலிய மலைகள் வேரோடு அசைந்தன. ஸமுத்திரத்தில் அலை உண்டாக அது அமெரிக்காவரையில் சென்று எட்டியதாம். அருகாமையில் ஆப்பிரிக்காவிலுள்ள மொரக்கோவில் சில அழகிய பட்டணங்கள் அழிந்தன.

எரிமலை உற்பேதம் பிரமாதமாக நடக்குங்கால் பூகம்பாதிகள் குறைந்து இல்லாமல் போய் விடுகின்றன. ஆகையால் எரிமலை உற்பேதங்கள் இல்லாவிடில் பூமி முழுவதும் பூகம்பங்களால் அழியும் என்பதற்கு என்ன ஸந்தேகம்?

---

நம்பிக்கை:—அதாவது எல்லாரும் நம்மை முற்றிலும் நம்பும்படி நடக்கவேண்டும். நாம் ஆணாகவிருந்தாலுஞ் சரி பெண்ணாகவிருந்தாலுஞ் சரி, இக்குணமட்டும் நம்மிடமிருக்குமாயின் நாம் எல்லாராலும் நன்குமதிக்கப் படுவோம். "ஐயைய அவன் வார்த்தையில் ஒரு நம்பிக்கையா! அவன் உடம்பெல்லாம் பொய்" என்ற பட்டம் நமக்கு என்றையதினம் வந்ததோ அன்றையதினம் நாம் நடைப்பிணங்கள் ஆனோம் என்று நாம் கருதவேண்டும். அவ்வாறு நமக்குப் பெயர்வந்தபிறகு நாம் என்னதான் முயன்றாலும் நமக்கு நல்ல பெயர் வராது. அதுபோலவே பெண்களுக்கும்.

ஆகையால் நம்மை ஒவ்வொருவிதத்திலும் எல்லாரும் முற்றிலும் நம்பும்படி நடக்கவேண்டும். இக்குணமும் மற்றெல்லா நற்குணங்களைப்போலவே இளமைப் பருவம் முதல் நமக்குப் படியவேண்டும். இவ்வுலகத்திலேயே எங்கும் நமக்கு ஊக்கத்தை விளைவிப்பது நம்பிக்கைதான் புருஷனுக்கு மனைவியிடமும் மனைவிக்குப் புருஷனிடமும் நம்பிக்கையில்லாவிடில் அவர்கள் வாழ்வு ஒரு பொழுதும் நல்வாழ்வாகாது. வேலைக்காரனிடம் நம்பிக்கையில்லாமல் நித்தியம் ஒரு புது வேலைக்காரனை வைக்கவேண்டியிருந்தால் ஒரு வியாபாரிக்கு வியாபாரம் எவ்வண்ணம் நடக்கும்? அநேகம் பெயர்கள் தாங்கள் எவ்வளவோ ஸமர்த்தர்களாகவிருந்தும் உலகத்தில் முன்னுக்கு வராமற் போவது ஊகித்துப் பார்த்தால் இந்நம்பிக்கை என்பது அவர்களிடத்தில் இல்லாமற்போவதால் என்று வெளியாகும்,

# கம்முராபியின் சட்டங்கள்

## THE CODE OF KHAMMURABI

கிறிஸ்தவாப்தத்துக்கு இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னால், வெகுவாகச் சிறந்து விளங்கிய பாபிலோனியா என்னும் ராஜ்யத்தின் முதல் அரசனான கம்ழுராபி என்பவன் கி. மு. 2342-முதல் 2287-வரை ஆண்டதாகச் சொல்லப்படுகிறது. கிறிஸ்தவர் வேதமான பைபிளில் கூறப்படும் அமராபாலன் என்பவன் இவனேயாம். ஆதலால் இவன் ஆப்ரகாம் என்பவனுடைய சகஜீவியாக விருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. பலஸ்தினாவின் மேற் படையெடுத்தவனும், பாபிலோனியாவில் ஆட்சி செலுத்திய இலாமைத்தியர்களை வென்று அவர்களை அந்நாட்டினின்றும் வெருட்டி யோட்டியவனும் இக்கம்முராபியே யாவான். பாபிலோனியா ராஜ்யத்தை ஐக்கியப்படுத்தி ஏக சக்ராதிபத்தியத்தோடு அரசுசெலுத்திய இவ்வரசன், தன் நாட்டைப் பலவிதத்தினும் சீர்திருத்தியதாகச் சொல்லப்படுகிறான். தட்டாமல் நீர் வருவதற்கு அநேக பாசன வாய்க்கால்கள் வெட்டினானும், பாபிலோனியாவில் பெரியதான வோர் கோதுமைக் களஞ்சியம் கட்டினான். அவ்வரசன் காலத்தும் அதற்கு முன்னும், அவ்விராஜ்ஜியம் நாகரீகத்தில் முதன்மையடைந்திருந்த தென்பதற்கு அவன் ஏற்படுத்தியிருக்கும் சட்டத்திட்டங்களே தக்க சான்றாகும். கொஞ்சகாலத்துக்கு முன் வரையிலுங்கூட இந்த கம்முராபியைப் பற்றி ஒன்றும் தெரியாமலேயே யிருந்தது. பிற்பாடு புராதன ஆராய்ச்சிக்காரருடைய அரும்பெரும்பாட்டினால் வெளிவந்த சில சாதனங்களாலும், கடிதங்களாலும், சட்டங்களாலும், கம்முராபியைப் பற்றிய பலவிஷயங்கள் நமக்கு இப்போது தெரிந்துள்ளன. முக்கியமாக அவ்வரசனுடைய சட்ட திட்டங்கள் அக்கால நாகரீகத்தைத் தெரிவிப்பனவன்றி, சரித்திர பூர்வகமாகவும் ஒரு வித மேம்பாட்டையுடையன வென்னலாம். இன்றைக்கு நாலாயிரம் வருஷங்களுக்கு முன்பேயே ஏற்படுத்தப்பட்ட இத்தரும சாஸ்திரம், உலகத்திலுள்ள எல்லா தர்மசாஸ்திரங்களுக்கும் காலத்தினால் முற்பட்டதென்று மேற்றிசைப் புலவோர் கூறுகின்றனர். இது நமது மனுதர்ம சாஸ்திரத்துக்கும் முந்தியதென்று அவர் கூறுவது விவாதத்துக்கு இடமாகலாம்.

இச்சட்டங்கள் வெட்டப்பட்டிருக்கும் கற்சிலை பாபிலோனியாவில் கண்டெடுக்கப் படவில்லை; ஸூஸா என்னுமிடத்தில் காணப்பட்டதாம். சுமார் எட்டடி உயரமுள்ள ஒரு கருமையான பாறையில் வெட்டப்பட்டிருக்கும் இச்சாதனம் டி. மார்கன் என்னும் பிரஞ்சுக்காரரால் 1901-வருஷக்கடைசியில் கண்டுபிடிக்கப்பட்டது. மார்கனுடன் சென்றவீல் (Father V. Scheill) என்பவரால் இச்சிலை அப்போது புகைப்படம் பிடிக்கப்பட்டது; பின்னர் (Dr. H. Winckler) விங்க்ளர் என்னும் வித்வானால் அச்சிலா சாதனம் முழுவதும் ஜெர்மானிய பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டது; அச்சாதனத்தில் அடங்கியுள்ள தர்மசாஸ்திரத்தைமட்டும் ஜான்ஸ் (Rev. C. H. W. Johns) என்பவர் ஆங்கிலேயத்தில் மொழிபெயர்த்திருக்கின்றனர்.

அச்சிலையின் ஒரு பக்கத்தில், தர்மராஜனும் சூரிய தெய்வமுமான ஷமாஷ் என்னும் தேவதை ஒரு சிங்காதனத்தின்மீதிருந்து இத்தரும சாஸ்திரத்தை வெளியிடுவதாகவும், கம்முராபி என்னும் சக்ரவர்த்தி அத்தேவதைக்கு எதிரே வெகு பணிவுடன் நின்று கேட்பதாகவும் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இச்சித்திரத்தின் கீழேயே 1114 வரிகளடங்கிய பதினாறு பத்திகளும், அச்சிலையின் பின்பக்கத்தில் 2510 வரிகளடங்கிய இருபத்தெட்டுப்பத்திகளுமாக அச்சாதனம் எழுதப்பட் டிருக்கின்றது. முன்பக்கத்துள்ள வற்றுள் ஐந்து பத்திகள் அழிக்கப்பட்டு, சிலை மறுபடியும் திருத்தப்பட்டு இருக்கிறது. பாபிலோனியாவிலிருந்து ஸூஸாவுக்கு இச்சிலையைக்கொண்டு போன இலாமைத்தியவரசன் தன்னுடைய சாசனமொன்றை அதில் எழுதுவதற்காக அவ்வாறு அழித்திருக்கலாமென்று ஊகிக்கப்படுகின்றது. எழுத்தோ வெகு அழகாக விருக்கிறதாம். 700 வரிகள் அரசனுடைய பட்டப்பெயர்களையும் அவன் குடிகளை அன்பாய்ப் பரிபாலிக்கும் விதத்தையும், அச்சிலா சாதனத்தை அவ்வரசன் வெட்டுவித்த காரணத்தையும், அதையழிக்க நினைப்போருக்கு நேரவேண்டுமென்று பிரார்த்திக்கிற கடுஞ்சாபத்தையும் தெரிவிக்கின்றன. தர்ம சாஸ்திரத்துக்கு முன்னுள்ள பீடிகா வாக்கியங்களும் பின்னுள்ள புறனடை வாக்கியங்களும் வெகு காம்பீரியத்தோடு விளங்குகின்றன. அத்தர்மசாஸ்திரத்தில் 282 விதிகள் அடங்கியுள்ளன. இடமின்மை பற்றி அவைகளை முழுவதும் இங்கு மொழிபெயர்க்கக் கூடவில்லை.

பொதுவாகக் கூறுமிடத்து, ஜவாப்தாரித்தனம் இன்னாரிடம் இருக்கவேண்டுமென்பதை இச்சட்டம் நன்றாய் வரையறுத்திருக்கிறது. ஒரு மனிதன்

ஏதேனுமொரு பொருளை அடகு மூலமாகவோ வேறு காரணமூலமாகவோ பெற்றிருந்தால், அப் பொருள் அவன் கையை விட்டு நீங்கும் வரையில் அதற்கு அவனே ஜவாப்தாரியாவான். வீடுகட்டும் கொற்றன் அவ்வீட்டின் பலத்துக்கும், வைத்தியன் ஒருவன் நோயாளியின் தேக சௌக்கியத்துக்கும் உத்தரவாதம் சொல்லவேண்டியிருந்தது. பின்னும், ஒவ்வொரு காரியமும் எழுத்து மூலமாக இருக்க வேண்டுமென்பதுவும் பெறப்படுகின்றது. சாதன மூலமாக ஏற்படாத கல்யாணங்கள் உறுதியாகமாட்டா; வியாபாரிகளுக்குள் ஏற்படும் உடன்படிக்கைகள் எழுத்து மூலமாகவே இருக்கவேண்டும்.

பழிவாங்குவதைப் பற்றியுள்ள விதிகள் வெகு கடுமையாக, அக்காலத்துக் கேற்றவாறு, ஏற்பட்டிருக்கின்றன. ஒரு வீடு இடிந்துவிழுந்து வீட்டுக்காரனைக் கொன்றுவிடுமானால், வீடுகட்டிய கொற்றன் மரணதண்டனைக் குள்ளாவான் ; வீட்டுக்காரன் மகன் இறந்தால் கொற்றன் மகன் மரணதண்டனையை யடைவான்.

இவ்வாறுண்டான விதிகள் எல்லாம் கம்முராபியாலேயே ஏற்படுத்தப்பட்டவை என்பதற்கிடமில்லை, பிராசீனமாகவே வழங்கிவந்தவைகளையே கம்முராபி சாதனமாக ஏற்படுத்தியதாகத் தோன்றுகின்றது. இனி மாதிரிக்காகச் சில விதிகளை மட்டும் இங்கு எழுதுவோம். சமயம் வாய்க்குமாயின் முழுவதையும் பின்பொரு முறை எழுதலாமென்பது எமது உத்தேசம் :—

1. ஒரு மனிதன் மற்றொருவன் மேற் குற்றஞ் சாட்டி, அவனைச் சபித்து, பின் அக்குற்றத்தை நிரூபணம் பண்ணாமற்போனால், குற்றஞ் சாட்டினவன் மரண தண்டனைக்குள்ளாகக்கடவன்.

2 ஒரு மனிதன் மற்றொருவன் மேற் குற்றஞ் சாட்டி அக்குற்றத்தை நிரூபணம் செய்யாமல் போனால், சந்தேகப்பட்டவன் ஆற்றுக்குப்போய் அதில் மூழ்கக்கடவன் ; ஆறு அவனை ஆழ்த்தி விடுமானால் அவனுடைய வீட்டைக் குற்றஞ் சாட்டினவன் எடுத்துக் கொள்ளக்கடவன்; ஆற்றினால் அவன் நிரபராதியென்று தெரிவிக்கப்பட்டு, அபாயமொன்றுமில்லாது வெளிவருவானானால், அவன்மீது சந்தேகப்பட்டவன் மரணதண்டனைக் குள்ளாகக் கடவன். ஆற்றில் மூழ்கினவன் குற்றஞ்சாட்டினவனுடைய வீட்டை எடுத்துக் கொள்ளக்கடவன்.

22. கொள்ளையடித்தவன் ஒருவன் பிடிக்கப்பட்டால் மரண தண்டனை பெறக்கடவன்.

23. கொள்ளையடித்தவன் பிடிக்கப்படாவிட்டால் சொத்தை யிழந்தவன், தெய்வத்தின் முன்பாக, தன்னிடமிருந்து களவாடப்பட்ட பொருள்கள் ஒவ்வொன்றையும் கேட்கக்கடவன்; கொள்ளை நடந்த நாட்டுக்குள்ளும் எல்லைக்குள்ளுமிருக்கும் பட்டினமும் அதை யாள்வோனும் பொருளை யிழந்தவனுக்கு அவனிழந்த பொருள் ஒவ்வொன்றையும் கொடுக்க வேண்டும்.

42. ஒருவன் ஒரு நிலத்தைச் சாகுபடி செய்வதற்காக எடுத்துக்கொண்டு, அந்நிலத்தில் தான்யத்தை உற்பத்தி செய்யாமலிருந்தால் அவன் செய்ய வேண்டிய கடமையைச் செய்யாதொழிந்தானென்று குற்றஞ்சாட்டப்படக் கடவன்; நிலத்தின் சொந்தக்காரனுக்கு அவன் அண்டை நிலத்தில் விளைந்த திட்டம் தானியத்தைக் கொடுக்கக் கடவன்.

45. ஒருவன் தனது நிலத்தை ஒரு குடியானவனிடம் வாரச்சாகுபடிக்கு விட்டு, தனது வாரத்தைப் பெற்றுக்கொண்டபின், புயற் காற்று ஒன்றடித்து, மாருலைக் கெடுத்துவிட்டால், நஷ்டம் குடியானவனைச் சேர்ந்ததாம்.

53 ஒருவன் சோம்பலால் தனது அணைகளைச் சரியான நிலையில் வைக்காமலிருந்து, அதனால் ஒரு உடைப்பு எடுத்து புலங்கள் எல்லாம் வெள்ளத்தால் நிரம்புமாகில், உடைப்பு எடுத்த அணையின் சொந்தக்காரன் வீணாய்ப்போன தானியத்துக்கு ஈடு செய்யக் கடவன்.

127. ஒரு பக்தஸ்திரீயையேனும் ஒரு மனிதனுடைய மனைவியை யேனும் யாரேனு மொருவன் விரலால் சுட்டிக் காட்டச் செய்து, (அம்மனிதனுக்கு விரோதமான) குற்றத்தை நிரூபணஞ் செய்யாமல் போனால், குற்றஞ்சாட்டினவன் நியாயாதிபதியின் முன் கொண்டுவரப்பட்டு நெற்றியில் சூடு பெறக்கடவன்.

128. ஒருவன் ஒரு ஸ்திரீயைக் கல்லியாணஞ் செய்து கொண்டு அவளுடன் ஒரு உடன் படிக்கை எழுதிக்கொள்ளாமலிருந்தால், அந்த ஸ்திரீ அவனுடைய மனைவியாகமாட்டாள்.

141. ஒருவன் வீட்டில் வசிக்கும் அவன் மனைவி வெளியே போகக்கருதி, கலகமூட்டி, வீட்டுப்பொருள்களை வீண் செலவு செய்து, கணவனை அசட்டைபண்ணினால், அவள் நியாயஸ்தலத்துக்குக் கொண்டுவரப்படவேண்டும். அவள் கணவன் "நான்

அவளை நிராகரித்துவிட்டேன்" என்பானானால், அவன் அவளைத் தன்னிஷ்டப்படி போகும்படி விட்டுவிட வேண்டும். விவாக விலக்குக்காக அவன் அவளுக்கு ஒன்றும் கொடுக்கக்கூடாது. அவள் கணவன் "நான் அவளை நிராகரிக்கவில்லை" என்பானானால் அவன் இன்னொருத்தியை மனைவியாகப் பெற்றுக் கொள்ளலாம்; (முதல்) மனைவி அவன் வீட்டிலேயே ஒரு அடிமையைப்போல இருக்கவேண்டும்.

195. ஒரு மகன் தனது தகப்பனை அடித்தால் அம்மகன் கைகளை வெட்டிவிடவேண்டும்.

196. ஒரு சுயேச்சா மனிதனுடைய கண்ணை ஒருவன் குத்திவிட்டால், அவன் கண்ணைக் குத்திவிடவேண்டும்.

215. ஒரு வைத்தியன் ஒரு மனிதனுக்கிருந்த பெரிய காயமொன்றை வெண்கலக்கத்தியினால் ஆற்றி அம்மனிதனைக் குணப்படுத்தி விடுவானானால், அல்லது பருவொன்றை வெண்கலக்கத்தியினால் அறுத்து, அம்மனிதனுடைய கண்ணை ஆற்றிவிடுவானானால், அவ்வைத்தியன் பத்து ஷெகல் வெள்ளியைப் பெறக்கடவன்.

278. யாரேனுமொருவன், ஒரு ஆணடிமையையேனும் பெண்ணடிமையையேனும் விலைக்கு வாங்கியபிறகு, ஒருமாதத்துக்குள் அவனுக்கு "பென்னு" வியாதி வந்து விட்டால், அவனை விற்றவனிடம் திருப்பிக் கொடுத்து விடக்கடவன்; வாங்கியவன் தான் கொடுத்த பணத்தைத் திரும்பப் பெறக்கடவன்.

282. ஒரு அடிமை தனது எஜமானனை நோக்கி, "நீ எனது எஜமானன் அல்ல" என்பானானால் இவ்வடிமை எஜமானனால் விசாரணைக்குக் கொண்டுவரப்படவேண்டும்; எஜமானன் அடிமையின் காதை வெட்டிவிடவேண்டும்.

ஸ்திரீகளுக்குச் சுதந்திரம் இருந்ததாகத் தெரிகின்றது; அவர்கள் சொந்தமாகவே நிலங்கள் வைத்துக்கொண்டு காரியங்களை நடத்தலாம். அவர்கள் கௌரவிக்கப்பட்டு வந்ததாக ஏற்படுகின்றது. விவாகப் பிரிவினையைப்பற்றிய விதிகள் இப்போது மகம்மதிய நாடுகளில் வழங்கிவரும் விதியைப்போன்றுள்ளன. மலடியொருத்தி, தன் கணவனால் விலக்கப்பட்டால், தனது சீதனத்தைப் பெற்றுக்கொண்டு தாய் வீடு போய்ச்சேருவாள். அங்கு வேறொருவனை அவள் கல்யாணம் செய்துகொள்ளலாமாம்.

மேற்காட்டப்பட்ட மாதிரி விதிகளால் பண்டைக் காலத்தில் ஜனங்களுக்குள்ளிருந்த நாகரீகமும் உடையுடை பாவனைகளும் ஒருவாறு விளங்கும். கிறிஸ்தவாப்தத்துக்குப் பிறகே தான் நாகரீகம் தலையெடுத்தது என்று விதண்டாவாதம் புரிவோர்க்கு இத்தர்ம சாஸ்திரச் சிலாசாதனம் ஓர் வாய்ப்பூட்டாக வுள்ளது.

*ஷெகல் என்பது சுமார் இரண்டு ரூபாய்க்குச் சரியான ஓர் பழைய யூத நாணயம்.

# குமார ஸம்பவம்

## BIRTH OF KUMARA

பண்டித நடேச சாஸ்திரியாரால் மொழிபெயர்ப்பு

### மூன்றாவது சருக்கம்

10. தங்களுடைய அனுக்கிரகம்மட்டுமிருந்தால் எனது ஆயுதம் மலர்க்கணையாயிருந்தபோதிலும் வஸந்தன் ஒருவனைமட்டுமே எனக்கு துணையாகக்கொண்டு, பினாகம் என்ற வில்லைக் கைப்பிடித்திருக்கும் ஈசுவரனைக்கூட தைரியத்தை இழக்கும்படி செய்யவல்லவன்; அப்படியிருக்க மற்ற வில்லாளிகள் எனக்கு ஒரு பொருட்டா?

11. இவ்வாறு காமன் சொல்லவே இந்திரன் தனது தொடைமேல் போட்டிருந்த பாதத்தை எடுத்து பாதபீடத்தின்மேல் ஊன்றி நேராக உட்கார்ந்து தான் கருதிய காரியத்தை முடித்துக்கொடுக்க சக்தி உண்டென்று ஏற்கனவே ஒருவாறு தெரிவித்த மன்மதனைநோக்கிப் பின்வருமாறு பேசலானான்.

12. என் நண்பரே! நீங்கள் சொன்ன எல்லாவித சாமர்த்தியங்களும் உமக்குத் தகுமென்பது ஸந்தேகமா? எனக்கு எப்பொழுதும் உதவியாய் விளங்குவன இரண்டுவித ஆயுதங்கள்: வச்சிராயுதம் ஒன்று; தாங்கள் இரண்டு. வச்சிராயுதம் தவத்தின் பலம்படைத்த பெரியவர்களிடம் மழுங்கிவிடும். நீங்களோ எத்திசையிலும் செல்பவர்கள்; எப்பொழுதும் வீண்போகாத உபகாரமாயிருப்பவர்கள்.

13. உங்கள் வல்லமையை நான் நன்றாக அறிந்திருக்கின்றேன். அக்காரணத்தாலேயே நானே போய் நடத்தவேண்டிய ஒரு பெருங்காரியத்தில் உம்மை எனக்குச் சமானமாக எண்ணி அனுப்புகின்றேன். தன்னைப்போல் பூபாரத்தை ஆதிசேஷன் வகிக்கவல்லன் என்றறிந்தல்லவோ கிருஷ்ணபகவான், அவரை அத்தொழில் செய்யும்படி கட்டளையிட்டார்!

14 சிவபெருமானிடம் பாணம் போடமுடியும் என்று எப்பொழுது நீங்கள் சொன்னீர்களோ அப்பொழுதே எங்கள் காரியம் கைகூடிவிட்டதாக நாங்கள் நினைத்துவிட்டோம். பெரிய சத்துருவிடம் அகப்பட்டுக்கொண்டு தவிக்கும் தேவர்களுடைய வேண்டுகோளும் இதுவே என்று கருதிக்கொள்ளும்.

15. ஈசனிடமிருந்து தோன்றும் குமாரனை சேனாதிபதியாய் அடைந்து தேவர்கள் தங்கள் சத்துருவை வெற்றிகொள்ள விரும்புகின்றார்கள். எல்லாவித மந்திரங்களுக்கு மிருப்பிடமாய் நிஜதத்துவத்தில் மூழ்கி நிற்கும் அவ்வீசனைக் கலக்க உமது ஒரேபாணம் போதுமன்றோ?

16. ஐம்புலன்களையும் அடக்கியிருக்கும் அச்சிவபெருமானுக்கு மகாபரிசுத்தமுள்ளவளான பார்வதியிடம் மோகமுண்டாகும்படி செய்ய நீங்கள் முயலவேண்டும். மடந்தைகளுக்குள் ஈசனுக்குத் தகுந்த மடந்தை அவள் ஒருத்திதான் என்று பிரமதேவர் சொல்லிவிட்டார்.

17. இமயமலைத் தாழ்வரையில் தவம்புரியும் ஈசனுக்குத் தனது தந்தையின் கட்டளைப்படி பார்வதி பணிவிடை செய்துவருகின்றாள் என்ற சமாசாரம் நான் அப்ஸர கணங்களிடமிருந்து கேள்விப்பட்டேன். அக்கணம் எனது தூதர்களன்றோ?

18. ஆகையால் எங்கள் காரியத்தை முடித்துவைக்க நீங்கள் உடனே புறப்படுங்கள். தேவகாரியமிது என்றாலும் வேறொரு காரியத்தைக்கொண்டே இது முடிவுபெறவேண்டியதாயிருக்கின்றது. விதைத்த விதை தான் முளைகாணும்முன் ஜலத்தை எவ்வாறு எதிர்பார்த்து நிற்குமோ அதுபோல் இக்காரியமும் உமது உதவியை முக்கிய காரணமாய் எதிர்பார்த்து நிற்கின்றது.

19. தேவர்கள் வெற்றியடைய உபாயமாயிருக்கும் ஈசனிடம் அம்புபோட வல்லமை உமக்கு ஒருவருக்கன்றோ இருக்கின்றது? உம்மைவிட பாக்கியசாலி வேறுண்டோ? மற்றவர்களால் செய்யமுடியாத சாதாரணகாரியமும்கூட அதைச் செய்துமுடிப்பவனுக்குப் புகழை விளைவிக்கின்றது. (சிவபெருமானிடம் அம்புபோடும் இப்பெருங்காரியம் உமக்குப்புகழை விளைவிக்கும் என்பதில் சந்தேகமும் உண்டோ?)

20. இப்பொழுது உம்மை யாசிப்பவர்களோ இங்கு ஒன்றுகூடியிருக்கும் எல்லா தேவர்களும்; நீங்கள் செய்யப்போகின்ற காரியமோ இம்மூவுலகங்களுக்கும் நன்மையானது அக்காரியத்தையோ நீங்கள் ஒரேபாணத்தால் நிறைவேற்றப்போகின்றீர்கள். அப்பாணத்தால் தேகத்தில் ஏதாவது காயம் உண்டாகுமென்ற பயமோஇல்லை. ஆச்சரியம் ஆச்சரியம்! உமது வல்லமை எல்லாரும் தங்களுக்கிருக்கக்கூடாதா என்று ஆசைகொள்ளும் வல்லமையாக விருக்கின்றது.

21. ஐயா காமனே! வஸந்தன் எப்பொழுதும் உம்முடன்கூடவே யிருப்பவராகையால் நீங்களும் உதவிசெய்யவேண்டுமென்று நான் அவருக்குச் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் உமக்கு எப்பொழுதும் உதவி செய்பவரே. நெருப்புக்கு நீங்கள் உதவி செய்யவேண்டுமென்று காற்றையாராவது வேண்டிக்கொள்வதுமுண்டா?

22. அப்படியே ஆகட்டுமென்று மன்மதன் இந்திரனுடைய கட்டளையை யஜமானன் கொடுத்த மாலையை சிரஸால் வகிப்பதுபோல் வகித்தவனாய் அவ்விடம் விட்டுப் புறப்பட்டான். ஐராவதத்தை ஓட்டி ஓட்டிக் காய்த்திருந்த தனது கையால் இந்திரனும் அம்மன்மதனைத் தட்டிக்கொடுத்து வழியனுப்பினான்.

23. அன்பான தோழன் வசந்தனும் தனது மனைவி ரதிதேவியும் அஞ்சின மனத்துடன் பின்தொடர மன்மதன் தனது தேகம் நாசமாய்ப் போனபோதிலும் தேவர்கள் காரியம் எப்படியாவது நிறைவேறினால் போதுமென்று கருதினவனாய் ஈசன் தவம்புரியும் இமயமலையின் ஆச்சிரமத்தைநோக்கிப் புறப்பட்டான்.

24. அந்தச் சிவபெருமான் ஆச்சிரமத்தில் தவம்புரியும் முனிகளுடைய தவத்துக்கு இடையூறாய் மன்மதனுக்கு மிகவும் உபகாரமாய் விளங்கும் வஸந்தன் தனது உருவத்துடன் பிரகாசித்துக்கொண்டு சோபிக்கலானான்.

### வஸந்தகால வருணனை.

25. காலமில்லாத காலத்தில் சூரியபகவான் வடதிசையைநோக்கிச் செல்ல ஆரம்பிக்கவே தென்திசை என்ற மாதுசிரோமணி தனதுநாயகன் தன்னை விட்டுப்பிரிந்த துக்கத்தால் பெருமூச்சு விடுவதுபோல் வாஸனையோடுகூடிய தென்றற்காற்றை தனது முகத்தால் வெளிவிடலானாள்.

26. அசோகமரம் அடிமுதல் தளிருடன் மலரெடுக்கத் தொடங்கிற்று சலங்கை ஒலிக்கும் நூபுரங்களணிந்த கட்டழகிகளின்கால்களால் உதைக்கப்பட்டுத் தான் மலர்கொடுக்கவேண்டுமென்று அவைகள் காத்துக்கொண்டிருக்கவில்லை. *

* அசோகமரங்கள் புஷ்பிக்காவிடில் உத்தமிகள் தண்டைகளணிந்த கால்களால் உதைத்தால் அவைகள் புஷ்பிக்கும் என்பது ஓர்விதக் கொள்கை. அவ்வாறே மகிழமரம் மடந்தைகள் தங்கள்வாயில் கள்ளையூற்றிக்கொண்டு அம்மரங்கள் மேல் உமிழ்ந்தால் புஷ்பிக்கின்றனவென்பதும். உத்தமிகளால் பார்க்கப்பட்ட மாத்திரத்தில் மருதனை மலர்கின்றதென்பதும் கட்டிக்கொண்ட மாத்திரத்தில் இலகம்என்ற மரம் மலர்கின்றதென்பதும் கொள்கை.

27. மன்மதனுக்கு பாணங்களைச் செய்துகொடுக்கும் வஸந்தன் (என்ற கருமான்) அப்பாணங்களாகின்ற மாமலர்களுக்கு இரண்டு பக்கங்களிலேயும் கட்டப்பட்ட இறகுகள்போல் விளங்கும் இளந்தளிர்களை அமைத்து முடித்து மன்மதனுடைய பெயரின் எழுத்துகளை அப்பாணங்களின்மேல் வெட்டுவதுபோல் அம்மலர்களின்மேல் வண்டுகளை உட்காரவைத்தான்.

28. கருணிகார மலர் பலவித உயர்ந்த நிறங்களுடன் கூடி விளங்கியபோதிலும் வாஸனையற்றதாக விருந்ததால் பார்ப்பவர்கள் மனத்தை அது வருத்திற்று. பெரும்பாலும் பிரமதேவனுடைய முயற்சி எல்லாவித உத்தமகுணங்களையும் ஓரிடத்தில் சேர்த்துவைப்பதில் கவனிப்பற்றதன்றோ?

29. நன்றாக மலராதபடியால் இளஞ்சந்திரன் போல் வளைந்து வெகு சிவப்பாய் விளங்கிய பலாச மொட்டுகள் அப்பொழுதுதான் வஸந்தன் என்ற நாயகனுடன் காதலிற் கலந்த வனதேவதையின் மார்பின்மேல் காணப்படும் நகக்காயங்கள்போல் சோபித்தன.

30. வஸந்தலட்சுமீ வண்டுகளின் வரிசைகள் படிந்து அழகாய்க்காணும் திலகமலரையே தனது முகத்துக்கு ஒரு திலகமாக அணிந்து மாந்தளிராகிய தனது உதட்டை இளஞ் சூரியகாந்தியாகின்ற சிவப்பினால் அலங்கரித்துக் கொள்ளலானாள்.

31. கொன்றைமலர்க்கொத்துகளினின்று விழும் பூந்தாதுகளால் தங்கள் பார்வை மறைக்கப்பட்டவைகளாய் மான்கள் மதத்துடன் காற்றுக்கெதிராக அக்காட்டில் மர்மர சத்தத்துடன் சருகுகள் உதிரும் வனத்தில் சஞ்சரிக்கலாயின. *

32. மாந்தளிர்களைப் புசித்தகாரணத்தால் வெகு மதுரமான குரலுடன் ஆண்குயில்கள் கூவினது தங்கள் கணவர்களிடம் கோபித்துக்கொண்டிருந்த மடந்தைகளுக்கு அக்கோபத்தைவிடும்படி மன்மதன் இட்ட கட்டளையாய் அந்த சத்தம் விளங்கிற்று.

33. பனிநீங்கிய காரணத்தால் வெடிப்பற்ற உதடுகளை உடையவர்களும் குங்குமம் தரிக்காத காரணத்தால் நன்றாக வெளுத்த முகமுடையவர்களுமான அப்ஸர மடந்தைகளுக்கு அவர்கள் பச்சை குத்திக்கொண்டிருந்த இடங்களில் வேர்வை தோன்றலாயிற்று.

* (எவ்வளவோ ஸங்கடங்களிருந்தும் மதத்தின் மிகுதியால் மான்கள் அவ்வாறு சஞ்சரித்தன என்றபடி.

## உழவுநூல்

## AGRICULTURE

(185-ம் பக்கத்தொடர்ச்சி)

7. விதை பொறுக்கல் விதையைக் காப்பாற்றல்.—ஒவ்வொரு வகை தானியத்திலும் முதிர்ந்து பருத்த நோவற்ற கதிர்களை அறுவடை காலத்தில் கவனமாய்ப் பொறுக்கி அவைகளில் நன்றாய் விளைந்த கதிர்களின் மேல் பாகத்தை மட்டும் எடுத்து விதைகளை உலர்த்திக் காப்பாற்றவேண்டும். நன்றாய் பழுக்காத கீழ்தானியங்களை விதையுடன் கலந்து எடுக்கலாகாது. கலந்த விதைகளை விதைத்தால் பயிர் ஒரே காலத்தில் மகசூலுக்கு வருவதில்லை. சில கதிர்கள் முற்றி அறுவடையாகுங் காலத்தில், சில முற்றாமலிருக்கும். இதனால் இரண்டு மூன்று தடவை கதிர்களை அறுக்க நேரிடும். இதனால் குடியானவனுக்கு வெகு கஷ்டம், நஷ்டம். இரண்டு மூன்றாவது தடவைகளில் அறுக்கும் கதிரும் பெரிதாயிராது மகசூலும் இளப்பமாகும். "பருவத்தே பயிர் செய் என்ற ஔவையார் வாக்கியமும் பாழில் போட்டாலும் பட்டத்தில் போடு" என்பதையும் பயிரிடும்குடியானவன் மறக்கக்கூடாது. விதை நன்றாய் பொறுக்காவிட்டால் மேற்கண்ட பழமொழிகள் பொய்யாய்ப்போம்; எப்படியெனில் தானியங்கள் அறுவடையாகும் காலம் நீடிக்கும்; பனிகாலத்தில் தானியங்கள் முற்றுவதற்குக் கெடுதி நேரிடும் அந்தகாலத்தில் பூச்சிகள் விழுந்து தானியத்தின் சத்துக்களை ஒழுகச் செய்து விடுகின்றது. விதை பொறுக்கல் என்பதையே அநேகர் கவனிப்பதில்லை. பயிரில் மகசூல் குறைவதற்கு காரணம் இதுவும் ஒன்று என்பது பயிரிடுபவர்களுக்குத் தெரியாதவிஷயம்; விதையொன்று போட சுரையொன்று முளைக்குமா" என்பதை அவரைபோட அவரைதான் வரும், துவரை போட துவரைதான் வரும் என்ற மேலான பாவத்தைமாத்திரம் கொள்ளாமல் நன்றாய்ப்பழுத்து முதிர்ந்த பொறுக்கியெடுத்தவிதை போட்டால், ஒரே காலத்தில் சீக்கிரத்தில் கதிர்கள் முற்றி நோவிற்கு உட்படாமல் நல்ல மகசூலைக் கொடுக்குமென்னும்ஆழ்ந்த அர்த்தத்தை உபயோகிக்கவேண்டும். விதைகளைப் பூச்சிகள் தின்றுவிடாமல் பிரதி அமாவாசைகளிலும் வெய்யிலில் உலரவைக்க வேண்டும். சோளம், பயிறு, மொச்சை, தட்டை எள் முதலிய விதைகளைப் பூச்சிகள் கெடுத்து விடுகின்றன. விதைகள்

கோணிச்சாக்கில் வைத்து வைத்தால் பூச்சிகளால் கெட்டுப் போகிறதில்லை. பானைகளில் சுண்ணாம்பு நீற்றை உள்ளே பூசி வெய்யிலில் நன்றாய்ப் பானையைக் காயவைத்து விதையைப்போட்டு சாம்பல் பொடி ஒன்று ஒன்றரை அங்குல கனம் மேலே தூவி சுண்ணாம்பு நீர் ஒர்தானியகனம் மேலே தூவி பிறகு சாம்பல் கொஞ்சம் தூவி வைக்கோல்தெளித்து சாணி பூசிவிட்டால் பூச்சிகளால் விதைகள் கெடுதியாக இடமிராது. நெல்விதையை வைக்கோல் புரியால் கோட்டை கட்டி வைக்கலாம். மக்காச்சோள விதையைக்கொஞ்சம் தாருடன் பூசிக்காப்பாற்றினால் பூச்சிகளும் அண்டாது. விதைத்தபின் காக்கைகளும் விதைகளைப் பொறுக்கித் தின்றுவிடாது. கொஞ்சம் மைல்துத்தம் (Copper sulphate) மண்பாண்டத்தில் போட்டு ஜலத்தைவிட்டுக் கரைத்து விதைக்குமுன் சோள விதை போட்டு 10-நிமிஷம் ஊறவைத்துக் கழுவின விதையை விதைத்தால் பயிர் அதிக நோவுக்கு உள்ளாகாது. விதைப்பதற்குப் போதுமான ஈரம் பூமியில் இல்லாவிட்டால் சோளவிதைகளை சாணிப்பாலில் விதைப்பதற்கு முதல்நாள் ராத்திரி கலந்துவைத்து விதைக்கலாம். விதைத்த பிறகு இலேசான மரஉருளையை பூமியின்மேல் போகவிட்டால் விதை மண்ணுடன் நன்றாய்ச்சேர்ந்து முளைக்கும். நிலத்தின்மேலீரம்சீக்கிரம்ஆவியாய்ப்போகாது. மொச்சை துவரை முதலிய வித்துகளை தண்ணீரில் செம்மண் கரைத்து அதில் போட்டு எடுத்து நன்றாய் உலரவைப்பதால் விதைகள் காப்பாற்றப்படலாம். பருத்திக்கொட்டையைச்சாணத்தில் தேய்த்து உலர வைத்துக் காப்பாற்றலாம். கொஞ்சம் மயில்துத்தம் பொடிசெய்து சோளவிதைகளுடன் கலந்து விதையைக்காப்பாற்றலாம். அதிகமாய்ச்சேர்த்தால் விதை முளைக்கும்சக்திக்குறைவாய்ப்போகும். ஆகையால் இதை உபயோகிக்காமலேயிருப்பது நலம். உபயோகிக்கும் விஷயத்தில் வெகு ஜாக்கிரதைவேண்டும்.

8. தோப்புகளும் விருக்ஷங்களும் வைத்துப் பயிர்செய்தல்:--கவர்ண்மெண்டாரால் பாதுகாக்கப்படும் காடுகளிலிருக்கும் விருக்ஷங்கள் தவிர மற்ற இடங்களிலிருக்கும் விருக்ஷங்கள் எல்லாம் அநேகமாய் நம்முன்னோர்கள் காலத்தில் வைத்து விருத்தி செய்யப்பட்டதாகயிருக்கிறதே யொழிய நம்முடைய தலை முறையில் வைத்து விருத்தி செய்யப்பட்டவைகள் வெகு கொஞ்சமாயிருக்கும். ஆனால் நல்லஜாதி பலவிருக்ஷங்களாகிய (Fritt trees) ஒட்டுமா, மாதுளை, கொய்யா, பலவகை கிச்சிலி, தென்னை பாக்குமுதலியவைகள் ஏதோ கொஞ்சம் கருத்தும் கவனமுமுள்ளவர்களால் வைத்துவிருத்தி செய்யப்பட்டு வருகிறதே யொழிய பெரும்பான்மை யோரால் கவனிக்கப்படுகிறதில்லை. மேற்கண்ட நல்லஜாதி விருக்ஷங்கள் பயிராகக்கூடாத நீர்வளம் நிலவளம் குறைந்துள்ள வேலியோரம் மேட்டுப்பாங்கு, ஓடை உடைப்பு, கல்லாம்பரிசு முதலிய சாகுபடிக்கு லாயக்கில்லாத நிலங்களில் பயிர்த்தொழிலுக்கு அவசியமான கலப்பை நுகத்தடி, கருவத்தடி, மண்வெட்டி கோடாலிக் காம்புகள், முள்பாம்பு முதலிய பலவித விவசாயக்கருவிகளுக்கும் பந்தற்கால்களுக்கும் வண்டி முதலியது செய்வதற்கு தேவையான கருவேல், வேம்பு, புளி கொருக்காப்புளி, இலுப்பை, ஆல், பனை மூங்கில் முதலிய விருக்ஷங்களை வைத்து விருத்திசெய்தால் ஆடு மாடுகள் வெய்யில் வேளையில் நிழலில் நிற்கவும், விறகுக்கும் கட்டடவேலைகளுக்கும் போதுமான மரங்கள் நம்மிடத்திலேயே கிடைக்கும். இதனால் நம்முடைய மாட்டுச்சாணத்தை அடுப்பெரிக்க உபயோகிக்காமல் பலன் தரும் எருவாக உபயோகப்படுத்தலாம். விறகு அதிகமாயிருந்தால் செங்கல்ஓடு சுண்ணாம்பு முதலியகால்வாய்களுக்கு உபயோகப்படுத்தி கட்டடங்கள் கட்டிக்கொள்ளலாம். இவ்விதமாய் தோப்புகள் வைத்து ஜனங்கள் விருத்தியடைய வேண்டுமென்ற எண்ணங்கொண்டே நமது காருண்ணிய கவர்ண்மெண்டால் கவுல் தோப்பு ரூல்களின் கீழ்தீர்வை சகாயமாக நெடுநாளாக கைப்பற்றிற்கு வராமலிருக்கும் தருசுநிலங்களை கேழ்க்கும் குடிகளுக்கு தோப்பு வைக்க அடமானம் செய்கிறார்கள். அம்மாதிரி தருசு நிலங்கள் இருந்தபோதிலும் குடிகள் இதன் பயனை அனுபவியாமலிருப்பதற்கு மேற்படி சாதனங்களை குடிகள் தெரிந்துகொள்ளாமையே காரணம். மரங்கள் வைப்பதனால் மரங்களின் வேர் பூமியில் நன்றாய்ப்பரவி கெட்டியான பூமியைப் பிளக்கும்படி செய்து, பிறகு சாகுபடிக்கு லாயக்காகக் செய்கிறதும் தவிர அதன் கீழ் சேரும் மட்கின இலை தழைகளும் நல்ல எருவாகி அந்த நிலத்தில் பயிர் நன்றாய் வருமென்பதற்குக் கொஞ்சமெனும் சந்தேகமில்லை.

S. சிதம்பர அய்யர்.

## சுகாதாரவிளக்கம்

### HYGIENE

(பண்டித நடேசசாஸ்திரியார் எழுதியது)

### ஆறுவது அத்தியாயம்

#### உணவு

78. ஆகாரத்தைச் சேறித்துக்கொள்ள நமது தேகத்துக்குள்ளிருக்கவேண்டிய நிலைமை.—நமது நாவினின்றும் வாயினின்றும் ஊறும் உமிழ்நீர், நமது தேகத்திலிருக்கும் உணவு செல்குழாய்க்குள் சில திரவபதார்த்தங்கள் (bile, gastric juice) இவைகள் நமது ஆகாரத்தோடு கலந்து அவ்வாகாரத்தைமாற்றுவது, அவ்வாறு அவ்விரஸங்கள் கலக்க நமது தேகத்தின் இரத்த ஓட்டம் சீரானநிலைமையிலிருப்பது இவைகளேயாம்.

79. அதிக ஆகாரம்.—அதிக ஆகாரத்தை நாம் புசிப்பதால் அவ்வாகாரத்தை நாம் ஒருபொழுதும் செறித்துக் கொள்ளமாட்டோம். அதிகமாகச் செலுத்தும் போஜனம் நமது ஆகாரப்பையில் முற்றிலும் இரத்தமாக மாறுபடாமல் அழுகி அபானவாயுவை வயிற்றிலுண்டாக்கி அஜீர்ணம், மலபந்தம், பேதி, வயிற்றுப்போக்கு முதலிய நோய்களை விளைவிக்கும். சிலவேளை ஒருவித ஆகாரம் அதிகமாகலாம்; நெய், சர்க்கரை அல்லது உப்பு இவைகளைப்போன்ற ஒரேவித ஆகாரத்தை நாம் அதிகமாகப் புசித்து வரலாமா? இவ்வாறு நாம் செய்வோமாயின் வயிற்றில் கட்டி, சந்து வாதம், நீர்ரோகம் முதலிய நோய்கள் விளையக் காரணமுண்டாம். அதிக ஆகாரம் புசிப்பதுடன் தேகவியாபாரமுமில்லாதிருக்குமாயின் தீயுடன் காற்றுச் சேர்ந்தவாறு: முற்கூறிய நோய்கள் சடுதியிற்றோன்ற விடமுண்டாம். எளிதில் தேகத்தில் கலக்காத பானங்களை உட்கொள்ளுவதாலும், எளிதில் செறிக்கக் கூடாத ஆகாரத்தைப் புசிப்பதாலும் சந்துவாத ரோகங்கள் உண்டாய் நம்மை வருத்தும். கஞ்சி அதிகமாக நிற்கும் ஆகாரங்களைப் புசித்தலால் நீர்ரோகம் விளையும்.

80. குறைந்த ஆகாரம்.—யவசாரம் நிரம்பிய ஆகாரம் கிட்டாமற் போனால் ஒரு வாரத்துக்குள் ஒருவன் பாதிபலம் குறைந்து, காய்ச்சல், பித்தபாண்டு இவ்விதரோகங்களால் வருந்துவான். அதன் பிறகு அவனுக்குக் கால் ஓய்ச்சல் கையோய்ச்சல் உண்டாகும். கொழுப்பு சர்க்கரை யிவைகள் ஒன்றுமின்றி யவசார ஆகாரமே ஒருவன் 5, 6-நாட் புசிக்கும்படி வந்தால் அவன் விஷஜ்வரம் முதலிய நோயில் விழுவான்.

பலநோய்கள் பலவாறு விளைய முக்கிய காரணங்கள் ஆகாரத்திலும் நமது தேகத்திலும் இருக்கும் குறைகளே. இக்குறைவுகளால் அஜீர்ணம் உண்டாகின்றது. மப்பு வயிற்றிற்றோன்றியதும் அம்மப்பு வெப்பத்தாலும், சீதத்தாலும், காற்றாலும், அதிகரித்து பேதி, வயிற்றுக்கடுப்பு முதலிய ரோகங்களை உண்டாக்குகின்றது. ஆகையால் நாம் உணவின் குணகுணங்களைப்பற்றி விசாரிக்கும்பொழுது அவ்வுணவில் நாம் மேற்கூறிய நான்குவிதச் சேர்க்கைகள் சரியாகவிருக்கின்றனவா, அவ்வுணவு சரியாகச் செறிக்கப்படும் நிலைமையிலிருக்கின்றதா, அவ்வுணவைப் புசிக்கின்றவன் அதைச் செறித்துக் கொள்ளும் சக்தியைச் சரிவர அடைந்திருக்கின்றானா, அவ்வுணவின் குணம் அது சமைக்கப்பட்டதற்கு முந்தியும் பிந்தியும் ஏதாவது மாறுபாடை அடைந்திருக்கின்றதா என்று விசாரித்துக்கொள்ள வேண்டும்

81. களிப்பு, கலாய்.—ஆகாரத்தைப் பற்றிச் சொல்லும் சுகஸந்தர்சன தீபிகையில் போஜன பதார்த்தங்களை விவரித்து எழுதுவது வழக்கம். அவ்வாறு எழுத நமது சிறு புஸ்தக மிடங்கொடுக்காது. போஜனங்கள் சமைக்கப்படும் பாத்திரங்கள், கட்டிடங்கள் இவைகளைப்பற்றி யிங்கு சொல்லி இவ்வத்தியாயத்தை முடிப்போம். எல்லாவித சௌக்கியமும் மட்பாண்டங்களில் நமது உணவைச் சித்தப்படுத்துவதால் உண்டாகின்றது என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சித்தாந்தம். இக்குணத்தை உத்தேசித்தே மட்பாண்டங்களுக்கு ஸுவர்ண பாத்திரம் என்ற பெயரும் மரியாதையாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அவ்வாறு மட்பாண்டங்களை உபயோகிப்பது நாகரீகத்துக்கும் சமயத்திற்கும் குறைவென்று பலவாறு கருதிப் பெரும்பாலுமிப் பாண்டங்களை யிப்பொழுது நமது நாட்டார்கள் நீக்கிவிட்டார்கள். இக்காலத்தில் எல்லோரும் பித்தளை, வெண்கலம், ஈயம், இரும்பு, இனமல் இவ்வகைப் பாத்திரங்களை உபயோகிக்கின்றார்கள். பித்தளை செம்பு இவ்வகைப் பாத்திரங்களை உபயோகப்படுத்தும்பொழுது களிம்பூறாதபடி வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். புளிப்பு சம்பந்தப்படாமலும் எண்ணை முதலியவைகள் சில சமயங்களிற் சம்பந்தப்படாமலும் பார்க்கவேண்டும். இவைகள் சம்

பந்தப்பட்டால் உடனே களிம்பு தோன்றும். இக்களிம்பு பலவித நோய்களையும் சிலசமயங்களில் மரணத்தையும் உண்டாக்கும். பித்தளைப்பாத்திரங்களிற் களிம்பூராதபடி கலாய் பூசுவார்கள். இதில் காரீயம் சம்பந்தப்படுவதாற் பலவித வியாதிகளுண்டாகலாம். அவ்வாறுண்டாகாதபடி வெள்ளை ஈயம் கலாயில் உபயோகப்படும்படி நாம் கவனமாகப் பார்க்கவேண்டும். ஒரு தின்பண்டத்தைக் கையால் தொட்டு இலைகளிற் பரிமாருதபடி எல்லாம் அகைப்பைகளாற் பரிமாற முற்றிலும் வழக்கஞ்செய்யவேண்டும்.

82. சமையற்கட்டு.—சமையற்கட்டு அநேக வீடுகளில் ஒரு ஒதுக்குப்பக்கத்தில் அதிக காற்றோட்டமில்லாத விடத்தி லிருக்கலாம். ஆனாலவ்வாறு ஒருபொழுதுமிருக்கவே கூடாது. நல்ல வெளிச்சமும் நல்ல காற்றும் நமது உணவு சித்தமாகும்பொழுதே அவ்வுணவுக்கு வேண்டும். சமையற்கட்டைச்சுற்றி ஒருவித நாற்றமும் இருக்கக்கூடாது. சமையற்கட்டிலுண்டாகும் புகை அவ்விடத்திலேயேசூழ்ந்துநின்று நமது உணவிற்குச் சித்தப்படுத்தப்படும் உண்டிகளைப் புகைநாற்ற மேறும்படி செய்யாம லவ்விடத்தைவிட்டு உடனுக்குடனே அகன்றுபோக புகைபோக்கி ஒன்று விதிப்படி கட்டப்பட்டிருக்கவேண்டும்.

83. உணவை உட்கொள்ளும் விதம்.—ஒவ்வொருவனும் சாப்பிட உட்காரும் முன், நன்றாக ஸ்நானம் செய்துவிட்டுப் பரிசுத்தமான வஸ்திரம் தரித்துக்கொண்டு சாப்பிட உட்காருவானேயானல் அதனுல் உணவு ஜீரணமாதல் அதிகரிக்கிறது. இதை உத்தேசித்தே நமது நாட்டிற் சில ஆசாரங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகள் மதவிஷயமாய் மட்டுமுண்டானவையல்ல. தேக சௌக்கியத்தைக் குறித்து முண்டானவைகள். குறைந்தபக்ஷம் ஐந்து பிரதேசங்களையாவது பரிசுத்தமாகப் பண்ணிக்கொண்டு ஒருவன் போசனம்செய்ய உட்காரவேண்டும் என்று "வைத்திநாத தீக்ஷிதீயம்" என்ற கிரந்தத்திற் சொல்லப் பட்டிருக்கின்றது. அவ்வைந்து பிரதேசங்கள், இரண்டு கால்கள், இரண்டுகைகள், வாய் இவையேயாம். நாம் சாப்பிட உட்காருமிடம் நல்ல காற்றோட்டமும் வெளிச்சம் இவைகளமைந்த விடமாக விருக்கவேண்டும். நாம் போஜனம் பண்ணும்பொழுது சந்தோஷத்துடனும் உற்சாகத்துடனும் சிரித்துப் பேசிக்கொண்டு போஜனம் பண்ணவேண்டும். உற்சாகம், களிப்பு இவைகளெல்லாம் நமது தேகத்துக்குட் சில ரஸங்கள் (Gastric juice) ஏராளமாகப் பெருகச்செய்து நமது ஜீரணசக்தியை அதிகரிக்கின்றன. நாம் புசிக்கும்பொழுது நமது ஆகாரத்தின் ஒவ்வொரு பிடியையும் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டுக்கொண்டு நன்றாக மென்று உட்கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் நமது எச்சில் நன்றாக உணவுடன் கலந்து சீரணத்தை சுலபப்படுத்தும். வாயில் உணவைப்போட்டு மென்று கொண்டிருக்கும்பொழுது பேசக்கூடாது. பிடிக்குப்பிடி தீர்த்தம் குடிப்பவன் வெகு சீக்கிரத்தில் அஜீர்ணம் என்ற வியாதிக்கு உள்ளாவான். மனைவியாகுலம் தேகசிரமமுள்ள வேலைகள் இவைகள் ஒன்றும் நாம் புசிக்கும் காலத்திற்கு அரைமணி முன்னும் அரைமணி பின்னும் கொஞ்சமேனும் நமக்கிருக்கக்கூடாது.

84. மலபந்தம்.—ஒருவன் எவ்வளவுதான் தனவானாக விருந்தாலும் உயர்ந்த பதவியிலிருப்பவனாக விருந்தாலும் அவனுக்கு மலபந்தம் என்ற வியாதியிருக்கும் பட்சத்தில் அவன் ஒருபொழுதும் ஒருவித சுகத்தையும் அடையமாட்டான். கொஞ்சம் கனிவர்க்கங்கள், கீரைகள் இவைகளை ஆகாரத்துடன் புசிப்பதால் இந்த வியாதியை நாம் நீக்கிக்கொள்ளலாம். இதில் சரிப்படாமற்போனால் சாதாரணமானமருந்தால் தினந்தோறும் காலை ஒருதடவையாவது இவன் மலசோதனை செய்துகொள்ளவேண்டும். ஒவ்வொருவனும் இரண்டொரு கவளம் புசித்துவிட்டால் நமது பசி முற்றிலும் அடங்கலாம் என்றிருக்கும் பொழுதே அவ்விரண்டொரு கவளத்தை நிறுத்திப் புசிப்பைவிட்டு எழுந்திருக்கவேண்டும்.

85. மிதபோஜனம்.—மிதமாகப்புசிக்காமல்அதிகமாகப் புசிப்பதால்ஜனங்கள் பலவித நோய்களை வரவழைத்துக் கொள்ளுகிறார்களேயன்றி குறைவாகப் புசிப்பதால் ஒருவரும் இறந்துபோதலில்லை என்பது சித்தாந்தம். அதிகமாகப்புசித்தால்பருத்ததேகமுள்ளவர்களாய்ப் பலவித நோயில் வருந்தி பாரிசவாயு, சந்திவாயு முதலிய ரோகங்களுக்கு இரையாவார்கள்.

# நீலி வசீகரம்

## TAMING OF THE SHREW

(187-ம் பக்கத்தொடர்ச்சி)

போ.—நீ சேற்றைப்பையல், உனக்கென்ன, காதலின் குணம் இன்னதென்றுதான் தெரியுமா? அதற்குள் வந்துவிட்டாயா பெண்டாட்டிக்கு?

சுப்.—நான் சேற்றைப்பையலாகவேயிருக்கட்டும். நீ பல்போன கிழவனுயிற்றே. காடு வாவாவென்கிறது; உனக்கென்ன கலயாணம்?

போ.—சீ! அற்பப்பையலே! அதிகமாகப் பேசாதே. வயதானவர்க்குத் தான் காதல் அதிகமாகவிருக்கும்.

சுப். ஆனால், ஸ்திரீகள் வாலைப்பருவமுள்ளவர்களைத் தான் விரும்புவார்கள்; அதை நீர் அறியவில்லையோ?

ரத.— பொறுங்கள், பொறுங்கள், நீங்கள் சண்டையிட்டுக்கொள்வது அழகாகவில்லை. நான் ராஜி பண்ணிவைக்கிறேன். யார் அதிகமான பணங்கொடுக்கிறாரோ, அவருக்குத் தான் எனது வசிதையைக் கொடுப்பேன்.—பொன்னம்பலத்தேவரே! நீர் எவ்வளவு கொடுப்பீர்?

போ.—முதலில் இத்தத் தெருவிலேயே எனது வீடு மூன்று மெத்தைவைத்துக் கட்டப்பட்டது இருக்கிறது; அதிலுள்ள தட்டு முட்டு சாமான்களுக்கு அளவில்லை; விதம் விதமான அழகிய திரைச்சீலைகள், தந்தப்பெட்டிகள் இருப்புப்பெட்டிகள் கருங்காலி இருக்கின்றன; ஆடை யாபரணங்களைக் கணக்கிட்டுச் சொல்வதற்கியலாது; காச்மீரச் சால்வைகள் காசிப்பீதாம்பரங்கள், டாக்கா மஸ்லின் தினிசுகள், சித்ராஸநங்கள் இன்னும் விதம்விதமாக இருக்கின்றன. ஆள்கைக்கு வேண்டிய வெள்ளிப்பாத்திரங்கள்; அநேக முள்ளன; காராம் பசுக்கள் நூறு இருக்கின்றன, குதிரைகள் ஆறு இருக்கின்றன; விலையுயர்ந்த வண்டிகள் பலவிருக்கின்றன. இவைகள் எல்லாம் அவளுடையதாகும். எனக்கோ கொஞ்சம் வயது கூடத்தான் ஆகிவிட்டது; காலைத்தலையை வலித்ததானல் எல்லாம் அவளுடைய சொந்தப் பொருள்களாய் விடும். நான் இருக்கும் வரையில் இருவரும் அனுபவிப்போம்.

சுப்.—நான் சொல்வதைக்கேளுங்கள்: என் தகப்பனுருக்கு நான் ஏக புத்திரன்; அவருடைய ஆஸ்திக்கெல்லாம் நான்தான் வார்ஸு; உம்முடைய பெண்ணை எனக்குக் கொடுத்தால், பெரியபெரிய மாளிகைகளில் மூன்று நான்குஅவளுக்குக் கொடுத்து விடுகிறேன்; காவிரிப் பாய்ச்சலில் நூறு வேலி நிலம்அவள் அநுபவிக்கும்படி கொடுக்கிறேன்; அதனுடைய வரும்படியே செலவெல்லாம் போக வருஷமொன்றுக்குச் சுமார் இருபதினயிரம் ரூபா தேறுமே. என்ன பொன்னம்பலதேவரே! உம்மால் அவ்வளவு கொடுக்க முடியுமா?

போ.—அடேயப்பா! இருபதினயிரம் ரூபாவா. அது நன்செய் பூமி; இங்கே புன்செய் தானே? என்னுடைய நிலங்கள் முழுவதையும் விற்றாலும் அவ்வளவுக்குப் போதாதே!—நான்எனக்கிருந்தவற்றை யெல்லாம் சொல்லிவிட்டேன்; இனிமேல் கொடுப்பதாகச் சொல்வதற்கு ஒன்றுமில்லை; இதற்குச் சம்மதமானல் உமதுபெண்ணைக் கொடுக்கலாம்.

சுப்.—அப்படியானல், அவள் எனக்குத்தான் சொந்தம்; பொன்னம்பலத் தேவர்தான் தோற்றுப் போய் விட்டாரே?

ரத.—ஆமாம்; உமது தகப்பனர் இதற்குச் சம்மதிப்பாரோ, என்னவோ? சம்மதித்துவிட்டால் தான் நல்லது; அதையும் தெரிந்துசொல்லும்.—நாளைய ஞாயிற்றக்கிழமை கௌதமிக்குக் கல்யாணம் ஆகிவிடும்; அதற்கு அடுத்த ஞாயிற்றக்கிழமையும் ஒரு முகூர்த்தம் இருக்கிறதாம்; அன்றையதினம் வசிதையின் கல்யாணத்தையும் முடித்துவிடவேண்டும்—விஜயராகவ உடையாரே! அதற்குள் உமது பிதாவின் சம்மதம் வரவேண்டும்; இல்லாவிட்டால் பொன்னம்பல தேவருக்குத்தான் நிச்சயம் செய்து விடுவேன்—நான் போய்வருகிறேன். (போதல்.)

போ.—எலே! உன் அப்பன் சம்மதித்தானனல் அவனைப்போன்ற மடையவன் இல்லையென்றே சொல்லவேண்டும். தள்ளாத காலத்தில் ஆஸ்தியையெல்லாம் உன்னிடம் கொடுத்துவிட்டு, வாய்க்கு வேண்டியது கைக்கு வேண்டியதற்கு உன் முகத்தைப் பார்த்துக்கொண்டு நிற்பானென்று நினைக்கிறயோ; சோழ தேசத்தானுக்கா தந்திரம் தெரியாது? (போதல்.)

சுப்.—(தனிமையில்) போடா, பைத்தியக்காரப்பையலே! கொண்டதென்ன கொடுத்ததென்ன கோமுட்டி வீட்டுப்பெருச்சாளிக்கு?—எனது எஜமானருக்கு நன்மை செய்ய வெண்ணியே இந்த மாதிரி வேஷம் பூண்டு கொண்டு விஜயராகவ உடையாரென்று விளங்குகிறேன். இந்த மாதிரியே ஒரு போலித்தகப்பன் நல்லநாயகர் உடைய

என்று பேர் கொண்டு வரச்செய்கின்றேன். வந்தால் காரியசித்தியாய்விடும்; உலகத்தில் பிதா பிள்ளையை விரும்புவான்; இப்போது பிள்ளை பிதாவை விரும்புவது போலிருக்கிறது, என் செய்கை, சாமர்த்தியம் எங்கே போய்விட்டது? ஒரு கை பார்ப்போம். (போதல்)

## அங்கம் III.

### களம் 1. மதுரை ரகுநாத தேவரின் வீட்டிலோர் அறை.

(விஜயராகவ உடையார், பிரதாபருத்திர தேவர், வசிதேசுவரி வருதல்.)

விஜ.—ஓய்! வீணைக்காரரே! அவசரப்படாதேயுங்காண்! அதிக பரிச்சயம் உள்ளவர் போலப் பேசுகிறீரே? இவள் தமக்கை கௌதமி உமக்குச் செய்த மரியாதையை மறந்துபோய்விட்டீரோ?

பிர.—ஏன், ஐயா, வம்பு செய்கிறீர்? இவள் சாந்த சிரோமணியல்லவா? நான் முதலில் பாட்டுச் சொல்லிக்கொடுத்துவிட்டுப் போய் விடுகிறேன்; பிறகு நீர் பாடஞ்சொல்லிக்கொடுக்கலாம்.

விஜ.—பாட்டு எதற்காக உண்டாயிற்றென்று நீர் இன்னும் அறிந்து கொள்ளவில்லையே! பாவம்; அதிகமாகப் படித்துச் சிரமப்பட்டிருந்தால் பாட்டுக்கேட்டுச் சிரமபரிகாரமடையலாம், முதலில் நான் பாடஞ்சொல்லிக் கொடுத்துவிடுகிறேன்; பிறகு நீ உன் பாட்டை யாரம்பிக்கலாம்.

பிர. என் ஐயா, தொணதொணவென்று கத்துகிறாய்?

வசி.—நீங்கள் இருவரும் பேசாமலிருங்கள்; என்னைப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பையனென்று நினைக்கவேண்டாம்; மணிக்கணக்கின்படி நான் பாடம் படிக்கமாட்டேன்; எனக்கு எப்போது இஷ்டமோ அப்போது தான் இஷ்டப்பட்ட பாடத்தைப்படிப்பேன்.—நீங்கள் சண்டைப்பட வேண்டாம்; நீ போய் வீணையை எடுத்துவா; அதை மீட்டுவதற்குள் இவர் பாடம் முடிந்து விடும்.

பிர.—சரி, அப்படியே ஆகட்டும். (போதல்)

விஜ.—என் பாடம் முடியும்போது பார்த்துக்கொள்ளுவோம்.

வசி.—முன் பாடத்தை எங்கே நிறுத்தினோம்?

விஜ.— இங்கே:—

"யலாயவா யவோசீச; ஸ்துஸ்ச பிஸ்ச்வசாத்; ஷ்டுபிஷட்வயாதாந்தயோ"

வசி.—இதற்கு அருத்தம் சொல்லும்.

விஜ.—யலா = முன்னாலே சொன்னபடியே; யவா = நான் தான் வாஸ்தவமான விஜயராகவ உடையார், யவோசீச = தஞ்சை நகர் நல்ல நாயக உடையாரின் மகன்;—ஸ்துஸ்ச = உன்னைக்காதலிப்பதற்காகவே இவ்வாறு மாறு வேஷம் பூண்டேன்;—பிஸ்ச்வசாத் = விஜயராகவ உடையாரென்று பெயர் வைத்துக்கொண்டு இங்கே அடிக்கடி வருபவன்,—ஷ்டுபிஷ = எனது சேவகன் சுப்பராயன்—வயா = எனது வேஷம் பூண்டிருக்கிறான்,—தாந்தயோ = கிழவனை ஏமாற்றுவதற்காக.

பிர.—(திரும்பிவந்து). அம்மணி! எனது வீணை சரியாக விருக்கிறது.

வசி.—எங்கே; கேட்போம். (பிரதாபருத்திரன் வீணையை வாசித்தல்) ஐயையோ! ஸ்வரம் பேதமாகவிருக்கிறது.

விஜ.—முறுக்காணியைத் திருகிவிட்டு வாசியும்.

வசி.—அந்த வாக்கியத்துக்கு நானாகவே அர்த்தம் சொல்லிப்பார்க்கிறேன்:— யவாயவா = எனக்கு உன்னைத்தெரியாது;—யவோசீச = நான் உன்னை நம்பவில்லை;— ஸ்நஸ்சுபிஸ்ச்வசாத் = நாம் பேசுவது இவன் காதுகளில் விழாமலிருக்கும்படி ஜாக்கிரதையாகப் பேசு;— ஷ்டுபிஷ்டவயா = நான் இணங்குவேன் என்றுநம்பாதே;— தாந்தயோ = இருந்தாலும் அதைரியப்படாதே

பிர.—அம்மணி! இப்போது ஸ்வரம் சரியாகவிருக்கிறது. (தனக்குள்) இந்த வாத்திப்பையன் கூட ஏதோ விஷமம் பண்ணுகிறான் போலவிருக்கிறது. ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்.

வசி.—இருந்தாலும், உம்வார்த்தையை நம்புகிறேன்; வாத்தியாரே! நான் ஏதோ பராமுகமாகவிருந்தேனென்று எண்ணாதேயும்;

பிர.—ஐயா! உமது பாடம் முடிந்துபோய்விட்டதல்லவா? நீர் வெளியில் போகலாம்; நான் பாடந்துவக்கவேண்டும்.

விஜ.—ஏன், நான் இருக்கக்கூடாதோ? உமது பாட்டை நானும்கூடக் கேட்கிறேனே! (தனக்குள்) இவன்கூட இவள்மேல் பிரியம் வைக்கிறான்போலத் தோன்றுகிறது. ஜாக்கிரதையாகக் கவனிக்கிறேன்.

பிர.—அம்மணி! வீணை வாசிப்பதற்கு முந்தியே அதைப்பற்றிய மற்றைய விபரங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும்; வீணையின் நரம்பு ஏழு வகைப்படும், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்று; இவையே ஏழ்சுரம் எனவும் கூறப்படும்; ராகங்களில் முப்பத்திரண்டு வகையுண்டு; அவைகளைப்பிறகு சொல்லிக் கொடுக்கிறேன்; தாளம் ஏழ்வகையெனவும் கூறப்படும். சுரங்களையெல்லாம் வெகுஎளிதாய் மனதில் வைத்துக்கொள்வதற்கு ஒரு குறுக்குவழி சொல்லித்தருகிறேன்; இந்தக்கடிதத்தில் அதை எழுதி வைத்திருக்கிறேன்.

வசி.—சுரம் எனக்கு முன்னமேயே வந்துவிட்டதே.

பிர.—இருந்தாலும் சங்கீதவித்வான் பிரதாபருத்திர தேவரின் சுரவரிசையைப்படித்துப் பாரேன்.

வசி.—(மனதிற் குள்ளேயே படித்துவிட்டு) இது தானா சுருக்கமென்கிறீர்? இது எனக்குப்பிடிக்கவில்லை. பழைய "சரிகமபதநி" என்னும் ஸரளியே எனக்குப்பிடித்திருக்கிறது. புதிது ஒன்றும் வேண்டாம், எனக்கு.

# இந்துலேகை

## இரண்டாவது அத்தியாயம்

(ஒரு மலையாள நாவல்)

(முன் தொடர்ச்சி.)

---

இந்துலேகை பின்வருமாறு வாசிக்கலாயினள்!—

க்ஷாமக்ஷாம கபோலமாநநமுர:
காடிர்ய முக்தஸ்தநம்,
மத்ய: க்லாந்ததர: ப்ரகாம விநதா
வம்ஸௌளச்சவி: பாண்டுரா,
சோச்யாச ப்ரியதர்சநாச மதந
க்லிஷ்டேய மாலக்ஷ்யதே,
பத்ராணு மிவசோஷணேந மருதா
ஸ்ப்ருஷ்டா லதா மாதவீ.

[வண்மலர் கன்னமும் வறண்டு வற்றின
திண்ணிய கொங்கையும் திறந் திரிந்தின
நண்ணிய நடுவுமேல் நணிகிப் போயின
வண்ணமும் வெளிறின தோளும் வாடின;
உருக்கிளர் இளந்தளிர் உலரத் தீய்த்திடு
பொருக்கெனுந் தீவளி பொருந்த வாடிய
மருக்கமழ் மல்லிகை போன்ற மாதர்பால்
இரக்கமும் இன்பமும் ஒருங் கெழுந்தவே. *

"சிவசிவா!" என்றான் மாதவன், "இப்படிப் பட்டதொன்று மாத்திரம் நான் இப்போது காணக் கிடைக்கும் பட்சத்தில் என் வேதனையும் வியசனமும் பறந்தோடிவிடுமே."

"வாஸ்தவந்தான், ஆனல் நீ இக்காலத்தில் சகுந்தலையைப் பார்ப்பதற்கு சாத்தியமில்லையே, என்ன செய்கிறது?" என்றாள் இந்துலேகை, "ஆனபோதிலும் சகுந்தலையைப்பற்றியே நதேகத்தியானமாய்க் கண்ணைமூடிப் படுத்துறங்குவாயானல், ஒருவேளை கனவிலாகிலும் அவளுடைய உருவெளித்தோற்றம் உனக்குத் தென்பட்டாலும் படலாம்"

"இந்துலேகே! உனக்கு எவ்வளவோ அழகும் கல்வித்திறமும் இருந்தும் உன் மனம் கல்லென்றே எனக்குத் தோற்றுகிறது."

"வாஸ்தவந்தான்" என விடைபகர்ந்தாள் இந்துலேகை, "நான் மிகவும் கல்நெஞ்சமுடையவள் தான் ஆனலும் பரவாயில்லை. சாகுந்தலத்திலிருந்து இன்னொரு பாட்டு வாசிக்கிறேன் கேட்கிறையா?"

"என்ன பாட்டு அது?"

இந்து லேகை படிக்கிறாள் :—

அநாக்ராதம் புஷ்பம் கிஸலயம் அலூநம் கரருஹை:
அநாவித்தம் ரத்நம் மதுநவம் அநாஸ்வாதிதரஸம்
அகண்டம் புண்யாநாம் பலமிவ ச தத்ரூப மநகம்
ந ஜாநே போக்தாரம் கமிஹ ஸமுபஸ்தாஸ்யதி விதி:
[மோவா மலரோ நகங்களையாத முழுமுறியோ
ஆவா கருவி துருவாது பெற்ற அருமணியோ
நாவாற் சுவையாப் புதுநறவோ செய்த நற்றவங்கள்
தாவாதொருங்கு திரண்டுவந்தாலன்னதையலரே.]*

"இந்த சுலோகத்தை நான்கூட எடுத்துச்சொல்வேனே" என்றான் மாதவன்.

"அது சாகுந்தலத்தில் இருக்கிறது, யார் வேண்டுமானலும் பாடம் பண்ணிச்சொல்லக்கூடும்" என்று திருப்பிச்சொன்னாள் இந்துலேகை.

"மனிதர்களின் புத்தியினுடைய அகங்காரத்தைப் பற்றி யோசிக்கும்போது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது" என்றான் மாதவன்.

"நீ சொல்வது எனக்குத் தெரியவில்லையே" என்றாள் இந்துலேகை.

"மனிதர்கள் பொதுவில் பரஸ்பரம் ஜீவகாருண்யமுள்ளவர்களா யிருக்கவேண்டிய விஷயம் ஒரு பக்கமிருக்க, இரக்கங்காட்டவேண்டிய இடத்தில் ஒருவன் பரிகாசஞ் செய்யும்பட்சத்தில் அது அகங்காரந்தானே? அது தௌஷ்டியத்துடன் கூடிய அகங்காரமல்லவா?" என்றான் மாதவன்.

"பரிகாசஞ் செய்யும்பட்சத்தில் அது அகங்காரந்தான்" என்றான் இந்துலேகை.

"இந்துலேகை, நீ ஒருவரையும் எப்போதும் பரிகசிப்பதில்லையோ?"

"இங்கிலிஷ் புஸ்தகம் ஏதாவது வாசிக்கிறையா? உனக்கிஷ்டமானல் ஒரு புஸ்தகம் எடுத்துவருகிறேன்" என்றாள் இந்துலேகை வெகுசாதுவாக.

* பண்டிதர். நா. வேதாசலம் பிள்ளையவர்களின் சாகுந்தல மொழிபெயர்ப்பினின்றும் எடுத்தது.

"எனக்கு ஒன்றும் வாசிக்கவேண்டாம்" என்று உறுமினன் மாதவன்.

"அது போகட்டும் கொஞ்சம் டம்ஸ்கிருதம் பார்க்கிறதுதானே. இது பர்த்ருஹரிசதகம் இருக்கிறது" என்றான் இந்துலேகை.

"எனக்கு ஒரு புஸ்தகமும் படிக்கவேண்டாம். நீ தயவுசெய்து என்னை கேலிசெய்து கோமாளியாக்காமலிருந்தால் அதுவே போதும்" என்றான் மாதவன்.

"அப்படியானால் நான் கொஞ்சம் வீணை வாசிக்கின்றேன்; மனதில் வியாகுலம் இருந்தால் அது நீங்கிப்போய் உற்சாகமுண்டாகும்" என்றாள் இந்துலேகை.

"வீணைகேட்க எனகுப் பிரியமில்லை" என்றான் மாதவன்.

"அப்படியானால் படுத்துக்கொண்டுநித்திரைசெய்; சகுந்தலையை கனவில் காணவேண்டுமென்று அதே தியானமாயிரு. வேணுமானால் இந்த நாடகத்தையும் உன்பக்கத்தில் வைத்துக்கொள். இதோ சாகுந்தலம், வேண்டுமோ?" என்று சொல்லிக்கொண்டே இந்துலேகை அவனுக்குப் புஸ்தகத்தைக் கொடுக்கப்போனாள்; ஆனால் மாதவன்: "நீ ஏன் என்னை இப்படி கேலி செய்கிறாய்? இதில் உனக்கென்ன சந்தோஷம் இருக்கிறது" என்றான்.

"இது கேலியா? நான் அப்படி எண்ணவில்லை" என்றாள் இந்துலேகை, "நீ என்ன நினைத்தபோதிலும் இந்தச்சிறிய நாடகத்தில் எனக்கு அதிக ஆநந்தமுண்டாகின்றது. நீ சதுரங்கமாடாவிட்டால் அதைத்தான் நான் படித்துக்கொண்டிருக்கவேண்டும். இனியாகிலும், மாதவா, எழுந்துவா, உன் குதிரையைக் காப்பாற்றிக்கொள், நான் அதை வெட்டப்போகிறேன்."

"எனக்கு குதிரையும் வேண்டாம், யானையும் வேண்டாம், அது எக்கேடாவது கெட்டுபோகட்டும்" என்றான் மாதவன்.

"ஆகவே உனக்கு வேண்டியதெல்லாம் கூடி சகுந்தலையைப்பற்றி கனவு கண்டுகொண்டிருந்தால் போதும். அவ்வளவுதானே?"

"அப்படிதான், அப்படிதான், கெட்டியாய் பிடித்துக்கொள்" என்றான் மாதவன்.

"கேலிசெய்வதிருக்கட்டும்! நீ ஏன் இப்போது வேட்டையாடப் போகிறதில்லை மாதவா? ஒரு குண்டுவெடிகூட இப்போது காதில் படுவதில்லையே என்ன காரணம்?"

"எனக்கு ஒன்றிலும் மனமே செல்லவில்லை."

"என்ன! உனக்கு புத்தி மாருட்டம் ஒன்றுமில்லையே, இருந்தால் சொல்லு" என்றாள் இந்துலேகை.

"இருக்கிறதென்றே சில சமயங்களில் எனக்குத் தோற்றுகிறது" என்றான் மாதவன்.

"அப்படியானால், அதைப்போக்க ஏதாவது பரிகாரம் தேடவேண்டுமல்லவா?" என்றாள் இந்துலேகை.

"தேடவேண்டியதுதான்" என்றான் மாதவன்.

"அப்படியானால் நான் அதைப்பற்றி உன் தகப்பனாருக்கு உடனே சொல்லவேண்டும். இதோ போய்ச் சொல்லிவிடுகிறேன். ஆனால் இப்போது டீ பானம் செய்யும் சமயமாய்விட்டதே; நீகொஞ்சம் சாப்பிடுகிறாயா?"

"நிரம்பசந்தோஷம்; டீ ஒன்றும் எனக்கு வேண்டாம்."

"பலகாரம் வேண்டுமோ?"

"வேண்டாம்."

"உனக்கு உடம்பு என்னமாயிருக்கிறது? தேகஸ்திதி சரியாயில்லையோ?"

"எனக்கு எந்த விதத்திலும் சுகக்குறைவாசத்தான் இருக்கிறது"

"அப்படியானால்அது பலமான ரோகமாயிற்றே."

"பலமான ரோகமென்றே தோற்றுகிறது. இந்த வியாதியினின்றும் குணப்பட முடியுமோவென்றுகூட சிலசமயம் சிந்திக்கிறேன். எனக்கு முன்னிருந்த மனவமைதி மீண்டும் வருமென்று எனக்குத் தோற்றவேயில்லை. இந்துலேகே, இந்த சோபாவின்மேல் என்பக்கத்தில் கொஞ்சம் உட்காரேன். விரோதமுண்டோ?

"சீச்சீ! இப்போது நமக்கு வயதாய்விடவில்லையா? நாம் சிறுவயதில் விளையாடிக்கொண்டிருந்ததுபோல் இன்னமும் விளையாடுவது தகுதியல்ல" என்றாள் இந்துலேகை.

"என் பக்கத்தில் உட்கார உனக்கென்ன ஆட்சேபனை?" என்று வினவினான் மாதவன்.

"மிகவும் பலமான ஆட்சேபனையுண்டு. இப்போது நாம் ஒன்றாய் உட்காருவது ஒருபோதும் சரியல்ல"

"அப்படி உட்காரும் காலம் எப்போதாகிலும் வருமோ?" என்று மாதவன் கேட்டான்.

"நான் எப்படி நிச்சயமாய்ச் சொல்லலாம்? இனி வரப்போகும் காரியத்தை முன்னதாயறிந்துசொல்ல யாராலாகும்?" என்றாள் இந்துலேகை.

மாதவன் சிறிதுநேரம் எதைப்பற்றியோ தீர்க்கமாய்ச் சிந்தித்துக்கொண்டிருந்து கடைசியில் பெருமூச்செறிந்து சொல்லலுற்றான். "ஒருவராலும் ஆகாது வருங்காலம் நமக்குத் தெரியாமல் மறைந்திருக்கிறது வாஸ்தவமே."

இப்படி அவன் பேசிக்கொண்டிருக்கையில் டீ சாமான்களுடன் ஒரு வேலைக்காரன் பிரவேசிக்கவும் மாதவன் எழுந்து போய்விட்டான்.

(இன்னும் வரும்.)

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

"பெரியோன் ஒருவன்தான் அவனை பலர் பல விதமாக ஸ்துதிக்கிறர்கள்.—இது வேதவாக்கியம். மனைவிக்கும் கணவன் ஒருவன் தான் பெரியோன். அவனைச் சிலர் கணவன் என்றும், சிலர் உயிர்த் தோழன் என்றும், சிலர் கொழுநன் என்றும், சிலர் தலைவன் என்றும், இம்மாதிரி பலவிதமாகச் சொல்லுகிறார்கள். நான் அவரை எந்த மொழியாலழைப்பினும் அவர் எனக்காநந்தமளிக்கின்றனர். அவரைத் துதிப்பதென்றால் என் மனம் இனிமை அடைகிறது. என் வாய் படபடக்கின்றது. எனக்கும் தெரியாமல் மொழிகள் தாமே வாயிலிருந்து வெளிவந்து விடுகிறது. மெய்ம்மறந்து துதிக்க ஆரம்பம் ஆய்விடுகிறது. இந்த சுகத்தைக்காட்டிலும் சுகமுமுண்டோ; என் கணவனது நாமத்தை ஸ்மரிப்பதைக்காட்டிலும் பெரிய செயலு முண்டோ" என்றெவள் மனதிலுதித்து விளங்குகிறதோ அவள் தான் சரியான பெண்.

* * *

அன்பு, பகை இரண்டும் சம்பந்தமொழிகள். ஒருவரிடத்தன்பு என்றால் மற்றவரிடத்து பகை என்னும் அர்த்தம் கொஞ்சமேனும் புலப்படவில்லையா? எல்லாரிடத்திலும் பகை யில்லாவிடினும், வேண்டாமை இருக்கு மென்பதாவது நிஸ்சயமாகிற தல்லவா? வேண்டாமை இருந்தால் அதிலிருந்து பகை உண்டாவது கஷ்டமா? தன் ஆசைப் பொருளைக் கவருபவரிடத்து வேண்டாமைபோய் பகை உண்டாகு மென்பது நிச்சயமாகிறதல்லவா? மனைவிக்கும் தன்னுடைய ஆசைப் பொருளைக் கவர நினைத்தவனிடத்து பகை உண்டாகுமென்பது எளிதில் விளங்கும்.

* * *

"மானத்தைக் காட்டிலும் பெரிய பொருளுமுண்டோ? அதை அடைதலைக்காட்டிலும் பெரிய பெருமையும் உண்டோ? மானம் போய் விட்டால் மதிப்பும் போய்விடுகிறது. மதிப்பு போய்விடப் பிழைப்பு போய்விடுகிறது. பிழைப்பும் போய், பிராணனை வைத்துக் கொண்டிருப்பாரு முண்டோ? மானத்தைக் காப்பாற்றலே எனக்கு முதல் தொழில்! எவ்வித கஷ்டம்வந்தாலும் சரி, என் பிராணனேபோக நேரிட்டாலும் சரி, நான் அஞ்சேன். நான் மானத்தைக் காப்பாற்றித்தான் தீருவேன்" என்று எந்த ஸ்திரீயின் ஹ்ருயத்திலுதிக்கிறதோ அவள் நிஸ்சயமாகப்பெருமை அடைவாள்,

* * *

சோழமண்டலத்தில் கும்பகோண மென்றொரு ஊர். அவ்வூருக்கு அருகாமையில் ஒரு கிராமம். கும்பகோணம் கணபதிஅக்கிரகாரத்துக்கும் கிராமத்துக்கும் ஏழல்லது எட்டு மயிலிருக்கும். அந்த கிராமத்தில் ஒரு "ஸால்ட், அப்காரி இன்ஸ்பெக்டர்" இருந்தார். அவர் பெயர் ஸ்ரீனிவாஸபாட்ராசாரியன். வயது இருபத்தைந்து. இவர்க்கு சுகணவல்லித்தாயார் என்று பெயர்க்கொண்ட மனைவி இருந்தாள். இவள் தன் கணவன் சொல்லிய மொழி தவறாது அவர் இஷ்டத்திற்கு தகுந்த மாதிரி நடப்பவள்.

* * *

நல்லது உண்டென்றால் அதைக்கெடுக்கவேண்டும் என்றொரு ஆவல் வருவது உலகத்தி லெப்பொழுதும் சகஜம், அல்லவா? ஸ்ரீகிருஷ்ணன் அவதாரமானதும் அவரைக் கொல்லவேண்டுமென்று கம்ஸன் ஆவேசம் கொள்ளவில்லையா? தருமத்தைத் தடுக்கவென்று மாயை எதிரில் வந்து நிற்பதில்லையா? இது எங்கும் சகஜம் தான். பதிவிரதைகளிருந்தால் அவரது கற்பைக் கெடுக்க முயல்பவரும் உலகத்திலுண் டல்லவா?

* * *

சுகணவல்லியின் சிறுவயதின் பசுந்தளிர்போல் பரவி விளங்கிய அழகை அவளது குணம், சூரியகிரணத்தில் தளிர் விளங்குவதுபோல் பிரகாசிக்கச் செய்தது. அவ்வூரில் 'சாணன்' குலத்தில் வந்த வெள்ளையந்தேவன் என்பவனுடைய உடம்பெல்லாம் எரியச்செய்தது. கீழ்க்குலத்தில் பிறந்தவனிவன். மாதர் கற்பை அழிப்பதே இவன் தொழில். இரண்டு லக்ஷம்வரை சொத்துள்ளவன். ஆகையால், இவனை எதிர்ப்பவர் யாருமில்லை. சுகுணவல்லியின் அழகைக்கண்டு மயங்கிவிட்டான். "எப்பொழுதவளை அடைவது? எவ்வாறு அவளை அடைவது?"— இவைதான் முக்கியமாய் அவன் மனதைக்கவர்ந்தன.

* * *

பணம் என்றால் எதுதான் ஆகாது? எவ்விதமாகிய கொடுந்தொழிலையும் ஒரு நொடியில் செய்யச் செய்வதும் பணந்தான். ஸ்நேகத்தை புடைத்து பகையை மூளச்செய்வதும் பணந்தான். பக்தியையழித்து கொடுமையை முளைக்கச்செய்வதும் பணந்தான். பணத்தால் எதுதானாகாது? பணங்கொண்

டவன் குலத்தைக் கெடுக்கமுயன்றால் அது ஒரு மஹா கஷ்டமா?

***

வெள்ளையன் ஸ்ரீனிவாசபாட்ராசாரியனுடைய சேவகனுக்கு பணங்கொடுத்து கைவசஞ்செய்துக் கொண்டான். சுகுணவல்லியை சமயம் பார்த்து கும்பகோணத்தில் சேரச்செய்யும்படிச்சொன்னான். அவனுமாகட்டுமென்றான். ஸமயமும் வாய்த்தது. ஸ்ரீனிவாஸ பாட்ராசாரியன் வரிவசூலிக்க ஊர் விட்டுப்போக நேர்ந்தது.

***

"நான் வர கிட்டதட்ட ஒரு மாதம் பிடிக்கும். நீயோ சிறியவள். சாக்ரதை! சேவகனை வீட்டில் காவலிருக்கும்படிச் செய். நான் போகவேண்டிய வேலை மிகவும் முக்கியமானது. உன்னைப் பத்திரமாக நீயே பார்த்துக்கொள். நான் சொல்லியப்பிரகாரம் தவறாமலிரு" என்று ஸ்ரீனிவாச பாட்ராசாரியன்சொன்னான். "அதற்கேது தடை. உங்களுடைய அநுக்ரஹமிருக்கும்வரை எனக்கேது குறை. உமது ஆஞ்ஞையில் ஒரு எழுத்துக்கூடத் தவறமாட்டேன்" என்றாள் சுகுணவல்லி. அவள் கணவனும் ஊர்க்குப் புறப்பட்டுப்போனான்.

***

"பாலுக்குங்காவல் பூனைக்குந் தோழன்" என்றொரு பழமொழியுண்டு. அது நமது ஸ்ரீனிவாச பாட்ராசாரியன் சேவகனைப்பற்றி சொல்லியதாகத்தான் இருக்கவேண்டும். இவன் பாட்ராசாரியன் வீட்டிற்குங்காவல் வெள்ளையைத் தேவன் கூட்டுக்குந்தோழன். பாட்ராசாரியன் ஊருக்குப் போனதை வெள்ளையனுக்கும் தெரிவித்து விட்டான்.

***

நாமுலகில் கெடுதியில் பிரவர்த்தி யுடையவர்களுடைய செயல்களெல்லாம் மிக 'லேசில்' நடப்பதைக் காண்கிறோம். ஒரு பிராணி நல்லவனாயிருந்தால் அவனைக் கெடுக்க பலபேர் சேர்வது வழக்கமில்லையா? மலையிலிருந்து கல்லைக் கீழ்த்தள்ளிவிடுவது மிகச் சுலபம், கல்லை மலைமே லேற்றுவதுதான் கஷ்டம். பள்ளத்தில் விழுவது மிகக்கஷ்டமா? பெருமை அடைவதுதான் கஷ்டம். கீழ்மை அடைவது மிகச் சுலபமல்லவா? ஒருவரைக் கெடுக்க முயன்றால்—அதில் கையில் பணமுமிருந்து விட்டால்—கெடுதி செய்வது ஒரு நொடியிற் செய்துவிடலாம். செல்வச் செருக்கு எதைத்தான் செய்யாது?

***

வெள்ளையன் ஐம்பது ரூபாய்க் கொடுத்தான் பாட்ராசாரியன் சேவகன் சந்தோஷமடைந்தான். "இதை நீ தந்தி ஆபீஸ் வேலைக்காரனிடத்துக் கொடுத்து ஒருதந்தி அடிக்கும்படிச்செய்யவேண்டும். அவனிடத்திலிருந்து வந்தாற்போல இருக்கவேண்டும், இன்னமொரு ஐம்பது ரூபாய்த் தருகிறேன். இதை ஸாதாரணமாக அவன் வீட்டிற் கெப்பொழுதும் தந்தியைக்கொடுக்கும் சேவகனிடம் கொடுத்து, நான் அங்குதந்தியைக் கொடுக்கவேண்டுமென்று சொன்னதாக அவனுக்குச் சொல். சந்தேக முண்டாகும்படி நாம் ஒன்றும் செய்யக்கூடாது. சாக்ரதை! பத்திரமாகவேலை செய்." என்று வெள்ளையன் கூற, அவனுடைய ஏவலாளிபோல் ஆசாரியன் சேவகனும் மிக எளிதில் இவை செய்யலானான்.

***

"அவனும் யானும் ஒன்றேயன்றி வேறாகுமா? உடலிரண்டிருந்தா லென்ன? அதனால் ஒன்றும் தடையே கிடையாது. எனது கணவன் கஷ்டம் என் கஷ்டம்தான். என் கணவன் சுகம்தான் எனக்கு சுகம். என் கணவனை ஆதரித்தலன்றோ எனக்கு முதல் முதல் வேலை? அவரைப்பற்றிக் கவலையன்றி எனக்கு வேறு வேலையுமுண்டோ" என்று எப்பொழுதும் தன் நாயகனுக்குபயோகமாகி அவனையே பவிப்பவளாயுமிருத்தல்தான் மனைவியின் கடமை

***

சேவகனும் தந்தி கொண்டுவந்து கொடுத்தனன். கடிதத்தை விரித்து பக்கவீட்டி லிருந்தவர்களை அதற்கு அர்த்தம் சொல்லும்படியாகக் கேட்டாள். தன் கணவனுக்கு உடம்பசௌக்கியமென்றும், உடனே புறப்பட்டு மாயவரம் வரவேண்டுமென்றும் தந்திவந்ததைக்கேட்டு, ஐயோ! சுகுணவல்லி என்ன பாடுபடுகிறாள்! "தெரியாமல் அப்பொழுதே உம்மோடு வராமல் நின்றுவிட்டேனே! நாதா நீர் என்னகஷ்டப்படுகிறீரோ? ஆஹா! என்னைப்போல ஒரு குணங்கெட்ட ஸ்திரீயுமிருப்பாளோ! என்னகடுநெஞ்சுடையவள் நான்! என்னகஷ்டப்படுகிறாரோ? எந்த நிலைமையி லிருக்கிறாரோ?—" என்று பலவாறு மனம் குழம்பி ஒன்றும் தோன்றாது இருந்தவை இருந்த இடத்திலேயே இருக்க தனது பூட்டை முதலியவைகளைக் கட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டாள்.

***

பெண்டீர்களுக்கு மடமை தான் குணமென்று சொல்வது ஸ்வபாவமல்லவா? அடக்கமென்றுசொல்வதுகூட மடமையில்தான் கலந்துவிடுகிறதோ என்னமோ தெரியாது. அது எப்படி இருந்தாலுமிருக்

கட்டும். தனது கணவனுடைய நிலைமையையே தனது லக்ஷியமாகக்கொண்ட பதிவிரதைக்கு மடமைநீங்கித் தனக்குள் தெரியாமல் நாயக வாஞ்சையினால் தூண்டப்பட்ட ஒரு ஆவேசமுண்டாகிறதை யார்தான் பார்த்ததில்லை? இந்த ஆவேசத்திற்கு கணவனை உபசரித்தல் என்னும் நோக்கமன்றி வேறு நோக்கம் கிடையாது. இந்த ஆவேசத்தில் அடக்கம் மடமை எல்லாம் எங்கிருக்குமோ தெரியாது. கணவன்மேல் கருத்தொருமித்து இருப்பதுதான் நன்றாகத் தெரியவருகிறது.

* * *

சுகுணவல்லிக் கொன்றும் தோன்றவில்லை. சேவகனைக் கூப்பிட்டு கும்பகோணத்திற்கு ஒரு வண்டி பேசச்சொன்னாள். அவனையே துணையாகக்கொண்டு தனது நாயகனிடம்போக அவளுக்கு மனச்சம்மதம் வந்து விட்டது. நாயகனை காண்பது தான் அவளுக்கு முதல் வேலை. வெட்கம், கூச்சம், அதற்குப்பின்புதான் என்று அவளுக்கு பட்டுவிட்டது.

* * *

“பட்டகாலிலே படும், கெட்டகுடியே கெடும்” என்ற பழமொழியின் உண்மையை அறியாதவர் ஒருவருமில்லை. கஷ்டம்வந்தால் எல்லாம் ஒன்றாய்த்தான் சேர்ந்துவரும். கடவுள் நல்லவர்களை எல்லாம் பரீக்ஷிக்க முயலுவதின் ஸ்வபாவம்தான் இதுவும்.

* * *

வெள்ளையனின்னமொரு ஐம்பது ரூபாய்க் கொடுத்தான் “அடே இதை வண்டிகாரனுக்குக் கொடுத்து ரயில்வண்டி போனபிறகு வண்டியை கும்பகோணம் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகச் சொல்லி இந்த பணத்தைக் கொடு” என்று வெள்ளையன் சொன்னான். “அப்படியே சாமி” என்றான் பாட்ராசாரியின் சேவகனும்.

* * *

மனதில் எப்போது கவலை அதிகப்படுகிறதோ அப்பொழுதுதான் நமக்குத் தடங்கலும் அதிகமாவதும். கஷ்டமடையும் சமயங்களில்தான் நமக்கின்னமும் அதிக கஷ்டங்களுண்டாவதும். நம்மை பரீக்ஷித்து நமது குணத்தைப் பிரகாசம் செய்வதற்குத்தான் இந்த கஷ்டங்களெல்லாம் நம்மை பாதிக்கிறது. இக்கஷ்டங்களை லக்ஷியம் செய்யாமல் பெருமை அடைவதில்தான் நமது தருமத்தின் நிலைமை விளங்கும்.

* * *

வண்டி வருவதற்கு முன் ரயில்போய் விட்டது. ‘அம்மா! மறுபடியும் நீங்கள் கிராமம் போவதென்றால் மிகக்கஷ்டம், இங்கேயே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் ஸத்திரம் இருக்கிறது. அங்கு உங்களுக்கு இடம் வாங்கித் தருகிறேன். அவ்விடத்திலிருந்து பிற்பாடு ராத்திரிவண்டியில் போகலாம் இப்பொழுதே கிட்டதட்ட ஆறுமணி ஆய்விட்டது. ரயிலும் எட்டுமணிக்கு வந்துவிடும். நீங்கள் அந்த வண்டியில் போகலாம்” என்றான் பாட்ராசாரியன் சேவகனும். “இன்றைக்கு அவர்விட்டவழி இதுதான்;— ஸரி—ஆகட்டும்” என்றாள் சுகுணவல்லியும்.

* * *

கீழ்மை இவ்வளவுதான் செய்யும் என்று ஒருவராலும் சொல்ல முடியாது. எவ்வளவு அதிகமாக கீழ்மை வளருமோ அவ்வளவு நிறைவோடு பெருமை விளங்கும். ஒரே சமயத்தில் இரண்டையும் காண நேர்ந்திட்டால் கீழ்மையின் குணம் பெருமையின் ஸ்வபாவத்தை எடுத்துக்காட்டும்.

* * *

சத்திரத்தில் ஒரு அறையை வாங்கிக் கொடுத்தனன். அதில் பெட்டிமுதலிய மூட்டைகளை வைத்துக் கொண்டிருந்தாள் ஸுகுணவல்லி. “அம்மா! இவ்விடம் நன்றாகவில்லை. நீங்கள் மேல் மாடியில் போகலாம். அங்குயாருமில்லை. நன்றாகக் காற்றுவாங்கலா” மென்றான் சேவகனும். “ஸரிதான் அங்கிருக்க—லாம்” என்றாள் சுகுணவல்லியும். அங்கவளோடு ஒரு கால்மணிநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் பின் இறங்கி வரும்போது மாடியினின்று கீழ்க்கு வரும் கதவை தாழிட்டு வந்து விட்டான்.

* * *

கொடுமையின் சுபாவம் இதுதானா: இதற்கு மேலுமுண்டா? அந்த ராத்திரியில் கணவனையே நினைத்துக்கொண்டு இருந்ததாலன்றி அவளுக்கு எப்படி பயம் தோன்றாது இருக்கும்? மனம் கணவன் ஒருவன்மேல் சென்றதாலல்லவா மற்றொன்றின் மேலும் செல்லவில்லை! கருத்தொருமித்துவிட்டால் வெளியிலிருக்கும் பிரபஞ்சமே ஒன்று மில்லாதது போல் தோன்றிவிடுகிறது. இதுதான் பத்தினிப் பெண்ணின் ஸ்வபாவம். அவளுக்கு கணவன் ஒருவன்தான் பிரபஞ்சமாயிருக்கிறான். அதில் வாழ்பவள் அவள் ஒருவள்தான். இவ்வாழ்வை தடுக்க யார் வந்தாலும் அவர் அழிவடையாமலிருக்க முடியாது.

* * *

துற்நாற்றத்தில் வாழ்பவர்களுக்கு அந்நாற்றம் நாற்றமாகத் தோன்றுதலில்லை. அழுக்கில் வாழும் தவளை அதை அமிர்தம் ஆக எண்ணுகிறது. கழிக்கப்

பட்டவைகளைத் தின்கிறப்பன்றியும் அப்படித்தான் எண்ணுகிறது. கடைசியாக பன்றியிடைப்பட்ட கன்றும் மலந்தின்னுமென்று கேட்டதில்லையா? துஷ்ட கர்மங்களை செய்வதிலேயே பிரவர்த்திப்பவற்கு அதைவிட்டு வாழமுடியாது. அது அவருடலொழிந்தால் அல்லாமல் முடியாது. இது ஸத்தியமான மொழி.

*  *  *

சுகுணவல்லி உட்கார்ந்திருக்கும் தாழ்வாரத்தில் ஒரு அறை உண்டு. சேவகன் கதவை தாழிட்ட ஓசைக்கேட்டதும் இந்த அறையைத் திறந்துக்கொண்டு ஒருவன் வெளிவந்தான். சுகுணவல்லியைப் பார்த்தான். நீயாரென்று கேட்டான். பதில் ஒன்றுமில்லை. பலமுறையும் கேட்டான். கடைசியாக சுகுணவல்லி தன் விவரமெல்லாம் சொல்லி, தான் வந்த காரியத்தையும் சொன்னாள்.

*  *  *

ஸ்வபாவத்தில் நல்லவர்களுக்கு பயமதிகமென்று நூல்களில் சொல்லப்படுகின்றது, "எது சொன்னால் தப்போ அல்லது சரியோ? எது சொன்னால் நம்மை பொல்லாதவன், பாதகன் என்று சொல்வார்களோ? எதைச்செய்தால் சரியல்லவென்று சொல்வார்களோ? இதைசொல்லலாமோ? கூடாதோ?—" இவை முதலாகிய எண்ணங்கள் நல்ல எண்ணமுடையவர் மனதைக் குழப்பிவிடும். ஆனால் இவ்வெண்ணங்கள் கெட்ட நடத்தை உடையவர்களுடைய இரும்பு போன்ற மனதில் பாய்வதுகூட கஷ்டம். பாய்வதற்கு முன்னமே உடைந்து போகும். கொடுங்குணத்திற்கு தானென்ற அஹங்காரமும், கோபமும் தைரியமும் முக்கிய நட்பினங்களாக இருக்கின்றன. வாய்ப்பதட்டம் கெட்டவர்களோடு கூடவே அவதாரமானது மனக்கூச்சமில்லாமலிருப்பதே அதன் குணம்.

*  *  *

சுகுணவல்லி சொன்னத்தைக் கேட்டான். "அஃகஃக! அப்படியா செய்தி! அது ஒன்றுங்கிடையாது. உன் கணவனுக் குடம்பொன்றுமில்லை. நான்தான் உன்னைத்தருவித்தேன். யான் வெள்ளைய நாடான். உனக்கு பன்னிருயிரம் ரூபாய்த்தருவேன். உன் ஜன்மத்தில் இவ்வளவு பணம் அடையமுடியாது. சீ! உன்கணவன் இன்றைக்கெல்லா முக்கி முக்கி ஸம்பாதித்தாலும் மாதத்திற்கு முப்பதிற்கு மேலாகாது. ஆனால் நான் கொடுக்கும் பணத்தை கொண்டு என்னோடு இன்று இருந்து விட்டுபோகலாம். இதனால் ஒன்றும் தோஷமில்லை. உம்மவர் இந்தமாதரி என்னிடம் எத்தனைபேர் வரவில்லை. இதனால் ஒன்றும் தோஷமில்லை" என்று வெள்ளையன் சொன்னான்.

*  *  *

இக்கதையைப் படிப்பவர்களே! சுகுணவல்லியுடைய நிலைமையில் இருந்தால் நீங்களென்ன செய்வீர்கள். பெண்களுக்கு மானத்தைக் காட்டிலும் சிறந்தபொருளும் உண்டா? அதை இழக்கும்படி நேர்ந்துவிட்டால் அவர்கள் என்ன செய்வார்கள்? நீங்கள் தான் சொல்லுங்கள்! பிராணனை விடுவார்கள் என்றுதான் நீங்கள்பதில் சொல்லுவீர்கள் அல்லவா? அது ஒரு பெருமை ஆகாது. அந்த கஷ்ட நிலைமையிலிருந்து தன் மானத்தையும் பிராணனையும் காப்பாற்றிக்கொண்டு வெளிக்கு வருபவள் தான் பதிவிரதை என்கிற பட்டமடைய முடியும். வீணில் உயிரைச்சேதம் செய்வதில் பிரயோஜனம் என்ன?

*  *  *

"இனி தாமஸம் செய்வதில் உபயோகமில்லை. வாக்கால் மானமிழந்தாலும் பரவாயில்லை. உடலாலென் பதிவிரத்யத்தை ஒரு நாளுமிழக்கமாட்டேன். என்கணவனொருவனன்றி மற்றொருவன் என்னைத் தீண்ட முடியாது. வாயால் பதிவிரத்யம்போனால் போகட்டும். எனக்கு மானம் போகாது காத்துக் கொள்வதுதான் இப்போது வேலை" என்று மனதில் நினைத்தாள் சுகுணவல்லி.

*  *  *

"என்னை இதற்காக இவ்வளவு மனப்பிரயாசைப் படுத்தித் தருவிப்பது உமக்கழகாயிருக்கின்றதா? எனக்கிவ் விஷயத்தைப்பற்றி முன்னமே சொல்லியிருந்தாலும் வருவதாயிருந்தால் அதற்கு தகுந்த மாதிரி வந்திருக்கமாட்டேனா? இப்பொழுது நான் வரமாட்டேன் என்று சொன்னால் என்னை பலாத்காரம்செய்ய முயலமாட்டீரா? ஆனதினால் எனக்கு வேறுவழி எது" என்றாள் சுகுணவல்லி. மஹா சந்தோஷம் கொண்டான் வெள்ளையன் சிருங்கார வார்த்தைகளவன்வாயி லதிகரித்தன. ஆயினும் பலனில்லை.

*  *  *

அவன்மேல் புத்தி அழுந்திவிட்டால் அவனைத் தவிர வேறெங்கு செல்லும். வாயால் எதுமொழிந்தபோதிலும், மனம் அவனையே நோக்கிக்கொண்டிருக்கும். அவனை ஆநந்தப்படுத்துவதையே தனது பெருமையாக பாராட்டும் ஒவ்வொரு மொழியிலும் இது தான் மனவின் அந்தரியாமக எண்ணம். இந்த எண்ணத்தை அவர்களுடைய ஒவ்வொரு

செயலிலும் காணலாம். வெளியிருப்பவர்களுக்கிது தெரிகிறதில்லை.

* * *

“என்னை மாத்திரம் பலாத்கரிப்பதில் என்னப் பிரயோசனம். நான் காலை எட்டு மணிக்கு சாப்பிட்டவள். இன்னம் கொஞ்சமேனும் உணவு கொள்ளவில்லை. என் தலை வலிக்கிறது. காது அடைத்துப்போகிறது. என் பசி பொறுக்க முடியவில்லை. நீங்களும் எனக்கின்னாரென்று தெரியும்! கொஞ்சம் இளநீரேனும் வாங்கித்தருவீராகில் அதைக்குடித்துவிட்டு விடாய்த்தீர்ந்ததும் மற்றது பார்க்கலாம். நான் பார்ப்பினி. ஒருவர் தொட்டதை சாப்பிடமாட்டேன். இளநீர்காயும் ஒரு கத்தியும் கொண்டுவந்தால் வெட்டி நீரை உட்கொள்ளுவேன்” என்றாள் சுகுணவல்லி. வெள்ளையன் மஹா சந்தோஷத்தோடு கொண்டுவரச்சென்றான்

* * *

பதிவிரதைக்காசைப்பொருள் மானமும் கணவனும் தான். இவ்விரண்டும் ஒன்றோடொன்று பிணைந்து இருக்கின்றன. ஒன்றை அவள் ஒழிந்தால் மற்றொன்றவளிடத்தில் இருக்கமுடியாது. இதை விரித்துச்சொல்வது நன்றாயிருக்காது. தனது கற்பழிய நேரிடுங்காலங்களில் புத்தி நிலை தடுமாறாது, யுத்தியினால் காரியங்களை நடத்தி மானத்தைக் காப்பாற்றிக்கொள்வதில்தான் பதிவிரதை பெருமை அடைகிறாள்.

* * *

இரண்டிளநீர்க்காயும் கத்தியும் கொண்டுவந்தான். கெட்டவன் தனது அழிவிற்குத் தானே வழிதேடிக் கொள்கிறான். தன்னாலேயே தன்னை அழித்துக் கொள்கிறான். முதலில் எப்பொழுதும் தன் இஷ்டமெல்லாம் நடக்கிறதென்ற மயக்கத்தில் விழுந்து, கடைசியில் அம்மயக்கத்தினால் அஹங்காரமும் உத்ஸாகமும் அடைந்து, தனக்கு வரும் அழிவை உண்டாக்கும் பொருளைத் தன்னிடத்துடையவனாகி இருந்தாலும், அவனுடைய கர்வமும், உள்மதமும் தனக்கது அழிவையுண்டாக்குமென்ற எண்ணம் தோன்றாமலிருக்கச் செய்து விடுகின்றன.

* * *

இளநீரை வெட்டி ஒன்றை குடித்ததாக பாவனை செய்தாள் சுகுணவல்லி. மற்றொன்றை வெள்ளையனை அருந்தச் சொன்னாள் அவன் “எனக்கு வேண்டாம்” என்றான். “என்னை பலாத்காரம் நீங்கள் மாத்திரம் செய்யலாம்; உங்களுக்கு நானிணங்க வேண்டும். நாமிருவரும் உள்ளத்தில் ஒன்றானதாக உங்களுக்கேற்பட்டபோது நான் சொல்லியதை நீங்கள் கேட்காதிருப்பது உங்களுக்குதான் அழகா?” என்றாள் சுகுணவல்லி. “ஸரிதான் ஆகட்டும் உட்கொள்ளுகிறேன்” என்றான் வெள்ளையன்.

* * *

மனைவிக்குத்தன் கணவன்மேல் கொண்ட அன்பு அவள் உடம்பு முழுதும் பிரவஹித்துக் கொண்டு தானிருக்கும். அவள் மனது கணவனிடத்து கலந்து விட்டால் இவ்வன்பெல்லாம் ஒன்றாய்த்திரண்டு வீரியமாகக் கிளம்பிவிடும். அந்தச் சமயத்தில் தனது மானம் போக நேரிடும்படி செய்ய ஒரு நிமித்த மேதேனு முண்டாயிடில், அவ்வீரியம் வீரத்வை உண்டாக்கித் தன் மானத்தை கெடுக்க வரு நிமித்தத்தை அழித்து விடுவது, மனைவி கணவனிடத்துக் கொண்ட அன்பை வெளிக்காட்டுகிறது. இதுதான் அவள் கணவனோடு மனங்கலந்தாள் என்பதை விளக்கும் குறியாக வெளியாருக்குத்தெரிவது.

* * *

வெள்ளையன் இளநீர்குடிக்க முகம் நிமிர்ந்தான். ‘சிவிங்’ கென்று கத்தியை ஓங்கி அவன் தலையை துண்டித்துவிட்டு ஓ! என்றலறி கீழ்விழுந்து மூர்ச்சை ஆய்விட்டாள் சுகுணவல்லி. கூக்குரல் கேட்டு கதவை உடைத்து போலிசார் மேல் வந்து இவளை எழுப்பி என்ன என்று கேட்டார்கள். அவள் நடந்ததெல்லாம் சொல்லி “யான் என் மானத்தை காப்பாற்றிக்கொண்டு விட்டேன். என் உடம்பை யார் என்னசெய்து கொண்டாலும் செய்து கொள்ளட்டும். என் தர்மத்தை செய்து விட்டேன்.’ என்று சொல்லிவிட்டு வாய்த்திரவாது நின்றாள்.

* * *

கணவனை தரிவித்தனர். அவனும் வந்தான். தந்தி அடிக்கவில்லை என்றனன். தந்தியை எடுத்துக்கொடுத்தனள் சுகுணவல்லியும். அதைப் பார்த்தான். அதில் தந்தி ‘நெம்பரு’ மில்லை. தந்திக்கணக்கன் கைச்சாட்டுமில்லை. இதை போலிஸார் விசாரித்து எழுதிக்கொண்டுபோயினர். ஆசாரியன் சேவகன் பயந்து உள்ளதை உள்ளவாறு சொல்லிவிட்டான். விசாரணை கும்பகோணத்தில் நடந்தது. சேவகன் தந்திகுமாஸ்தா, தந்தி சேவகன், வண்டிக்காரன், ஒவ்வொருவரும் இரண்டு வருடம் கடுங்காவலில் வைக்கப்பட்டார். சுகுணவல்லிக்கு ராஜாங்கத்தில் இரு நூறு ரூபாய் பரிசு அளிக்கப்பட்டது—அவளுடைய மனோ தைரியத்திற்காக.—என்பது சில வருஷங்களுக்கு முன்பு நடந்த சங்கதி.

* * *

இக்காலத்திலும் பதிவிரதைகளுண்டோ என்று ஸந்தேகங் கொண்டவர்களே! சற்றுப் பாருங்கள். சுகுணவல்லி இன்னமிருந்துக்கொண்டு தானிருக்கிறாள். அவளை மனைவியாகப் படைத்தவனல்லவா பாக்கியவான்.

* * *

வீரியமென்பது வாயாடித்தன்மை என்று இக்காலத்தின் எத்தனை பெண்டீர் எக்கங்கொள்ளவில்லை. அது வீரியமாகாது. அது அஹங்காரம்தான் ஆகும். அந்த குணத்தை விட்டுவிட்டு கற்புநிலை தப்பாமல், கணவனையே தமக்கு முதல் தெய்வமாகக்கொண்டு வாழும் மனைவியர் ஒவ்வொருவரும் சுகுணவல்லியின் ஸ்வரூபம் தான். ஆத்மாவையே தன் கணவனுக்கீந்த சுகுணவல்லியாக நாங்களுமிருப்போமென்று எவ்வெவர் மனப்பூர்வகமாக எண்ணி அம்மாதிரி நடக்கிறார்களோ அவர்கள்தான் பதிவிரதைகள்.

வா, சேஷகிரி சாஸ்திரி.

# சிறுவர்க்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

நல்ல வேஷத்தால் விளையும் நன்மைகள்.— ஓர் நாளிரவில் ஒரு அரண்மனையுட்புகுந்த திருடனொருவன், அரசன் தன் பட்டஸ்திரீயை நோக்கி, "நான் எனது பெண்ணை நம்மூர் ஆற்றோரத்தில் வசிக்கும் பைராகிகளுள் ஒருவனுக்குக் கொடுக்க வெண்ணுகிறேன்" என்று சொல்லிக் கொண்டிருப்பதை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தான் உடனே "நமக்கு நல்ல அதிர்ஷ்டம் நேர்ந்தது. நான் நாளைசென்று பைராகிவேஷம் போட்டுக் கொண்டு பைராகிகளின் மத்தியில் உட்காருகிறேன். ஒருவேளை அரசன் பெண் எனக்குக் கிடைத்தாலும் கிடைக்கும்" என்று எண்ணமிட ஆரம்பித்தான். தான் எண்ணிய பிரகாரம் மறு நாள் செய்ய, அரசன் சேவகர்கள் அவிடம் வந்து அரசன் பெண்ணை பாணிக்கிரஹணம் செய்து கொள்ள வேண்டுமென்று நயவார்த்தைகள்சொல்லியும் பைராகிகள் ஒருவரும் அதற்குச் சம்மதிக்கவில்லை. கடைசியாகச் சேவகர்கள் பைராகி வேஷம்பூண்ட திருடனிடம் வந்து விண்ணப்பம் செய்து கொண்டார்கள். திருடனோ மௌனமாயிருந்து விட்டான். சேவகர்கள் அரசனிடம் சென்று ஒரு யௌவனபைராகி இருப்பதாகவும் அவனைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி பலவந்தம் செய்தால் செய்யலாமென்றும் வேறொருவரும் அதற்குச் சம்மதிக்க வில்லையென்றும் அறிவித்தார்கள். ஆகவே அரசனே நேரே சென்று, தன் பெண்ணைப பாணிக்கிரகணம் செய்து கொண்டு தன்னைக் கௌரவப்படுத்த வேண்டுமென்று அந்த பைராகியை கெஞ்ச வேண்டியதாக நேரிட்டது. அரசன் நேரேவந்தமாத்திரத்தில் திருடன்மனம் சற்று இளகிப் பின்வருமாறு ஆலோசிக்கலானான். "நான் வேஷம் பூண்டமாத்திரத்தில் என்ன ஆச்சரியம். அரசனே நேரேவந்து என்காலில் விழுகிறான். நான் நிஜமான பைராகியாய்விட்டால் இன்னும் என்னென்ன அதிக வைபவங்கள் எனக்குச் சித்திக்குமென்றுயாரால் எடுத்துரைக்கமுடியும்" இந்த எண்ணங்கள் தான் கள்ள வேஷம்பூண்டு கல்யாணம் செய்து கொள்வதை விட்டு, தன்நடத்தையை சீர்திருத்தி நிஜ பைராகியாக வேண்டுவதற்கு ஆன முயற்சியைச் செய்யும்படி அவனது மனதை அவ்வளவு மாற்றியது. அவன் பின்பு கல்யாணம் செய்து கொள்ளாமலே கடைசியில் சிறந்த மகான்களுள் ஒருவனானான். ஆகையால் நல்லவர்களைப்போல் நடித்தால் வரவர உண்மையான நல்லகுணம் நம்மிடம்வந்து பொருந்தும்.

கொள்வதிற் கொடுத்தலே நன்று.—ஒருநாள் ஒரு உபாத்தியாயரும், அவர் சீடனும் வெளியில் உலாவித் திரியப்போன காலத்தில் ஒரு வயலுக் கருகிலுள்ள மரத்தில் பழையசட்டை ஒன்று தொங்கிக்கொண்டும், மரத்தடியில் பாதரட்சை வைத்திருப்பதும் கண்டார்கள். சீடன் குருவைநோக்கி "ஐயா! இவ்விரண்டு பாதரட்சைகளும் அதோ வயலில் வேலைசெய்துகொண் டிருப்பவனுடையவை என்பதிற் சந்தேகமில்லை. அவைகளை ஒளித்துவைத்து, வேலிப்புறத்து நாம் மறைந்திருந்து, பாதரட்சைகள் காணமற்போனதை நினைத்து வேலையாள் திகைத்து நிற்பதைக்கண்டு களிப்போமாக" என்றான். இக்கடுஞ்சொற்களைக் கேட்டு மனம்நொந்த குரு "பொருளிழந்து மனம் பதைப்பதைப் பார்த்துச் சந்தோஷித்தலைவிட வேலைக்காரனுடைய பாதரட்சைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் ரூபாயை வைத்துவிட்டு, நாம் செடிமறைவில் நின்று வேலைக்காரனுடைய பூரிப்பைப் பார்ப்போம்" என்றார். சீடனும் குரு சொன்னதே சரியென்று ஒத்துக்கொண்டு, ஒவ்வோர் ரூபாயை வைத்துவிட்டு இரண்டுபேரும் ஒளித்துக்கொண் டிருந்தார்கள். வேலையானவுடனே வயலிலிருந்து வேலைக்காரன் திரும்பிவந்து சட்டையை மாட்டிக்கொண்டு, ஒரு காலில் ஒருசெருப்பை மாட்டவே அதற்குள் ஏதோ கெட்டியாய் அகப்பட்டது. அதைக் கையால் எடுத்துப் பார்த்தவுடன் ஒருரூபாயாக விருந்தது. வேலைக்காரன் மிகுந்த ஆச்சரியத்தை அடைந்து அதைப் பையில் போட்டுக்கொண்டான். பிறகு மற்றோர் செருப்பில் இன்னோர் காலை வைக்க அதிலும் இன்னம் ஒருரூபாய் இருந்தது. அதைக் கையிலெடுத்து உடனே மு[illegible]விட்டுக்கொண்டு பரமபிதாவை நினைத்து வணங்கித் தன் ஏழைமையை அறிந்து சமயத்தில் உதவிசெய்ததற்காக நன்றிபாராட்டிக் கண்ணுங்கண்ணீருமாக நின்றான். இந்தக்காட்சியைக் கண்ணுற்ற சீடன் குருவைநோக்கி "என் சிற்றறிவினால் பிறர் துக்கத்தைப் பாக்க விரும்பினேன். தங்களது கிருபையினால் பிறர் மனங்களிக்கச் செய்தலே உத்தமமான தர்மமென்று அறிந்தேன். இந்த நற்போதனையை உயிருள்ளமட்டும் மறக்கமாட்டேன். "கொள்வதினும் கொடுத்தலே நலமானது" என்று இளகின மனத்தோடு கூறினான்.

# விசேஷ வர்த்தமானங்கள்

## GENERAL NEWS

நமது தேசத்திய மோட்டார் வண்டிகள்.—மோட்டூர் வண்டிகள்வந்தபின்புநமது தேசத்தில் குதிரைகளுக்கு எவ்வளவு வேலையில்லாமல் செய்துவிட்டன என்பது எல்லோரும் அறிந்திருக்கமாட்டார்கள் இக்காலத்தில் சற்றேரக்குறைய குதிரை வாங்குவதில் செலவாகும் பணம் குறைந்துவிட்டது. மோட்டார் வண்டிகள் வாங்கச்செலவிடும் பணம் குதிரை வாங்கச்செலவிடும் பணத்தைவிட இரண்டு மடங்காகிவிட்டது. இராணுவ விஷயத்திற்கு வாங்கும் குதிரைகள் மாத்திரம் குறையவில்லை, ஆகையால் ஸாதாரண ஜனங்கள் வாங்கும் வண்டி இழுக்கும் குதிரைகளிலேயே இக்குறைவு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று தோற்றுகிறது.

*  *  *

கைத்தொழில் பயிற்சி.—அமெரிக்காவில் உள்ள நியூயார்க் என்ற நகரத்தில் கைத்தொழில் பயிற்சிக்கு ஓர்சிறந்த ஒழுங்கு ஏற்பட்டிருக்கிறது. அதன்படி பட்டணம் தாலுகா முதலிய விடங்களில் உள்ள பள்ளிக்கூடங்களோடு கைத்தொழிற் சாலைகள் ஏற்படுத்தலாம். அதில் பிரதம பாடசாலைகளில் படித்துத் தேரிய மாணக்கர்கள் கைதொழில்கள் கற்றுக்கொள்ளவேண்டும். அங்குள்ளவித்யாபிவிருத்திஸங்கத்தில் கைத்தொழிலில் தேர்ந்தவர்கள் ஐந்து பேர்கள் அங்கத்தினராக இடமுண்டு. அந்தஸங்கத்திலிருந்து கைத்தொழில் விஷயத்தில் என்னென்ன சீர்திருத்தங்கள் முதலியன செய்யவேண்டுமோ அவ்வளவையும் அவர்கள் அதிகாரதோரணையோடு செய்யலாம். கெவர்ன்மெண்டார் இதற்குவேண்டிய திரவ்ய ஸஹாயமும் செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இம்மாதிரியான ஒழுங்கு நம்மூரில் ஏற்பட்டாலன்றோ கைத்தொழில் அபிவிருத்தியாகும் !

*  *  *

மின்சாரயந்திரங்கள்.—1906-1907-இல் நமது தேசத்தில் ரூ 5577877 விலையுள்ள மின்சாரயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டனவாம். இதற்காக ரூ 44,51,506 ஆங்கில அரசாட்சிகளுக்கு உட்பட்ட இடங்களுக்கும், ரூ 1126371 மற்றையதேசங்களுக்கும் அனுப்பப்பட்டனவாம். இவ்வளவு ரூபாய்களுக்குவாங்கப்பட்டயந்திரங்கள் பின்வருமாறு நமது தேசத்தில் உபயோகிக்கப்பட்டனவாம்,

| | | |
|---|---|---|
| பங்காளத்தில் | ரூ 18,40,549 | யந்திரங்களும் |
| பம்பாயில் | ரூ 19,48,009 | ,, |
| பர்மாவில் | ரூ 8,46,722 | ,, |
| சென்னையில் | ரூ 7,99,489 | ,, |
| ஸிந்து தேசத்தில் | ரூ 1,43,108 | ,, |

உபயோகிக்கப்பட்டன

*  *  *

கரும்பிலிருந்து உண்டாகும்மெழுகு.—சர்க்கரை உண்டாகும் கைத்தொழில் மிகுந்த லாபத்தை உண்டாக்கும் படியான ஓர்விஷயம் ஒன்றுகண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதனால் கரும்பிலிருந்து சர்க்கரை உண்டாக்குங்கால் வீணாய்ப்போகும்பாகங்களை இவ்வாறு உபயோகப்படுத்தி மேலானலாபம் அடையலாம் என்பது விளங்கும். வீணாகும் ஒரு டன் கரும்பின் சக்கையிலிருந்து 14-ஔன்ஸ் தேனீ மெழுக்குப் போன்ற மெழுக்கு ஒன்று எடுக்கமுடியுமாம். இது மெழுகு உபயோகப்படுவதுபோல உபயோகப்படுமாம். இப்பொழுது மெழுகிருக்கும்விலையை நோக்கில் இந்த மெழுகெடுக்கும் வழியை சீர்த்திருத்தி ஏராளமாக மெழுக் கெடுத்து வந்தால் நல்ல லாபம் கிடைக்கும் என்பதற்கு என்ன ஸந்தேகம் ?

*  *  *

ஸோப்பிலிருந்து உண்டாகும் ஸிம்மன்ட்.—பெரியஸோப் உண்டாகும் ஒரு சாலையிலிருந்து பின்வரும் அற்புத விஷயம் வெளியாகின்றது, ஸோப் உண்டாகுங்கால் அடியில் ஓர்வித கசடுகள் தங்குகின்றனவாம். அதில் ஏதோ ஒருபாகம் இதுவரையில் உபயோகப்பட்டு வந்ததாம். மிகுந்த ஏராளமான பாகம் உபயோகம் அற்றதாகத்தள்ளப்பட்டு இதுவரையில் வந்தது. இப்பொழுது இதிலிருந்து ஸிம்மன்ட் உண்டாக்குவதற்கு வேண்டிய அவசியமான வஸ்துக்களை உண்டாக்கலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டது. ஆகையால் சிற்சிலவிடங்களில் இப்பொழுது ஸோப்உண்டாக்கும் சாலைகளோடு ஸிம்மன்ட் சாலைகள் சேர்த்து நடத்தப்பட்டு வருகின்றன.

---

### ஓர் முக்கிய அபிப்பிராயம்.

சென்னை, பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ம-ள-ள-ஸ்ரீ வே. சாமிநாதய்யரவர்கள்:— "சிலமாதங்களாக வெளிவரும் விவேகபோதினி என்னும் பத்திரிகையிற் சில பகுதிகளைப் படித்துப்பார்த்தேன். மதஸம்பந்தமான விஷயங்களும, நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளும், புதிய நாடகங்களும் சில மொழிபெயர்ப்புக்களும், தற்காலத்திற்கேற்ற நாகரீக விஷயங்களும் இப்பத்திரிகையில் மிக எளியநடையில் எழுதப்பெற்றிருக்கின்றன; சிறுவர்களும் பெண்பாலாரும் இதனால், பல விஷயங்களையும் வருத்தமின்றித் தெரிந்துகொள்ளலாம்.

தமிழ்ப் பாஷாபிமானிகளாகிய பிரபுக்கள் இதனை ஆதரித்து, இதைப் பிரசுரஞ்செய்துவரும் ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியாருக்கு ஊக்கம் அளிப்பார்களென்று நம்புகிறேன்."

# புத்தகக் குறிப்பு

## REVIEW OF BOOKS

பகவத்கீதை வெண்பா —(பந்தர் ஹிந்து ஹைஸ்கூல் பிரதம உபாத்தியாயர் ம-ா-ா-ஸ்ரீ எஸ். முத்து அய்யர். B.A, அவர்களால் இயற்றப்பட்டது. விலை ரூ. 1.) இப்புத்தகத்தில் கீதை சுலோகம் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொருவெண்பாவீதம் கீதாசாஸ்திரம் முழுவதும் எழுதப்பட்டிருக்கிறது. ஸாதாரண தமிழ்ஞானம் உடையவருக்குக்கூட இப்பாட்டுகள் எளிதில் விளங்கும்படியான நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. இவைகளை பொருள்படுத்துவதில் ஸஹாயமாக இருக்கும்படி ஒவ்வொருவெண்பா அடியிலும் அதற்குவேண்டிய அரும்பதவுரை அமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அத்தியாயத்தில் அடங்கியிருக்கும் விஷயங்களை எளிதில் அறியும் பொருட்டு அதன் முன்பு ஒவ்வொரு பொருளடக்கமும் எழுதப்பட்டிருக்கிறது ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் தகுந்தபடி காப்புச் செய்யுளையும் பாயிரச்செய்யுளையும் இந்நூலாசிரியர் வெகு அழகாக அமைத்துளர் இவ்வளவு குணங்கள் அமைந்த புஸ்தகத்தை தமிழில் அபிருசி உடையோர் எல்லோரும் வாங்கி வாசித்தல் அவசியம். மேலும் இப்புத்தகம் சிலவகுப்பிற்கு மதவிஷய பாடபுத்தகமாகவும் வைக்கத்தக்கது. கூடிய சீக்கிரத்தில் இப்புத்தகம் மேலான நிலமைக்கு வரும் என்று நம்புகிறோம்.

* * *

அமலாதித்யன்.--(ம-ா-ா-ஸ்ரீ ப ஸம்பந்த முதலியார் அவர்களால் இயற்றப்பட்டது. ரூ-1). இதில் ஆங்கில மஹாகவியாகிய ஷேக்ஸ்பீயர் எழுதியஹாம்லெத் என்ற நாடகம் நாடக ரூபமாகவே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. ஷேக்ஸ்பீயர் எழுதிய நாடகங்களுக்குள் ஹாம்லத் ஒன்றில் தான் அவரது மேன்மையும் சிறப்பும் நன்றாக வெளிவந்திருக்கின்றன. மற்றைய நாடகங்களில் ஷேக்ஸ்பீயரது கவிதைச்சிறப்பும் அவரது கற்பனாசக்தியும் வெளியாகின்றது. ஹாம்லத்திலோ, அவரது சிற்றின்ப வெறுப்பும், உலக விஷயங்களை ஆழ்ந்து விசாரணைசெய்யும் திறமும், உலகம் அநித்யம் என்ற ஞானமும் வெளியாகின்றன. அவரது கற்பனாசக்தி எல்லாம் மேலானதாயும் உண்மையாயும் உள்ள விஷயங்களில் இந்த ஒரு நாடகத்தில்தான் உபயோகமாயிருக்கிறது. இச்சிறந்த நாடகத்தின் நடை அதிக அற்புதமானது. அநேக ஆங்கிலப்பழமொழிகளும் இதனுள் ஆங்காங்கு அழகாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் இந்த நாடகத்தின் ரஸம் கெடாது வேறு பாஷையில் மொழி பெயர்ப்பது மிகக் கஷ்டமான வேலை. ஸம்பந்த முதலியாரைப் போல நாடக விஷயங்களிலும் பாஷாஞானத்திலும் தேர்ச்சி அடைந்தவரே இத்தொழிலைச் செய்யவல்லவர்கள். முதலியார் அவர்கள் நாடக விஷயங்களில் ஒன்றைக்கூடவிடாது பாஷைநடை, பொருள் விளக்கம் முதலியவைகளை கருத்துள் வைத்துக்கொண்டே இந்தமொழிபெயர்ப்பை செய்திருக்கிறார். ஆங்கிலம் அறியாதவர்களுக்கு இது சிறந்த ஞானத்தையும், ஆங்கிலம் அறிந்தவர்களுக்கு, அவர் மனதை ஷேக்ஸ்பீயரின் சிறப்பில் ஈடுபடும்படி செய்து, அடங்கா ஆனந்தத்தையும் விளைவிக்கும் என்பதற்கு ஐயமில்லை. ஆதலால் எல்லோரும் இந்த அரியநூலை வாங்கி வாசித்து மேன்மை அடைவார்கள் என்று நம்புகிறோம்.

* * *

அபிநயகீதங்கள்.—(பஞ்சவடி வேங்கடராமய்யர் அவர்களால் இயற்றப்பட்டது விலை அணா 3) இப்புத்தகத்தில் முதலில் சிறு நீதிக்கதைகள் எளிய தமிழில் எழுதப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றன் முடிவிலும் அக்கதையிலிருந்து வெளியாகும் நீதியை எடுத்துக்காட்டியிருக்கிறது இதற்குமேல் கதையில் வந்திருக்கும் விஷயங்களுக்குத் தக்கபடி அபிநயம் பிடித்துக் கருத்தை எளிதில் வெளியிடக்கூடிய பாட்டுகளை அமைக்கப்பட்டிருக்கின்றது. இப்புத்தகத்தின் பின்பாகத்தில் சிலபொருட் பாடங்கள் ஒழுங்காக எழுதப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றன் முடிவிலும் அதில் அடங்கியிருக்கும் விஷயங்களை எளிதில் ஞாபகம் வைத்துக் கொள்வதற்கு உதவியாக அழகியபாட்டுகள் எழுதப்பட்டிருக்கின்றன. இவைகள் மூலமாக சிறுவர்களுக்கு எளிதில் விஷயங்களைப் போதிக்கலாம். இதில் குறிப்பித்திருக்கிறபடி உபாத்தியாயர் ஒழுங்காகத் தம் பிள்ளைகளுக்கு கல்வி கற்பித்து வருவாராயின், பிள்ளைகளுக்கு கல்விகற்க வேண்டும் என்ற ஆவல் உண்டாகி விருத்தி அடைய அவர்கள் கூடிய சீக்கிரத்தில் நல்ல தேர்ச்சியை அடைவார்கள். ஆகையால் இப்புத்தகமும் இது போன்ற மற்றைய புத்தகங்களும் நமது பிரதமபாடசாலைகளில் ஏராளமாக உபயோகப்பட்டு வரவேண்டும் என்பது எங்கள் துணிபு.

நூதுவான பிராம்மணப் பெண்களின் விவாகம் சாஸ்திரீயமானது—இப்புத்தகம் நல்ல காகிதத்தில்அழகாக மெஸர்ஸ் ஜி. ஏ. நடேசன் அண்டு கம்பெனியாரால் பதிப்பிக்கப் பட்டிருக்கின்றது. இதைத்தவிர நம்மால் இப் புத்தகத்தைச் சிறப்பித்துக் கூறமுடியாது. இதில் அடங்கியிருக்கும் விஷயம் எல்லாராலும் அங்கீகரிக்கக்கூடிய விஷயம் அல்ல. இப்புத்தகம் நூதுவான பிராம்மணப் பெண்களின் விவாஹம் அசாஸ்திரீயமானது என்ற இக்காலத்தில் ஸ்தாபிக்கவேண்டிய முக்கிய விஷயத்தை ஐயம்திரிபற ஸ்தாபிக்க தூண்டுகோலாதலால் இது கோரகுணமைபுரியாவிடினும் மாறுகாளடைவில் நன்மை புரியும் என்று நாம் நம்புகிறோம். ஆதலால் தர்மசாஸ்திரஞானம் உடைய ஒவ்வொருபண்டிதரும் இப்புத்தகத்தை அவசியம் வாங்கி வாசிக்கவேண்டியது. அவர்களைத்தவிர மற்றைய எத்திறத்தாருக்கும் இவ்விஷயம் ஆனந்தத்தை விளைவிக்கும் என்று எமக்குத்தோற்றவில்லை.

---


வாங்குவதற்கு தாமதப்படாதே

## நீலகிரி யூகலிபிடஸ் ஆயல்

இது வயித்தியத்தில் தேர்ந்த பண்டிதரால் கண்டு பிடிக்கப்பட்டது.

இது தீர்க்கும் நோய்களாவன:—

எல்லாவித காயங்கள், வெட்டுகள், சகலவித வாயுரோகங்கள், பலவித தந்தவியாதிகள், ஜலதோஷம், தலைவலி, இருமல், தேள்கொட்டல் முதலான வியாதிகள் தீரும்.

இதன் உண்மை அறிய ஒருமுறை பரிட்சித்துப்பாருங்கள்.

| | |
|---|---|
| ஒரு அவுன்ஸ் கொண்ட புட்டி | 0—4—0 |
| ஒரு டஜன் புட்டி | 2–12—0 |
| 24 அவுன்ஸ்கொண்ட புட்டிஒன்று | 3—8—0 |
| தர்மாப் படை மருந்து | 0—4—0 |
| தர்மாப் பல்பொடி டின் ஒன்று | 0—2—6 |

பி. தர்மா அண்டு கோ,
சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.

---

பாதிவிலைக்குக் குறைப்பட்டிருக்கிறது.

## ராயல் வொண்டர் ஸோப்

ரோமஸம்ஹாரி:—இந்த ஸோப் தேகத்துக்கு யாதொரு கெடுதியும் உண்டுபண்ணுது. வலியும் இல்லை. ரோமங்களை உடனே ஸம்ஹாரம் செய்யும். மிகவும் கியாதிபெற்றது.

| | | |
|---|---|---|
| 6 ஸோப்புகள் அடங்கிய பெட்டி | 1-க்கு | 1-0-0 |
| 12 ஸோப்புகள் அடங்கிய பெட்டி | 1-க்கு | 2-0-0 |
| 3 டஜன் ஸோப்புகள் அடங்கிய | ,, ,, | 6-0-0 |

தபால் சார்ஜ் இல்லை.

ஏஜண்டுகள் தேவை.

THE ROYAL VICTORIA AGENCY,
Nadiad, *(Guzarat.)*

---

## ஜகத் பிரசித்தமான
## கோமல கேச வர்த்தினி
## THE WORLD RENOWNED
### KOMALA KESHA VARDHINI



ஜகத்பிரசித்தமான "கோமல கேசவர்த்தினி" என்னும் இச்சர்வோத்கிருஷ்டமான தைலம் அதிக மேன்மையை அடைந்திருப்பதென்பதற்கு யாதொரு சந்தேகமும் இல்லை. இத் தைலத்தை மூன்றுமுறை இறக்கி, தெளிவாயும், பரிசுத்தமாயும் சுவாசனையுடையதாயும் சாஸ்திரோக்தமாய் தயார் செய்யப்பட்டிருக்கின்றது.

எங்கள் "கோமல கேசவர்த்தினி" எண்ணெய்கூந்தல்களை சொகுசாயும், நீலமேகத்திற்கு ஒப்பாயும் நீளமாயும் வளரும்படி செய்யும். இதுவுமன்றி கூந்தல்களின் வேர்களை பலப்படுத்துவதிலும் பலவீனமான கூந்தல்களை புஷ்டிசெய்வதிலும், நரைத்த (வெள்ளை) கூந்தல்களை சுவச்சமான கருப்பு நிறத்துக்கு மாற்றுவதிலும், முரடான மயிர்களை மிருதுவாய் செய்வதிலும் தலையில் மயிர் உதிர்ந்துபோய் மறுபடியும் முளையாமல் நின்றுபோன இடங்களில் மறுபடியும் புதிதாய் மயிர் முளைக்கவைப்பதிலும், கூந்தல்கள் எப்பொழுதும் மோதிரம்போல் சுருட்டிக்கொண்டு இருக்கும்படியான அழகைக் காண்பிப்பதிலும், மயிர்களை உதிரவிடாமல் செய்வதிலும் பின்னும் சதா தலையில் சுவாசனையை உண்டாக்குவதாயும் இருக்கப்பட்ட எங்கள் "கோமல கேசவர்த்தினி" கூந்தல்வளர் தைலத்துக்குச் சமானம் இப்பிரபஞ்சத்தில் காணோம்.

இத்தைலம் பித்தத்தால் தலையின் சர்மத்தின் மேல் உண்டாகும் சுண்டுகளை போக்கடிப்பதுமன்றி அநேகவிதத்தால் உண்டாகும் தலைநோய், ஒற்றைத் தலைநோய், தலைசுத்தல், சமீபபார்வை முதலான சாலேஸ்வரங்கள், மனோவிகாரம், கண், தலை எரிச்சல், கண்ணில் எப்பொழுதும் நீர்வடிதல் மேற்கூறிய துர்குணங்களைப் போக்கடிப்பதுமன்றி தேகத்தில் இருக்கும் உஷ்ணத்தைப் போக்கடிப்பதில் எங்கள் எண்ணெய் விசேஷ பேர்பெற்றிருக்கிறது. 1 புட்டி தைலத்தை வரவழைத்து பரீக்ஷைசெய்து பார்த்தால் நீங்கள் எங்களுடைய "கோமலகேசவர்த்தினி தைலத்தை விடமாட்டீர்கள்.

விலை புட்டி 1-க்கு அணா 0—8—0.

ஒரே சமயத்தில் 12 புட்டி வாங்கிக்கொள்வோருக்கு ஒரு புட்டி இனாமாகக் கொடுக்கப்படும்.

நேப்பியர் அண்டு கோ,
26, மவுண்டுரோட், மதிராஸ்